Viber : 076 636 3378
பக்கங்கள் : பதினாறு + 16

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆவணி 21 ஞாயிற்றுக்கிழமை (06.09.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 262

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம் 1000/= + 300/= மட்டுமே

## முன்னணியில் இருந்து மணிவண்ணன் நீக்கம்

### கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் உத்தியோகபூர்வமாக நேற்று அறிவிப்பு



(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அடிப்படை உறுப்பினர் தகுதி நிலையிலிருந்து சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் இடைநிறுத்தப்பட்டுள்ளார் என்று அந்தக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நேற்று அறிவித்துள்ளார். 15



## புதையல் தோண்டிய பொலிஸ் உட்பட 8 பேர்

### வவுனியாவில் கைது

(வவுனியா)

வவுனியா, பூவரசங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அரபா நகர் பகுதியில் புதையல் தோண்ட முற்பட்ட 8 பேரை கைது செய்துள்ளதாக 15

## 15 பவுண் தங்க நகை கைதடியில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி கைதடிப் பகுதியில் 15 பவுண் நகை மற்றும் 30 ஆயிரம் ரூபாய் பணம் என்பன திருடப்பட்டுள்ளதாக சாவகச்சேரி பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்றுச் சனிக்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது. 15

## நிறுவனங்களை கட்டுப்படுத்த புதிய சட்டம்

(கொழும்பு)

இலங்கையின் தேசிய பாதுகாப்பு மற்றும் அரசியல் விவகாரங்களில் நேரடியாக தலையிட்டுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களை கட்டுப்படுத்துவதற்காக 15

### எங்கள் உண்மை வரலாற்றை இதுவரை பேச நாம் தவறிவிட்டோம்

# நெருக்குதலே பெரும்பான்மையினரை மாட மாளிகையிலிருந்து கீழிறக்கும்

### கிளிநொச்சி மண்ணில் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்



(கிளிநொச்சி)

- பாராளுமன்றில் எதிர்ப்பு வருகின்றபோது தமிழ்ப் பிரதிநிதிகள் மௌனம் காக்கின்றனர்.
- வரலாறு தொடர்பாக இதுவரை செய்த மோசடி வெளிவந்து விடும் என்பதற்காக தென்னிலங்கை அரசியல்வாதிகள் போர்க் கொடி தூக்கி வருகின்றார்கள்.
- உண்மைகளை பேசுவது நாட்டைப் பிரிக்கவல்ல. இனப் பிரச்சினைக்கு இனியாவது சிங்கள மக்கள் விட்டுக் கொடுப்பார்கள் என்பதற்காக.
- தமிழர்களின் வரலாறு தெரியாத எமது தலைவர்கள் எப்படி சிங்களத் தலைவர்களுடன் பேச முடியும்.

(02ஆம் பக்கம் பார்க்க)



## இந்தியா 2ஆம் இடம்

(டில்லி)

உலகளாவிய 15

### இரட்டைக் குடியுரிமை உள்ளவர்களுக்கு

## இலங்கையில் பதவிகள் ஏதும் வழங்கக்கூடாது – வாசுதேவ

(கொழும்பு)

20ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தின் மூலம் இரட்டைக் குடியுரிமை கொண்டவர்களுக்கு இலங்கையில் பதவிகளை வகிக்கும் சந்தர்ப்பத்தை வழங்கக் கூடாது என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நீதியமைச்சர் 15

### முட்டையின் விலை

## 2 ரூபாயினால் குறைப்பு

(கொழும்பு)

நாட்டில் கோழி முட்டையின் விலையினை 2 ரூபாயினால் குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுளது. 16

## வாள்வெட்டுக் குழுவினரை மடக்கி பொலிஸில் ஒப்படைத்த

### புத்தூர் இளைஞர்கள்

(யாழ்ப்பாணம்)

வாள்வெட்டுக் குழுவைச் சேர்ந்த இருவரை புத்தூர் இளைஞர்கள் மடக்கிப் பிடித்து பொலிஸில் ஒப்படைத்துள்ளனர்.

சிறுப்பிட்டி பகுதியில் இருந்து புத்தூர் கலைமதி ஊடாக மோட்டார் சைக்கிளில் வந்த நபர்களில் இருவரை புத்தூர் இளைஞர்கள் மடக்கி 15

### கோவிலில் கலை ஆடியவர்

## சூலத்தின் மீது தவறி விழுந்ததில் படுகாயம்

### யாழ்.மிருசுவிலில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மிருசுவில் பகுதியில் உள்ள கோவில் ஒன்றில் கலை வந்து ஆடிய 15

## ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் வெளிவிவகார அமைச்சர் தினேஷுடன் பேச்சு



(கொழும்பு)

இலங்கையின் அண்மைக்கால அரசியல் மாற்றங்கள் மற்றும் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் என்பன தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளனர்.

இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் 15

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நெருக்குதலே...

பொதுத் தேர்தல் முடிவடைந்த பின்னர் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி சார்பாக நேற்று சனிக்கிழமை முதல் தடவையாக கிளிநொச்சியில் மக்கள் சந்திப்பை நடத்திய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.

இம்முறை தேர்தலில், தென்னிலங்கையின் பேரினவாத சக்திகள் மாத்திரமின்றி, நாம் பிரதானமாக விமர்சிக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மாத்திரமின்றி எம்முடன் கடந்த காலத்தில் இணைந்து நின்றவர்களும் மற்றும் என்னைத் தனிப் பயணத்திற்கு அழைத்தவர்களுங்கூட எம் மீது அவதூறுகளையும் சேறடிப்புக்களையும் செய்துள்ளனர்.

விசமத்தனமான பிரச்சாரங்கள் கட்டவிழ்த்திடப்பட்ட போதும் அவைகளை எல்லாம் கருத்தில் கொள்ளாது எனக்கும் எமது கட்சிக்கும் வாக்களித்த மக்களுக்கு, நன்றிகளை தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

நாம் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறுகின்ற நிலைதான் எமது அரசியலின் முதல் பிழையாகவும் தோல்வி யாகவும் அமைகின்றது என எண்ணுகின்றேன். அந்த வகையில் இத்தேர்தலில் வெற்றி பெற்ற எனக்கு முன்னால் மிகப் பெரும் கடமைகள்காத்து நிற்கின்றன.

தமிழ் மக்கள் நம்பிக்கைப் பொறுப்பு என்கின்ற எமது நிதியத்தின் வாயிலாக வடக்கு- கிழக்கு மக்களின் துயர் துடைக்கும் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளோம். அதற்கான காலமும் சூழலும் இப்போதே வாய்த்து வருகின்றது. புலம் பெயர் உறவுகள் மற்றும் தாயகத்தின் உறவுகளின் பங்களிப்பில் எம் மக்களுக் கான இப் பணியை நிறைவேற்றுவது எனது அவசிய கடமை என்பதை உணர்கின்றேன்.

நான் பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்ட பின்னர் எதிர்கொள்ளுகின்ற விமர்சனங்களையும் எதிர்ப்புக்களையும் நீங்களும் அறிவீர்கள் ஏன்று நம்புகின்றேன். இதே போலவே மாகாண சபைக் காலத்தில் கூட பல எதிர்ப்புக்களை எதிர்கொண்டேன். அன்று இலங்கை அரசால் மாத்திரமல்ல என்னை அழைத்து வந்த எம்மவர்களே எனக்கு எதிராக நின்றார்கள். எனக்கு எதிராக நம்பிக்கை இல்லாப் பிரேரணை கொண்டு வந்து என்னை முதலமைச்சர் பதவியில் இருந்து தூக்கி எறிய முற்பட்டவேளையில் கிளி நொச்சியி லிருந்தும் எனக்கு ஆதரவு கொடுக்க பலர் திரண்டு வந்ததை நான் அறி வேன்.

இப்போது பாராளுமன்றத்தில் எனக்கு எதிர்ப்பு வருகின்ற போது எம் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் மௌனிகளாக இருக் கின்றார்கள். நான் பேசுவது அவர்களுக்காகவுந்தான் என்பதை மறந்து நிற்கின்றார்கள்.

உலகின் மூத்த மொழி தமிழ், உலகின் மதிப்பு மிக்க செம்மொழி அது என்பதை இந்தியாவில் மாத்திரமின்றி உலக நாடுகள் பலவற்றிலும் கூறி வருகின்றார்கள். ஆனால் தென்னிலங்கையில் இருப் பவர்களுக்கு அது தெரியவில்லையா? தெரியாததைப் போல நடிக்கின்றார்கள் என்று நினைக்கின்றேன்.

நான் அன்று சொன்னது இதைத்தான். தமிழ் உலகின் மூத்த மொழி. தமிழர்கள் இந்த நாட்டின் மூத்த குடிகள் என்றேன். தமிழ் மக்கள் இந்நாட்டில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இருந்து வாழ்ந்து வருகின்றார்கள் என்பதற்கு இலக்கியங்களும், தொல்பொருட்களும், கல்வெட்டுக்களும் என பல ஆதாரங்கள் உள்ளன. இதனை ஆதாரங்களுடன் முன்வைத்தேன். அதற்கு எதிராக தென்னிலங்கை அரசியல்வாதிகள் போர்க்கொடி தூக்கி வருகின்றார்கள். அவர்கள் இதுகாறும் செய்துவந்த மோசடி எங்கே வெளிவந்துவிடுமோ என்று அஞ்சுகின்றார்கள்.

அவர்கள் தங்கள் வரலாற்றைப் புனைகின்றார்கள். புனைந்து பேசுகின்றார்கள். நாமோ எங்களுக்கு என இருக்கின்ற உண்மையான வரலாற்றை இதுகாறும் பேசாது இருந்து விட்டோம். இந்த உண்மைகளை நான் பேசுவது, நாட்டைப் பிரிக்கவல்ல. இனப்பிரச்சினையில் இனியாவது சிங்கள மக்கள் விட்டுக் கொடுப்புடன் நடப்பார்கள் என்ற எதிர்பார்ப்பிலேயே. அப்படி நடந்தால் இலங்கைத் தீவின் அமைதிக்கு அது வழியமைக்கும்என்பதே

16


## சொர்க்கம் திருமண சேவை

அவுஸ்திரேலியாவில் வாழும் 33 வயது Non Rc மதத்தை சார்ந்த மணமகனுக்கு அதே மதத்தில் அழகிய மணமகளைத் தேடுகிறோம். கனடாவில் வாழும் 32 வயது திருவோண நட்சத்திர மணமகளுக்கு இலங்கையில் படித்த மணமகனைத் தேடுகிறோம். இலங்கையில் அரச தொழில் புரியும் 30 வயது பூராடம் நட்சத்திர மணமகனுக்கு அரச தொழில் புரியும் மணமகளைத் தேடுகிறோம். அமெரிக்காவில் வாழும் 37 வயது விவாகரத்துப் பெற்ற மணமகனுக்கு இலங்கையில் மணமகளைத் தேடுகிறோம். (C-252)

தொடர்புகளுக்கு :- 0014166661855, 076 236 4188
சொர்க்கம் திருமண சேவை 077 650 6097, 021 222 1515

## SHOP RECEPTIONIST




## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் சைவ உணவகம் ஒன்றிற்கு கீழ்வரும் வேலையாட்கள் தேவை.
( கவர்ச்சிகரமான சம்பளம், தங்குமிட வசதியுடன் )

உணவு பரிமாறுபவர்கள் (ஆண், பெண்), அலுவலக உதவியாளர் (இலகுரக வாகனம் ஓட்டக்கூடியவர்), தோசை போடுபவர், சமையல் உதவியாளர், சமையலாளர், அரையல் வேலையாளர், இடியப்பம் தயாரிப்பாளர் (பெண்கள்), சுத்திகரிப்பாளர், குசினி வேலையாட்கள். (3810)

071 641 7174, 021 568 1660

## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா?

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்புகூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

**குளிசை பால்மா என்பன விற்பனைக்குண்டு**

## கருமை நிறம் நீங்க வேண்டுமா?

கருமை நிறம், கரும்புள்ளி, பருக்கள், பருவந்த அடையாளம், உதட்டுக்கருமை, கை, கால் கருமை நீக்கும் கிறீம், காய்கள் (பாலுண்ணி) அகற்றும் கிறீம், முகத்தில் உள்ள தேவையற்ற ரோமம் அகற்றும் கிறீம் என்பன விற்பனைக்கு உண்டு.

**பாவித்து 15 நாட்களில் அற்புதமான அழகைக் காண்பீர்கள்** (3809)

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

## இயற்கை மூலிகை மருத்துவம்

உங்களுக்கு ஏற்படுகின்ற மூட்டு வலி, முழங்கால் வலி, பாத விறைப்பு, வெரிக்கோஸ் மற்றும் நீரிழிவு, கொலஸ்திரோல், அதிகரித்த உடல் எடை போன்ற வற்றிற்கும் முகத்தில் ஏற்படும் பருக்கள், கரும்புள்ளிகள், தலைமுடி உதிர்தல் போன்ற அனைத்து விதமான உடல் உபாதைகளுக்கும் இயற்கை மூலிகைகளிலான மருந்துகளைக் கொண்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது.

**அகஸ்தியா இயற்கை மருத்துவ சிகிச்சை நிலையம்.**

இல.264, ஆடியபாதம் வீதி. கொக்குவில் கிழக்கு. கொக்குவில்.
தொ.பேசி : 077 912 8944 (C-249)

## வேலையாள் தேவை

யாழ்ப்பாணம், ஐந்து சந்திக்கருகாமையிலுள்ள மெடிக்கல் கிளினிக்குக்கு பெண் உதவியாளர் தேவை. (முன் அனுபவம் தேவையில்லை. ) தமிழ் ரைப்பிங் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது. (3816)

Tel : 077 875 7860

## காணி விற்பனைக்கு

வசாவிளான் - அச்சுவேலி பிரதான வீதிக்கு அருகாமையில் 8 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
**தரகர் தேவையில்லை** (3803)

தொடர்பு
077 160 7635

## சேவை நயப்பும் மணிவிழா வாழ்த்தும்




திருமதி ஸ்ரீ கோகிலாம்பிகை ஆனந்தகுமார்
[( B.A, S.L.T.S-I ),வழிகாட்டலும் ஆலோசனையும் ]

**சேவை விபரம்**

யா / இந்து மகளிர் கல்லூரி
17.08.1988 - 24.10.1988
யா / அராலி முருகமூர்த்தி வித்தியாசாலை
25.10.1988 - 04.02.1991
யா / கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை
05.02.1991 - 03.01.1993
யா / துணவி அ.மி.த.க. பாடசாலை
04.01.1993 - 09.01.2007
யா / நவாலி மகா வித்தியாலயம்
10.01.2007 - 04.09.2020

யா / நவாலி மகா வித்தியாலயத்தில் வழிகாட்டலும் ஆலோசனை ஆசிரியையாகவும் கடமையாற்றி 2020.09.04 ஆம் திகதி சேவையை நிறைவு செய்து மணிவிழாக் கண்ட ஸ்ரீ கோகிலாம்பிகை ஆனந்தகுமார் அவர்களின் ஓய்வுக் காலம் சீரும் சிறப்புமாக அமைய வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
யா / நவாலி மகா வித்தியாலயம்

(3815)

## ஆங்கிலக் கல்வி

மிகவும் இலகுவான முறையில் அடிப்படையிலிருந்து விளக்கப் பயிற்சிகளுடன் அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் வீடுகளிற்கு வந்து கற்பிக்கப்படும்.

தொடர்பு (3807)
077 089 6147

## காணிகள் விற்பனைக்கு

A9 வீதியில் 50 ஏக்கர், 25 ஏக்கர், 28 ஏக்கர் காணிகள், 2 வெட்டுக் கிணறுகள், 2 வீடுகள், 300 காய்க்கும் இளம் தென்னை மரங்கள் மற்றும் 1 1/2 ஏக்கரில் வேறு மரங்களுடன் 7 ஏக்கர் காணியும், யாழ். ஸ்ரான்லி வீதியில் தனித்தனி காணிகள் 4 பரப்பு, நெல்லியடி மாலி சந்தியில் 4 1/2 பரப்பு, யாழ். திருநெல்வேலியில் 1 பரப்பு காணியுடன் புதிய வீடு, வவுனியா நகர்ப் பகுதியில் 1 km தூரத்தில் உறுதிக் காணி மலிவு விலையில், யாழ். கொட்டடியில் 3 பரப்பு காணி, கொழும்பு, வெள்ளவத்தை, பம்பலப்பிட்டியில் தொடர் மாடி வீடுகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :- VIMA
076 283 7441, 076 534 6562,
077 522 1132 (C-248)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1989இல் பிறந்த அரச தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு (3808)
070 126 0678

## LUXMY CONSTRUCTION

நீர்வேலிப் பகுதியில் எமது ஒப்பந்த நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும் கட்டட வேலைகளுக்கு அனுபவமுள்ள மேசன், கூலியாட்கள் தேவை. (C-251)

077 106 6112, 077 179 1963

## விற்பனைக்கு

செவிப்புலனற்றோர் பயன்படுத்தும் நியூசிலாந்து நாட்டுத் தரமான கருவி மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். (C-250)

தொடர்பு : 076 534 6562

## பிரிகேடியர் விவகாரம்

# மன்னிப்புக் கோரிய சூக்கா



(கொழும்பு)

மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலியின் படத்திற்கு பதிலாக பிரிகேடியர் ரவீந்திர டயஸின் படத்தை தவறாக பயன்படுத்தியதற்காக சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் யஸ்மின் சூக்கா மன்னிப்புக் கோரியுள்ளார்.

கடந்த ஜூலை மாதம் நான்கு இராணுவத்தினர் பிரிகேடியர் தரத்தில் இருந்து மேஜர் ஜெனரல்களாக பதவி உயர்த்தப்பட்டமை தொடர்பில் கடந்த ஜூன் முதலாம் திகதி விசேட ஊடக அறிக்கை ஒன்றினை வெளியிட்டிருந்தார் யஸ்மின் சூக்கா.

எனினும் இந்த அறிக்கையில் சுரேஷ் சாலியின் படத்திற்கு பதிலாக பிரிகேடியர் ரவீந்திர டயஸின் படத்தை பயன்படுத்தியதாக குற்றச்சாட்டு எழுந்தது.

இந்நிலையில் யஸ்மின் சூக்கா தனது சட்டத்தரணிகளின் ஆலோசனையில் "குறித்த படத்தை தவறாகப் பயன்படுத்தியதற்காக பிரிகேடியர் ரவீந்திர டயஸிடம் மன்னிப்புக் கோரி பொது மன்னிப்பு மற்றும் திருத்த அறிக்கையை வெளியிட்டுள்ளார். (ஜ-2)

## அசைக்க முடியாத நிலையில் பொதுஜன பெரமுன

# மக்களை மறந்ததால் தான் ஐ.தே.கவுக்கு இந்த நிலை

## ஜோன் அமரதுங்க சாடல்



(கொழும்பு)

மக்களின் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து செயற்பட்டிருந்தால் ஐக்கிய தேசியக்கட்சிக்கு இத்தகைய நிலைமை ஏற்பட்டிருக்காதென அக்கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், "ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தை இன்னும் பத்து வருடங்களுக்கு எவராலும் அசைக்க முடியாது.

அரசாங்கம் முன்னெடுத்துள்ள வேலைத்திட்டங்களினால் மக்கள் தற்போது ஈர்க்கப்பட்டுள்ளனர். ஆகவே எதிர்வரும் 10 வருடங்களுக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆட்சியே தொடர்ந்து நிலவும்.

இதேவேளை இதற்கு முன்னர் ஆட்சிசெய்த நல்லாட்சி அரசாங்கம், மக்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து பார்த்து நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இத்தகைய நிலமை தற்போது ஏற்பட்டிருக்காது என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-2)

# அரசாங்கம் செலுத்த வேண்டிய கடன் தொகை அதிகரிப்பு

(கொழும்பு)

இவ்வாண்டின் முதல் ஆறு மாதகால முடிவில் அரசாங்கம் மீளச்செலுத்த வேண்டிய கடன் தொகையின் அளவு 14,052 பில்லியன் ரூபாய் என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டின் முடிவில் 13,031.5 பில்லியன் ரூபா மீளச்செலுத்தப்பட வேண்டிய நிலுவைக்கடன் தொகையாகக் காணப்பட்டது.

எனவே ஏற்கனவே நிலுவையில் இருந்த கடன் தொகையுடன் சேர்த்து இவ்வருடத்தின் ஜூன் மாத நிறைவில் மீளச்செலுத்தப்பட வேண்டிய கடன் தொகை 14,052 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது.

கடந்த வருட இறுதிக்கும் இவ்வருடம் ஜூன் மாதத்திற்கும் இடைப்பட்ட 6 மாதகாலத்தில் கடன் தொகையில் 1000 பில்லியன் ரூபாய் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் முதற் தடவையாக மத்திய அரசாங்கம் செலுத்த வேண்டிய நிலுவைக் கடன் தொகையின் அளவு கடந்த ஏப்ரல் மாதத்தில் 14 ஆயிரம் பில்லியன் ரூபாவைக் கடந்தது.

கடந்த ஏப்ரல் மாதத்தில் மீளச்செலுத்தப்பட வேண்டிய கடன் தொகையின் அளவு 14,024.7 பில்லியன் ரூபாவாகப் பதிவாகியிருந்ததுடன் அது மேமாதத்தில் 13,895.9 பில்லியன் ரூபாவாகக் குறைவடைந்தது. எனினும் ஜூன் மாத நிறைவில் அது 14,052.2 பில்லியன் ரூபாவாக மீண்டும் அதிகரித்தது.

2020 ஆம் ஆண்டில் முதல் ஆறு மாதகாலத்தில் இலங்கை மீளச்செலுத்த வேண்டிய கடன் நிலுவை 6,629.1 பில்லியன் ரூபாவிலிருந்து 7,530.8 பில்லியன் ரூபாவாக அதிகரித்திருப்பதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதேவேளை அதேகாலப் பகுதியில் செலுத்தப்பட வேண்டிய வெளிநாட்டுக் கடன்களின் அளவு 6,402.4 பில்லியன் ரூபாவிலிருந்து 6,521.4 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# கண்டி நில அதிர்வு இயற்கை நிகழ்வே

## ஆய்வில் உறுதி

(கொழும்பு)

கடந்த வாரம் இரு சந்தர்ப்பங்களில் கண்டியில் உள்ள திகனவில் ஏற்பட்ட நிலநடுக்கம் பூமிக்குள் ஆழமான சுண்ணாம்புக் கற்களின் இரண்டு அடுக்குகளுக்கு இடையில் கட்டமைக்கப்பட்ட மற்றும் அழுத்தத்தை வெளியிடுவதால் ஏற்பட்ட வெடிப்பின் விளைவாக ஏற்பட்டது எனத் தெரியவந்துள்ளது.

இந்த நடுக்கம் தொடர்பில் ஆய்வினை மேற்கொள்ள நியமிக்கப்பட்ட புவியியலாளர்கள் குழு வகுத்த அறிக்கையில் இது விரிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளதாக புவிச்சரிதவியல் அளவை சுரங்கப் பணியகத்தின் தலைவர் அனுராவால் போலா சுட்டிக்காட்டினார்.

அதன்படி பூமியின் கீழ் அழுத்தத்தை உருவாக்குவதால் இது இயற்கையான நிகழ்வு என்று அவர் உறுதிப்படுத்தினார்.

மேலும் இப் பகுதியில் எதிர்காலத்தில் இன்னும் சிறிய நடுக்கம் ஏற்படக்கூடும். எனினும் இதுபோன்ற குறைந்த அளவிலான அதிர்வலைகள் எந்த சேதத்தையும் ஏற்படுத்தாது என்றும் ஆயினும் கூட, எதிர்காலத்தில் தொடர்புடைய பகுதிகளில் கட்டடங்களை நிர்மாணிக்க புவிச்சரிதவியல் அளவை சுரங்கப் பணியகத்தின் அங்கீகாரம் தேவைப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ரிக்டர் அளவில் இரண்டிற்கும் குறைவான சிறிய நடுக்கம், கடந்த சனிக்கிழமை மற்றும் திங்களன்று கண்டியின் திகன உட்பட பல பகுதிகளில் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## கொரோனா முற்றாக நீங்கவில்லை

# விமான நிலையத்தை மீளத் திறக்க இன்னும் இரண்டு ஆண்டுகளாகும்?



(கொழும்பு)

சுற்றுலாப் பயணிகளுக்காக கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் மீளத் திறக்கப்படுவது மேலும் தாமதமாகும் என சுற்றுலா அமைச்சின் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சுகாதார விதிமுறைகள் இல்லாமல் விமான நிலையத்தை முழுமையாக திறக்கக்கூடிய காலம் நிச்சயமற்றது என்று சுற்றுலா அமைச்சின் செயலாளர் எஸ்.ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

சுகாதார அதிகாரிகள் அளித்த அறிவுறுத்தலின் அடிப்படையில் தான் விமான நிலையத்தை வெளிநாட்டினருக்காக முழுமையாக திறக்க முடியும் என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் உலக சுகாதார அமைப்பின் கருத்துப்படி, COVID-19 தொற்றுநோய் முற்றிலுமாக ஒழிக்க இன்னும் இரண்டு ஆண்டுகள் ஆகும்.

மேலும் இந்த விடயத்தை கவனத்தில் எடுத்துக்கொள்ளும்போது சுகாதார விதிமுறைகளை தளர்த்துவது கடினம்.


இதையடுத்து விமான நிலையத்தை திறக்க இரண்டு ஆண்டுகள் செல்லுமா என்றும் சந்தேகம் எழுந்துள்ளது. (ஜ-2)

# தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதன் மூலம் வேலைவாய்ப்புகளை அதிகரிக்கலாம்

## அங்கஜன் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

**உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை இணைத்துத் தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதன் மூலம் வேலைவாய்ப்புக்களை உருவாக்க முடியும் என பாரா ளுமன்றக்குழுக்களின் பிரதித்தவிசாளரும் யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத்தலைவரு மான அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.**



நேற்று முன்தினம் அச்சு வேலி கைத்தொழிற்பேட்டை க்கு விஜயம் செய்து நிலை மைகளை ஆராய்ந்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரி விக்கும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்துள் ளார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

முதலீட்டு நிறுவனங்களின் குறைபாடுகளை ஆராய்ந்து தேவைப்பாடுகள் சம்பந்தமாக உரிய அமைச்சுகளுடன் கலந் துரையாடப்பட்டு தீர்வுகள் எட்டப் படுவதன் ஊடாகக் குறித்த தொழி ற்சாலைகளை ஆரம்பிப்பதன் மூலம் வேலைவாய்ப்புக்களை உருவாக்கிக்கொள்ள முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

இவ்விஜயத்தின் போது அங் கஜன் இராமநாதன், யாழ்.அரச அதிபர் க.மகேசன், மேலதிக அரச அதிபர் (காணி) எஸ்.முரளி தரன், அச்சுவேலி கைத்தொழில் பேட்டை பொறியியலாளர், ஊடக வியலாளர்கள் ஆகியோர் கல ந்து கொண்டனர். (ஜ-5-33)

# தீப்பற்றிய கப்பலில் இருந்து மீட்கப்பட்ட மாலுமிக்கு கொரோனா?

(அம்பாறை)

அம்பாறை சங்கமன்கண்டி கடற்பரப்பில் தீ விபத்திற்குள் ளாகிய எண்ணெய்க் கப்பலில் இருந்து மீட்கப்பட்ட மாலுமி ஒருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதியாகியிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த வியாழக்கிழமை நாட் டில் 4 புதிய தொற்றாளர்கள் இன ங்காணப்பட்டிருந்த நிலையில் அவர்களில் ஒருவர் பிலிப்பை ன்ஸ் நாட்டைச்சேர்ந்த கடலோடி என அரசாங்க தகவல் திணை க்களம் அறிவித்துள்ளது.

இந்நிலையில் தீப்பற்றிய நியூ டயமன்ட் எண்ணெய்க் கப்பலில் இருந்து மாலுமி காய ங்களுடன் கடந்த 2 ஆம் திகதி மீட்கப்பட்டு கல்முனை ஆதார வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டிருந்தார்.

கடந்த வியாழக்கிழமை தொற்றாளர்களில் பிலிப்பை ன்ஸ் நாட்டைச் சேர்ந்த கட லோடி ஒருவருக்கு கொரோ னாத் தொற்று உறுதி செய்யப்ப ட்டிருப்பதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள் ளமை குறித்த மாலுமியாக இருக்கலாம். அவ்வாறு குறித்த கப்பலின் மாலுமிக்கு கொரோ னாத் தொற்று உறுதியானால் கப்பலில் இருந்து மீட்கப்பட்ட ஏனைய 22 ஊழியர்கள் மற் றும் மீட்பு நடவடிக்கையில் ஈடு பட்டவர்கள் அத்துடன் மீட்பு நடவ டிக்கையில் தொடர்புபட்ட அனை வரும் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டு உரிய பரிசோ தனைகளுக்கு உள்ளாக்கப்பட வேண்டிய நிலை ஏற்படும்.

ஏற்கனவே வெலிசறை கட ற்படை முகாமைச் சேர்ந்த கடற் படை சிப்பாய் மூலமும் வெலிக் கடை சிறைக் கைதி மூலமும் பெரும் கொத்தான கொரோனாத் தொற்றுப் பரவல் ஏற்பட்டு நாட் டில் அதிகரித்த கொரோனாப் பர வலுக்குக் காரணமாக அமைந்தி ருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# விளையாட்டு உத்தியோகத்தருக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(கொழும்பு)

விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் தலைமை யக விளையாட்டு உத்தியோக த்தர் பதவிக்கான விண்ணப் பங்கள் கோரப்பட்டுள்ளன. இத ற்குரிய தகைமைகளாக,

தொழில்நுட்ப சேவை வகு தியின் தரம் III உத்தியோகத் தராக ஐந்து (05) வருடங்கள் செயற்படும் மற்றும் திருப்திகர மான சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்த உத்தியோகத் தராக இருப்பதுடன் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு வினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் விளையாட்டு அல்லது முகாமை த்துவத் துறைக்கு ஏற்புடைய பட்டம் பெற்றிருத்தல்.

எதிர்வரும் 25 ஆம் திகதி க்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப்பெறும் விதமாக "பணிப்பாளர் நாயகம், விளை யாட்டு அபிவிருத்தித்திணைக் களம், இலக்கம் 09 பிலிப் குண வர்த்தன மாவத்தை, கொழு ம்பு - 07" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும் என வர்த்தமானியில் தெரிவிக்கப் பட்டுள்ளது.


மேலதிக தகவல்களுக்கு (இல. 2192) நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வெளியான வர்த்தமானியைப் பார்வையி டலாம். (ஜ-2-6).





பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரனை வரவேற்கும் நிகழ்வு நேற்றுச் சனிக்கிழமை கிளிநொச்சி பொதுச்சந்தை வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.கே.சிவாஜிலிங்கம், க.அருந்தவபாலன் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

(படங்கள்: கண்டாவளை, முறிகண்டி, அக்கராயன் செய்தியாளர்கள்)



# ஆட்டோ விபத்தில் இளைஞன் பலி

(கொழும்பு)

ருவன்வெல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வரக்காபொல - அகுருவெல்ல பிரதான வீதியில் அலவ்வ திசையிலிருந்து - ஏலியகொட நோக்கிப்பயணித் துக்கொண்டிருந்த ஆட்டோ கட்டுப்பாட்டை இழந்து விபத் துக்குள்ளானதில், இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தி னம் இடம்பெற்றது. குறித்த ஆட்டோவில் பயணித்த 21 வய துடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு பலியாகியுள்ளதுடன், ஆட்டோவின் சாரதியும் பலத்த காயங்களுடன் மீட்கப்பட்டு கர வனல்ல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலை யில், மேலதிக சிகிச்சைகளுக் காக கொழும்பு தேசிய வைத் தியசாலைக்கு மாற்றப்பட்டுள் ளார். (ஜ-4)

# இராசிபலன்

06.09.2020
ஆவணி 21, ஞாயிற்றுக்கிழமை
சதுர்த்தி பின்னிரவு 5.59 மணிவரை
அச்சுவினி பின்னிரவு 5.04 மணிவரை
சுபநேரம் 9.04 - 10.34 மணிவரை
இராகுகாலம் 4.34 - 6.04 மணிவரை
சந்திராஷ்டமம்- அத்தம், ஆவணி ஞாயிறு

வளவன்



**மேஷம்**

நீங்கள் பார்க்க நினைத்த நபர் உங்கள் இல்லம் தேடி வரலாம், வீட்டில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.



**ரிஷபம்**

தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.



**மிதுனம்**

தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு.



**கடகம்**

தொழில் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், நம்பிக்கைகள் நடைபெறும் நாள், போசன நன்மையுண்டு.



**சிம்மம்**

சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், ஆன்றோர் சந்திப்புண்டு.



**கன்னி**

குடும்பத்தினரிடையே விட்டுக்கொடுத்து நடப்பது நல்லது, எடுத்த காரியங்களில் சில இடையூறுகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், பணப்பற்றாக் குறையுண்டு.



**துலாம்**

சுற்றத்தார் வருகையால் சுகம் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், செய்தொழில் மேன்மையுண்டு.



**விருச்சிகம்**

சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், முயற்சிகளில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், போசன நன்மையுண்டு.



**தனுசு**

பொன்னான எதிர்காலத்தை அமைத்துக்கொள்ள புதிய வழி பிறக்கும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.



**மகரம்**

நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும் நாள், வாகன சுகமுண்டு, சுபகாரியங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.



**கும்பம்**

சுதந்திரமாகச் செயற்படுவீர்கள், உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, சமுகப் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு, தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.



**மீனம்**

மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும் நாள், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், தேவையற்ற விவாதங்களை தவிர்ப்பது நல்லது, முயற்சிகளில் ஆர்வம் கூடும்.

ஒரு குழந்தையின் சப்தம் அதன் தாய்க்கு அழகான சங்கீதம்.

# கைதிகள் தப்பியோட்டம் தேடுதல் தீவிரம்

(கொழும்பு)

குளியாப்பிட்டிய சிறைக் கைதிகள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஹெரோயின் போதைப்பொருளுக்கு அடிமையான நான்கு சந்தேக நபர்கள் சிறைச்சாலை கூரையை உடைத்து தப்பிச்சென்றுள்ளதாக குளியாப்பிட்டிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கம்புரபொல, கல்பொல, நாரங்கொட மற்றும் அலஹிடியாவ ஆகிய பிரதேசங்களில் வசித்து வந்தவர்களே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளனர்.

குறித்த சந்தேக நபர்கள் ஹெரோயின் வைத்திருந்த குற்றத்திற்காக கைது செய்யப்பட்டு குளியாப்பிட்டிய நீதவான் நீதிமன்றின் உத்தரவுக்கு அமைவாக 4 குற்றச்சாட்டுக்களின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் தப்பியோடிய கைதிகளை தேடும் பணியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (ஜ-2)

# நன்றி கூறிய கோட்டா

(கொழும்பு)

ஆழ்கடல் பரப்பில் தீ விபத்துக்கு உள்ளாகியிருந்த நியூ டயமன்ட் கப்பலில் ஏற்பட்டிருந்த தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு தம் உயிரைப் பணயம் வைத்து பாடுபட்ட இலங்கை கடற்படை, விமானப்படை, இலங்கைத் துறைமுக அதிகாரசபை மற்றும் இந்திய பாதுகாப்பு பிரிவினருக்கு தமது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

நேற்று டுவிட்டர் தளத்தில் வெளியிட்டுள்ள விசேட பதிவொன்றின் ஊடாகவே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532

FLORENCE NIGHHTINGAALE
School of Nursing



மிக
மிக குறைந்த
கட்டணத்திலேயே மிகச்
சிறந்த ஆசிரியர்களினால்
கற்பிக்கப்படுகிறது

படித்துவிட்டு ஒரு நல்ல தொழில் வாய்ப்பு இல்லாமல் இருக்கும் உங்களுக்கான ஒரு
அரிய வாய்ப்பு
+ ஒரு வருட பயிற்சி பாடநெறி
+ நிரந்தர வேலைவாய்ப்பு
+ கிழமைகளில் 02 நாட்கள் மட்டுமே வகுப்புக்கள் நடைபெறும்.

தகைமை: O/L, A/L
வயது: 18 - 35 வரை

பயிற்சிக் காலத்தில் வேலைவாய்ப்புக்களை பெற்றுக் கொள்ளலாம்

முகவரி
குஞ்சர் கடையடி, கரணவாய் மத்தி, நெல்லியடி. (சுபாஸ் பேக்கரி மேல் தளம்) T.P- 021 433 8919, 077 2984849
K.K.S Road, மருதனார்மடம். (ஆஞ்சநேயர் கோவில் முன்பாக) T.P- 021 4928916, 0762226438
Hot Line:0777-186438 | f/b:F.N. schoolofnursing | Viber - 076 222 6438


# 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் சிதம்பரப்பிள்ளை பிரபாகரன்

(கிராம அலுவலர்)

(திதி:- ஆவணி சுபரபக்க திரயோதசி)



மலர்வு 25 • 04 • 1962

உதிர்வு 06 • 09 • 2010

பெற்றோல் செற் லேன்,
நெல்லியடி.

குடும்பத்தினர்

(3805)

# சனசமூக நிலையங்கள் மீளவும் இயங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

## சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குள் இயங்காத நிலையில் காணப்படும் சனசமூக நிலையங்களை மீளவும் இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் கு.குகானந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மையில் சாவகச்சேரி பிரதேச சபையில் இடம்பெற்ற விசேட அமர்வொன்றின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குள் பெரும்பாலான சனசமூக நிலையங்கள் இயக்கமின்றிக் காணப்படுகின்றன.

சில சனசமூக நிலையங்கள் பிரதேச சபையால் வழங்கப்படும் வருடாந்த ஊக்குவிப்பு தொகைக்காக பெயரளவில் கூட்டறிக்கை தயாரித்து சபையில் வழங்கி கொடுப்பனவைப் பெறுகின்றன.

சனசமூக நிலையங்கள் இயங்குநிலையில் காணப்படாமையால் சில சட்டவிரோதச் செயற்பாடுகள் கூட நிலையங்களுக்குள் இடம்பெறுகின்றன.

சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குள் 110 சனசமூக நிலையங்கள் காணப்படுவதாகவும் அதில் 85 சனசமூக நிலையங்கள் வருடாந்த கூட்டம் கூடி அறிக்கை சமர்ப்பித்து வருவதாகவும் சபையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (5-4-30)

# போதைப்பொருள் கடத்தல்; யாழைச் சேர்ந்த நபர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து கடத்திச் செல்லப்பட்ட பெருமளவு போதைப்பொருள் நீர்கொழும்பில் கைப்பற்றப்பட்டுள்ள நிலையில், குறித்த போதைப் பொருள் கடத்தலுடன் தொடர்புடைய யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

நீர்கொழும்பில் உள்ள வர்த்தகர் ஒருவரே இந்தக்கடத்தல் வலையமைப்பின் பிரதான சூத்திரதாரி என தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் யாழ்ப்பாணம் தொண்டைமானாறு கெருடாவில் பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய சந்தேக நபரொருவர் போதைப்பொருளை, வாகனமொன்றில் நீர்கொழும்புக்கு அனுப்பியமை விசாரணைகளில் அம்பலமாகியுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து நீர்கொழும்பிற்கு நீண்டகாலமாக போதைப் பொருளை கடத்தி வந்துள்ளமை தெரிய வந்துள்ளது. (5-4-18)

# உத்தரவாதக் கல்வி நிகழ்ச்சித்திட்ட 2020 தொழில்துறைப்பிரிவு ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலயம், புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி, உரும்பிராய் இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் 13 வருட உத்தரவாதக் கல்வி நிகழ்ச்சித் திட்டம் 2020 (க.பொ.த.(உ/த) தொழிற்றுறைப் பிரிவு) ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட அனைத்து பாடசாலைகளிலும் 2019 ஆம் ஆண்டிலும் அதற்கு முன்னைய வருடங்களிலும் க.பொ.த. (சா/த) பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் தொழிற்றுறைப் பிரிவில் இணைந்து கற்க முடியும்.

அவர்களுக்கு பாட நிறைவின் போது **NVQ 04** சான்றிதழ் வழங்கப்படும். இதற்கான விண்ணப்பப்படிவங்களை குறித்த பாடசாலைகளில் பெற்றுக்கொள்ள முடியும் என யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா அறிவித்துள்ளார். (5)

## நூல்கள் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

இராஜினிதேவி சிவலிங்கத்தின் இரு நூல்கள் வெளியீட்டு விழா இன்று 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் “உதாரணம் எனது பெண்மை” (சிறுகதைத் தொகுப்பு), இராஜினி தேவி சிவலிங்கத்தின் பல்துறைசார் கட்டுரைகள் ஆகிய நூல்களே வெளியிடப்படவுள்ளன.

இதில் வெளியீட்டுரை ஜீவநதி பிரதம ஆசிரியர் க.பரணிதரன், கருத்துரைகளை பேராசிரியர் சிவலிங்கராஜா, கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையாளர் அ.பௌநந்தி ஆகியோர் வழங்குவர். (5)

# முழுமையடையாத வீதி புனரமைக்க கோரிக்கை

(கரணவாய்)

கடந்த நாட்களில் பெய்த மழையினால் வடமராட்சி - செல்வாபுரம் கிராமத்திலுள்ள பல வீதிகளில் மழை வெள்ளம் தேங்கி நிற்பதாக செல்வாபுரம் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

சில வீதிகளில் கொங்கிறீட் வீதிகள் போடப்பட்டிருக்கின்ற போதிலும் அவை முழுமையாக நிறைவு பெற்றிருக்கவில்லை.

இவ்விடயம் தொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-8-4-60)

# மென்பந்து சுற்றுத்தொடரும் பரிசில் வழங்கும் நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

தீபாவளியை முன்னிட்டு கோவளம் விளையாட்டுக்கழகம் நடத்தும் மென்பந்து சுற்றுத் தொடர் 2020 இன் இறுதிப் போட்டியும் பரிசில் வழங்கும் நிகழ்வும் இன்று 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கோவளம் விளையாட்டுக்கழக மைதானத்தில் பிற்பகல் 3 மணியளவில் கோவளம் விளையாட்டுக்கழக தலைவர் சி.மயூரன் தலைமையில் நடைபெறும். (5-4)

# வரவேற்பும் கௌரவிப்பும்

(யாழ்ப்பாணம்)

பாராளுமன்ற தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழ் ஈழ இயக்கம் சார்பாக போட்டியிட்டு பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தைப் பெற்றவர்களான செல்வம் அடைக்கலநாதன், வினோநோதரதலிங்கம், கோவிந்தன் கருணாகரன் ஆகியோரைக் கௌரவித்து வரவேற்கும் நிகழ்வு இன்று 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் அமைந்துள்ள நாவலர் மண்டபத்தில் கட்சியின் தேசிய அமைப்பாளர் சுரேந்திரன் குருசுவாமி தலைமையில் நடைபெறும். (5)

## சாவகச்சேரியில் வீடு புகுந்து திருட்டு

(சாவகச்சேரி)

சாவகச்சேரியில் பட்டப் பகலில் வீடு புகுந்து திருடிய குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

சாவகச்சேரிப் பகுதியிலுள்ள குறித்த வீட்டில் நேற்று முன்தினம் நண்பகல் யாருமில்லாத தருணம் வீட்டிற்குள் புகுந்து இலத்திரனியல் சாதனங்களையும், பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து இருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளையும் சாவகச்சேரிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (5-8-4-30)

# கேரளக் கஞ்சாவுடன் பெண் கைது மோட்டார் சைக்கிள் பறிமுதல்

(குருமன்காடு)

வவுனியா ஓமந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலமோட்டை, மூன்றுமுறிப்பு பகுதியில் இரண்டு கிலோ கேரளக் கஞ்சாவுடன் பெண் ஒருவரை நேற்று மாலை ஓமந்தை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஓமந்தை விசேட பொலிஸ் குழுவினர் வழங்கிய தகவலின் அடிப்படையில் ஓமந்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுரேஸ் டி சில்வாவின் வழிகாட்டலில் ஓமந்தை பொலிஸ்



நிலைய உப பொலிஸ் பரிசோதகர் அருளானந்தம் தலைமையிலான பொலிஸ் குழுவினர் ஓமந்தை பாலமோட்டை பகுதியில் மேற்கொண்ட திடீர்சோதனை நடவடிக்கையின் போது மோட்டார் சைக்கிளின் கீழ் பகுதியில் இரண்டு கிலோ கேரளக்கஞ்சாவைக் கொண்டு சென்ற பெண்ணை கைது செய்துள்ளதுடன் அவர் பயணித்த மோட்டார் சைக்கிளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கேரளக் கஞ்சாவினை வைத்திருந்த குற்றச்சாட்டில் நெளுக்குளம் பகுதியினை சேர்ந்த பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்.

கைதுசெய்யப்பட்ட பெண்ணை ஏழு நாட்கள் பொலிஸ் தடுப்பு காவலில் வைத்து விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்குரிய நடவடிக்கையினை ஓமந்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(5-4-250)



**கொழும்பில் இருந்து வவுனியாவிற்கு கொண்டு வரப்பட்ட புறாக்கள் கொழும்பை சென்றடையும் வகையில் வவுனியா நகரசபை மைதானத்தில் இருந்து நேற்று பறக்கவிடப்பட்டன. கொழும்பை சேர்ந்த நபரொருவருடைய புறாக்களே இவ்வாறு வாகனத்தில் வவுனியா கொண்டுவரப்பட்டு நகரசபை மைதானத்தில் இருந்து பறக்கவிடப்பட்டன.**

**(படம்:- நெளுக்குளம் செய்தியாளர்)**

## UNIVERSITY COLLEGE OF JAFFNA
UNIVERSITY OF VOCATIONAL TECHNOLOGY
MINISTRY OF EDUCATION

**VACANCY**

University of Vocational Technology invites applications from suitable qualified persons for the below mentioned post in University College of Jaffna.

**DIRECTOR / CHIEF EXECUTIVE OFFICER**

**Closing Date: 22.09.2020**

FOR MORE DETAILS AND APPLICATION FORM, PLEASE VISIT www.univotec.ac.lk

**Assistant Registrar**
**University College of Jaffna**
**06.09.2020**

(c-238)

## UNIVERSITY COLLEGE OF JAFFNA
UNIVERSITY OF VOCATIONAL TECHNOLOGY
MINISTRY OF EDUCATION

**VACANCIES**

TVEC Reg No: P25/0071
Applications are invited from suitable qualified persons for the below mentioned posts in University College of Jaffna.

1. LECTURER (PROBATIONARY) IN FOOD TECHNOLOGY
2. DEMONSTRATORS IN FARM MACHINERY TECHNOLOGY, PRODUCTION TECHNOLOGY, MECHATRONICS TECHNOLOGY, FOOD TECHNOLOGY, COSMETOLOGY & BUILDING SERVICES TECHNOLOGY
3. MANAGEMENT ASSISTANT – GRADE III

**Closing Date: 21.09.2020**

FOR MORE DETAILS AND APPLICATION FORM, PLEASE VISIT www.ucj.ac.lk or call 021 221 7792

**Assistant Registrar**
**University College of Jaffna**
**06.09.2020**

(c-239)

# கைதுகள் 417

(கொழும்பு)

மேல் மாகாணத்தில் நேற்று முன்தினம் காலை 5 மணிமுதல் நேற்று அதிகாலை 5 மணிவரை பொலிஸார் மேற்கொண்ட விசேட சோதனை நடவடிக்கைகளின் போது 417 சந்தேக நபர்கள் கைது செய்ப் பட்டனர். (ஐ-6)

## சேவை

நீங்கள் அடகு வைத்த மீட்டெடுக்க முடி யாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறு வனத்திற்கு வருகை தந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப் பணம் அவ்விடத்திலேயே தரப்படும். நாடளாவிய ரீதியில் சிநேகபூர்வமான சேவை **AAA Gold Center**

**0765684346** (C-1008)

## பணியாளர் தேவை

உள்ளக மின்னியல் சாத னங்கள் திருத்தும் செயன் முறைத்திறன் தகுதியுள்ளவர் கள் தேவை.

**தொடர்பு: 0777179911** (3783)

**அதிதீரன் மின்சார பொறியியல் இலக்கு காங்கேசன்துறை.**

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1977 உத்திரட்டாதி மீனராசி கி.பா: 17 1/4 சொந்த தொழில் செய்யும் மணமகனுக்கு மணமகள் தேவை.

குறிப்பு. தரகர் தேவையில்லை.

**நேரடித் தொடர்பிற்கு**
**0775586477**

(3800)

## சாரதி தேவை பட்டா ஓட்டுநர் (LIGHT VEHICLE)

(1) வயது :- 30-55 வரை
(2) அனுபவம் :- 3 வருடங்கள்
(3) வதிவிடமும், நற்சான்றிதழும் கிராமசேவையாளரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

நேர்முகத் தேர்வு :- 11.09.2020 வெள்ளிக்கிழமை
காலை 10.00 முதல் 12.00 வரை

**தொடர்புகளுக்கு :- MALBA ROPES (PTE) LTD, 212, Hospital Road, Jaffna, 0212220090. (kandee7030@gmail.com**

(3794)

## பெண் உதவியாளர் தேவை

Cargils Square வில் (No: 11 (1st floor, Jaffna) அமைந்துள்ள Secrets விற்பனை நிலையத்திற்கு பெண் உதவியாளர் தேவை.

தகைமை : A/L or O/L ஆங்கில அறிவு, வேலை முன்னனுபவம் விரும்பத்தக்கது.

வேலை நேரம் : 10.00 A.m-7.30 P.m Monday- Saturday

**தொடர்புகளுக்கு: Priya.G 0779510436, 0212216488**

(3777)

# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 2<br>கி.பா: 39 சூரி.செவ் 11 இல் உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: பட்டதாரி தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி அரச உத்தியோக முள்ள பெண்<br>தொ.இ: B/11158 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 4<br>கி.பா: 33¼ செவ் 2 இல் உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: B.Sc. Demo<br>எதிர்பார்ப்பு: வெளிநாட்டவர் மட்டும்<br>தொ.இ: G/11198 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 2<br>கி.பா: 25 ½ சூரி, செவ் 2 இல்<br>தகைமை/தொழில்: க.பொ.த.சா/த.<br>வெதுப்பக நடத்துநர்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/11161 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 4<br>கி.பா:28½ செவ் 12 இல் உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:B.Sc Food production technology management ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு:உயர் தனியார்,அரச உத்தியோகம் பார்க்கும் பட்டதாரி மணமகன்<br>தொ.இ: G/11199 |
| பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 1<br>கி.பா: செவ் 4 இல் உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ/த.<br>சொந்தக்கடை நடத்துகின்றார்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/11162 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா:14½ செவ் 2 இல் உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ/த.<br>வெளிவாரி மருந்தாளர் மருந்துக் கலவை உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி அரச, தனியார் உத்தியோகத்தர்<br>தொ.இ: G/9014 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 4<br>கி.பா: 40 செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: க.பொ.த.சா/த.<br>சுயதொழில் விவசாயம்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/11164 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 3<br>கி.பா: 26½ செவ் 6 இல் உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: Diploma in English Library Information Officer<br>எதிர்பார்ப்பு: Accountant, Engineer, Doctor, Lecturer, Bank staff<br>தொ.இ: G/9022 |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.**


வாடிக்கையாளர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்..!

# டிஜிற்றல் பனர்
70/- 35/-
50% OFF
(சதுர அடி)

# டிஜிற்றல் ஸ்ரிக்கர்
120/- 80/-
(சதுர அடி)

**3D** விளம்பரப்பலகைகள்
1 சதுர அடி 1800/- இலிருந்து




இச் சலுகை 31.12.2020 மட்டுமே.

ANDRA ADVERTISING
379, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். Tel : 021 222 8929
0777 481 696 / 077 220 9527

(c-237)

# இரட்டைக் குடியுரிமையுடையோர் அரச உயர் பதவிகளை வகிப்பது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகும்



## விதுர எச்சரிக்கை

(கொழும்பு)

**இரண்டைக்குடியுரிமை உடையோர் அரச உயர் பதவிகளை வகிப்பது தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகும் எனத் தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள், கிராமியக்கலை மற்றும் கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க எச்சரித்துள்ளார். கொழும்பில் நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.**

இரட்டைக் குடியுரிமை கொண்ட நபர் அரச உயர் பதவிகளை வகிப்பதால் எவ்வாறான விளைவுகள் ஏற்படும் என்பதை மத்திய வங்கி பிணை முறி மோசடி விவகாரத்தின் ஊடாக நாம் அறிந்து கொள்ளலாம் என்று சுட்டிக்காட்டிய அவர்,

இரட்டைக்குடியுரிமை உடையோர் தேர்தலில் போட்டியிட முடியாது என்ற தடை நீக்கப்பட்டுள்ளமை அரசாங்கத்தில் தற்போது மாறுபட்ட நிலைப்பாட்டை தோற்றுவித்துள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

இரட்டைக் குடியுரிமை கொண்டவர் தேர்தலில் போட்டியிடுவதற்கு அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தில் ஏற்படுத்தப்பட்ட தடை அரசியலமைப்பின் 20 ஆவது திருத்த மூல வரைவில் நீக்கப்பட்டமை எதிர்ப்பிற்குரியது.

20 ஆவது திருத்தத்தில் பல விடயங்கள் சாதகமாக காணப்பட்டாலும் இரட்டைக்குடியுரிமை உள்ளவர்களுக்குச் சாதகமாகக் காணப்படுவது தவறான தீர்மானமாகும் என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ஜ-4)

## சீனத் தொடர்பாடல் நிறுவனத்துடன் தொடர்பு; இலங்கையை எச்சரித்த அமெரிக்கா

(கொழும்பு)

கறுப்புப் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ள சீனத் தொடர்பாடல் நிர்மாண நிறுவனத்துடன் தொடர்புகளை வைத்திருக்கும் இலங்கை இது தொடர்பில் மீள் பரிசீலினை செய்ய வேண்டுமென அமெரிக்கா எச்சரித்துள்ளது.

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

குறித்த நிறுவனத்தினால் கொழும்பு துறைமுக நகரம் உள்ளிட்ட பல்வேறு நிர்மாணப் பணிகள் இலங்கையில் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த நிர்மாண நிறுவனம் இந்திய பசுபிக் பிராந்தியத்தில் அமைதியின்மையை ஏற்படுத்துவதுடன் சுற்றாடல் பாதிப்பையும் ஏற்படுத்துகிறது.

இவ்வாறான முறைகேடுகள் மற்றும் இறையாண்மை மீறலில் இருந்து நாடுகள் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென அமெரிக்கா கோரிக்கை விடுத்துள்ளது. (ஜ-2)

## நாட்டில் சீற்ற வானிலையால் 2 ஆயிரம் குடும்பங்கள் பாதிப்பு

(கொழும்பு)

நாட்டில் நிலவிவரும் சீரற்ற வானிலை காரணமாக நாடளாவிய ரீதியில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதன்படி, நாடளாவிய ரீதியில் 14 மாவட்டங்களில், இரண்டாயிரத்து 761 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 389 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அனர்த்தங்களினால் 34 வீடுகள் முழுமையாகவும் 613 வீடுகள் பகுதியளவிலும் பாதிக்கப்பட்டுள்ளன. (ஜ-2)

## சிறைக்குள் தடை செய்யப்பட்ட பொருட்கள்

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச்சாலைக்குள் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையில் தடை செய்யப்பட்ட பல பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். சிறைச்சாலைப் புலனாய்வு அதிகாரிகளால் நேற்று முன்தினம் குறித்த சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது சிறைச்சாலையின் மகளிர் பிரிவில் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையில் 13 கையடக்கத் தொலைபேசிகள், 4 சிம் அட்டைகள், 150 மின்கலங்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளதாகச் சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஜ-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 120 | 60 |
| உருளைக்கிழங்கு | 140 | 130 | 130 | 140 |
| பச்சைமிளகாய் | 160 | 120 | 200 | 200 |
| தக்காளி | 120 | 140 | 130 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 120 | 80 |
| கோவா | 100 | 150 | 160 | 160 |
| கரட் | 80 | 160 | 200 | 200 |
| பூசணி | 100 | 110 | 130 | 120 |
| புடோல் | 50 | 80 | 80 | 100 |
| வாழைக்காய் | 100 | 130 | 130 | 120 |
| சின்ன வெங்காயம் | 120 | 100 | 120 | 140 |
| பெரிய வெங்காயம் | 140 | 130 | 140 | 140 |
| பாகற்காய் | 200 | 250 | 200 | 240 |
| வெண்டிக்காய் | 100 | 80 | 120 | 120 |
| கருணைக் கிழங்கு | 160 | 160 | 160 | 160 |
| பயற்றங்காய் | 200 | 300 | 200 | 200 |
| லீக்ஸ் | 80 | 90 | 120 | 100 |
| பீற்றூட் | 100 | 80 | 120 | 100 |
| கறிமிளகாய் | 350 | 300 | 280 | 300 |
| முருங்கைக்காய் | 300 | 350 | 280 | 300 |
| போஞ்சி | 300 | 320 | 280 | 250 |
| கத்தரிதம்புள்ள | 80 | 80 | 120 | 60 |
| கீரை - 1 பிடி | 40 | 25 | 30 | 30 |
| தேசிக்காய் | 150 | 100 | 160 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 70 | 60-80 |
| இராசவள்ளி | -- | -- | 300 | -- |
| வெங்காயப்பூ | 200 | 280 | 200 | 240 |
| முள்ளங்கி | 80 | 80 | 100 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 60 | 40 |
| வல்லாரை | 20 | 50 | 30 | 30 |
| ஈரப்பலா | 60 | -- | 50 | 80 |

## மதில் வீழ்ந்து குழந்தை பலி

(திருமலை)

மதில் உடைந்து வீழ்ந்ததில் குழந்தை பரிதாபமாக உயிரிழந்தது.

இச்சம்பவம் திருகோணமலை மாவட்டம் தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முள்ளிப்பொத்தானை பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது. இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

உடைந்து ஆபத்தான நிலையில் காணப்பட்ட மதில் அருகில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தை மீது சுவர் இடிந்து வீழ்ந்த நிலையில் குறித்த குழந்தை உயிரிழந்தது.

குழந்தையின் சடலம் கந்தளாய் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தம்பலகாமம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ஜ-2)

## பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதாகுபவர்களிற்கு தனிச் சிறை!

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட நபர்களைத் தடுத்து வைக்கும் மையமாகத் தங்காலை பழைய சிறைச்சாலை அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆலோசனையின் பேரில் பாதுகாப்புச் செயலாளரால் விசேட வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. (ஜ-2)

# பரஸ்பர வர்த்தக நடவடிக்கைகளுக்கு இலங்கை - இந்தியா இணக்கம்



(கொழும்பு)

**இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பரஸ்பர நலன்களை அடிப்படையாகக் கொண்ட வர்த்தக நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

கடந்த 3 ஆம் திகதி நடைபெற்ற கோபால் பாக்லே, வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன ஆகியோருக்கு இடையிலான சந்திப்பின்போது குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. குறித்த சந்திப்பில் முதலீடு மற்றும் வர்த்தகம் உள்ளிட்ட துறைகளில் இலங்கையுடனான பொருளாதார பங்குடைமையை மேலும் வலுப்படுத்துவதற்கான இந்தியாவின் உறுதிப்பாட்டை உயர் ஸ்தானிகர் தெளிவுபடுத்தினர்.

தற்போதைய சூழ்நிலையில் இரு தரப்பினருக்கும் இடையிலான வர்த்தக மற்றும் அரச தரப்பினரின் தொடர்புகளை நிலைபேறானதாக மாற்றுவதற்கு எண்ணிம (டிஜிற்றல்) கட்டமைப்பினை பயன்படுத்த வேண்டியதன் அவசியம் தொடர்பாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (ஜ-4)



கிழக்குப் பல்கலைக்கழகப் படுகொலையின் 30 ஆவது ஆண்டு நினைவுதினம் நேற்று வந்தாறுமூலை பல்கலைக்கழக வளாகத்தில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

# குடியிருப்புக்குள் சருகுபுலி; பாதுகாப்பாக மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு- பெரிய கல் லாறு பகுதியில் இடம்பெற்ற விபத்தில் சிக்கி காயமடைந்த நிலையில் பொது மக்களின் குடியிருப்புகளுக்குள் புகுந்த சருகுபுலி பாதுகாப்பாக மீட்கப்பட்டு வனஜீவராசிகள் திணைக்களத்தினால் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு, மட்டக்களப்பு- கல்முனை பிரதான வீதியில் பெரிய கல்லாறு பகுதியில் விபத்தில் சிக்கிய சருகு புலி மக்களின் குடியிருப்புகளுக்குள் புகுந்ததால் அப்பகுதியில் பதற்றம் நிலவியது.

இவ்விடயம் தொடர்பாக வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து, அங்கு வந்த அதிகாரிகள் மற்றும் பிரதேச இளைஞர்களின் ஒத்துழைப்புடன் குறித்த சருகு புலி பிடிக்கப்பட்டு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

நாட்டில் அழிந்து வரும் உயிரினமாகவும் பாதுகாக்கப்பட வேண்டிய இனமாகவும் சருகுபுலி காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# ஏற்றுமதிப் பொருளாதாரத்தை விருத்தி செய்வதில் அரசு கவனம்

(கொழும்பு)

எதிர்காலத்தில் இறக்குமதிகளால் நிறைந்த நாடு என்பதற்கு அப்பால் ஏற்றுமதி பொருளாதாரத்தை வெற்றி கொண்டதாக எம் நாட்டை மாற்றியமைக்க வேண்டும். எனவே அதற்குத் தேவையான தொழில்நுட்ப வசதிகளையும் மனித வளத்தையும் விருத்தி செய்வது உட்பட ஏனைய காரணிகள் குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தவுள்ளதாக கைத்தொழிற்றுறை அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

கைத்தொழில் அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில்கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கொரோனாவுக்கு



முன்னர் தேசிய ஆடை உற்பத்தியாளர்களுடன் நடத்திய சந்திப்பின் போது அவர்களது பிரச்சினைகள் குறித்து ஆழமாக ஆராயப்பட்டதுடன், அவர்களின் ஆடைகளை ஏற்றுமதி செய்வதற்கான தடைக்ள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

இதற்காக 'சர்வதேச ரீதியான சாதாரண சந்தை வாய்ப்புகள்' என்ற தொனிப்பொருளில் இவர்களுக்கு சர்வதேச சந்தை வாய்ப்புகள் மற்றும் ஏற்றுமதி தொடர்பிலான விழிப்புணர்வுகளை ஏற்படுத்த திட்டமிட்டிருந்தோம்.

மக்களுடைய அரசாங்கம் என்ற அடிப்படையில் மக்களுக்கான பணிகளை செய்வது எமது பொறுப்பு. அதன் பிரகாரம் தேசிய ஆடை உற்பத்தியாளர்களுக்கு ஆடை ஏற்றுமதி தொடர்பில் விளக்கமளிப்பது அமைச்சின் பொறுப்பாகும். ஏற்றுமதி சபை மற்றும் துறை சார் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி இந்நடவடிக்கைகளை நாம் முன்னெடுத்து வருகிறோம். தேசிய ஆடை உற்பத்தி தொடர்பில் எமது அரசாங்கம் அதிகூடிய கவனத்தை செலுத்தியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-2)

# பூட்டான் மாணவர்கள் 70 பேர் நாட்டிற்கு

(கொழும்பு)

இலங்கையில் உயர் கல்வியை மேற்கொண்டுள்ள பூட்டான் மாணவர்கள் 70 பேர் நாட்டிற்கு அழைத்துவரப்பட்டுள்ளனர்.

குறித்த மாணவர்கள் நேற்று முற்பகல் 10.55 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இந்த நிலையில் குறித்த அனைவரும் விமான நிலையத்தில் பி.சி.ஆர். பரிசோதனைகளுக்குட்படுத்தப்பட்டுள்ளதுடன் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். (ஜ-4)

# காற்றின் வேகம் அதிகரிக்கும்

(கொழும்பு)

நாட்டை சூழவுள்ள கடற்பிராந்தியங்களில் அடுத்து வரும் இரண்டு தினங்களுக்கு காற்றின் வேகமானது அதிகரித்து காணப்படுமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று விடுத்துள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடற்பிராந்தியங்களில் மணிக்கு 70 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசும் என்பதால் கடற்றொழிலாளர்கள் மிகவும் அவதானமாக செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மேல், சப்ரகமுவ, தென், மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஊவா, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலும், முல்லைத்தீவு மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களிலும் மாலை வேளைகளில் மழை பெய்யுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் இடியுடன் மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் பொது மக்கள் பாதுகாப்பாக செயற்படுமாறும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. (ஜ-6)

# பட்டதாரிகளுக்கு இராணுவப் பயிற்சி

## மீள் பரிசீலனை அவசியம் என்கிறார் தேரர்

(கொழும்பு)

பட்டதாரிகளுக்கு வழங்கப்படும் இராணுவப் பயிற்சிக்கு பதிலாக முறையான அரச நிர்வாக செயற்பாட்டு பயிற்சிகளை வழங்குமாறு தென்னே ஞானநந்ததேரர் கோரிக்கை விடுத்தார்.

அத்துடன் இவ்வாறு இணைத்துக் கொள்ளப்பட்ட பட்டதாரிகளுக்கு 5 படிமுறைகளில் பயிற்சிகள் வழங்கப்பட உள்ளதோடு அவற்றில் முதல் பயிற்சி முழுமையான இராணுவ பயிற்சியெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே இந்தப் பயிற்சி தொடர்பில் பட்டதாரிகளும் மீள் பரிசீலனை செய்யவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# மாகாண முறையை நீக்க இடமளியோம்

## காஞ்சன காட்டம்

(கொழும்பு)

**மாகாண சபை முறைமையினை நீக்க ஒருபோதும் இடமளிக்க முடியாது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மாகாண சபை உறுப்பினர் ஒன்றியத்தின் தலைவர் காஞ்சன ஜயரத்ன தெரிவித்தார்.**



பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று கடந்த வியாழக்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்தி ப்பில் கலந்து கொண்டு கருத் துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடு கையில்,

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இரண்டு பிரதான தேர்தல்களில் வெற்றி பெறுவதற்கு மாகாண சபை உறுப்பினர்கள் வழங்கிய ஒத்துழைப்பு இன்றியமையாததாகும். மாகாண சபை உறுப்பினர் பதவி வகித்தவர்கள் 28 பேர் நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலில் பொதுஜன பெரமுன சார்பில் போட்டியிட்டு பாராளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ளார்கள்.

நல்லாட்சி அரசாங்கத்தினால் காணாமலாக்கப்பட்ட மாகாண சபைத்தேர்தலை அரசாங்கம் பழைய முறையில் விரைவாக நடத்த வேண்டும். இதன் பொறுப்பு பாராளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ள முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள் 28 பேருக்கும் உண்டு.

மாகாண சபைகள் ஊடாக அரச சேவைகள் பல முன்னெடுக்கப்படுகின்றன. ஒரு சில மாகாணங்களில் குறைபாடுகள் காணப்படுகின்றன. அவை அரசியல் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு காணப்படுகின்றன. எனவே மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் ஜனாதிபதி, பிரதமர் கவனம் செலுத்த வேண்டும்.

13 ஆவது திருத்தத்தை நீக்கவும், மாகாண சபை முறைமையை இல்லாதொழிக்கவும் குறிப்பிடும் கருத்துக்கள் தொடர்பில் அரசாங்கம் உறுதியான நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டும். மாகாண சபை முறைமை நீக்கத்திற்கு ஒருபோதும் இடமளிக்க மாட்டோம் என திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# இலங்கை உள்ளிட்ட 12 நாடுகளில் சீன இராணுவ தளங்கள்

## பென்டகன் எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கை உள்ளடங்கலாக குறிப்பிட்ட சில நாடுகளில் இராணுவ வசதிகளை ஏற்படுத்துவதற்கு சீனா திட்டமிட்டு வருவதாகவும் அதனூடாக அந்த நாடுகளுக்கு தனது மக்கள் விடுதலை இராணுவத்தை அந்த நாடுகளுக்கு அனுப்பிவைத்து மிகவும் விரிவான - நிலைபேறான இராணுவ ஆதிக்கத்தை அடைந்துகொள்வதற்கு சீனா முயற்சிக்கின்றது என்று பென்டகன் வெளியிட்டிருக்கும் அறிக்கையொன்றில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

சீனா வெளிநாடுகளில் தமக்குரிய கட்டமைப்பு ரீதியான வசதிகளை நிறுவுவதற்கு முற்பட்டு வரும் அதேவேளை, மக்கள் விடுதலை இராணுவத்தை அனுமதிப்பதற்கான அடிப்படைக் கட்டமைப்புக்களையும் உருவாக்குவதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

கிழக்கு ஆபிரிக்காவில் அமைந்துள்ள ஜிபூரியில் தற்போது இராணுவத்தளமொன்றைக் கொண்டிருக்கும் சீனா கடல் மார்க்க, ஆகாயமார்க்க மற்றும் காலாட்படை ஆகியவற்றுக்கு உதவியளிக்கக்கூடிய வகையில் மேலும் பல்வேறு கடல் கடந்த நாடுகளில் இராணுவத்திற்கு வசதியளிக்கும் கட்டமைப்புக்களை நிறுவுவதற்குத் திட்டமிட்டு வருகின்றது.

"2020 இல் மக்கள் சீனக் குடியரசு தொடர்புபடும் இராணுவ மற்றும் பாதுகாப்பு முன்னேற்றங்கள்" என்ற தலைப்பிலான தமது வருடாந்த அறிக்கையை பென்டகன் அமெரிக்க காங்கிரஸில் சமர்ப்பித்திருக்கிறது. சீனா தனது இராணுவத்திற்கு வசதியளிக்கும் கட்டமைப்புக்களை உருவாக்குவதற்கு மியன்மார், தாய்லாந்து, சிங்கப்பூர், இந்தோனேசியா, பாகிஸ்தான், இலங்கை, ஐக்கிய அரபு இராச்சியம், கென்யா, சீஷெல்ஸ், தன்சானியா, அங்கோலா மற்றும் தஜிகிஸ்தான் ஆகிய நாடுகள் மீது கவனம் செலுத்தி வருகின்றது என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியிருக்கிறது.

இவ்வாறு சர்வதேச நாடுகளில் அமைக்கப்படும் மக்கள் விடுதலை இராணுவத்திற்கு வசதியளிக்கும் வகையிலான கட்டமைப்புக்கள், அமெரிக்க இராணுவ நடவடிக்கைகளில் தலையீடு செய்யலாம் என்பதுடன் அமெரிக்காவிற்கு எதிரான நடவடிக்கைகளுக்கு அதனால் உதவிகள் வழங்கப்படலாம் என்றும் பென்டகன் அதன் அறிக்கையில் தெரிவித்திருக்கிறது. (2-7)

# பிடியாணை

(கொழும்பு)



பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்காரவை கைது செய்யுமாறு காலி பிரதான நீதவான் ஹர்ஷ கெக்குணுவெல நேற்று முன்தினம் பிடியாணை பிறப்பித்து உத்தரவிட்டுள்ளார்.

வழக்கொன்றில் சாட்சியமளிப்பதற்காக அவர் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்ற காரணத்தால் இவ்வாறு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ஜ-2)

# ஜே.ஆரின் நிறைவேற்று அதிகாரம் 20 என்ற போர்வையில் மீண்டும் அறிமுகம் - மங்கள சாடல்

(கொழும்பு)

1978 ஆம் ஆண்டில் எதிர்ப்பை வெளியிட்ட ஜே.ஆர். ஜெயவர்தனவின் விரும்பத்தகாத கூறுகளைக்கொண்ட வலுவான நிறைவேற்றதிகாரப் பதவி, தற்போது கோட்டாபய ராஜபக்ஷவால் அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தம் என்ற பெயரில் மீள அறிமுகம் செய்யப்படுகிறது என முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர விசனம் வெளியிட்டுள்ளார். அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த விடயங்களில் நான்கைத்தவிர ஏனைய அனைத்தையும் நீக்கும் வகையில் 20 ஆவது திருத்தத்தைக் கொண்டு வருவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியதையடுத்து, அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தம் வர்த்தமானி அறிவித்தலாக வெளியிடப்பட்டுள்ளது.

இதனூடாக 19ஆவது திருத்தத்தில் குறைக்கப்பட்டிருந்த ஜனாதிபதியின் அதிகாரங்களை மீண்டும் அவருக்கே வழங்குவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளுடன் நிறைவேற்றிக்கொள்வதற்கு அரசாங்கம் எதிர்பார்ப்பதாக தெரிவித்துள்ளார். (ஜ-4)

# எண்ணெய்க் கசிவால் ஏற்படும் பாதிப்புக்கு உடன் நடவடிக்கை எடுங்கள்

## பிரதமர் பணிப்பு



(கொழும்பு)

சங்கமன்கண்டி இறங்குதுறையில் தீ விபத்திற்குள்ளாகியுள்ள நியூ டயமன்ட் எண்ணெய் கப்பலினால் கடல் சூழலுக்கு ஏற்படக் கூடிய பாதிப்பை தடுப்பதற்கு தேவையான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

24 மணிநேரமும் செயற்படக்கூடிய ஒரு கூட்டு நடவடிக்கையின் ஊடாக விபத்திற்குள்ளான கப்பலினால் கடல் சூழலுக்கு ஏற்படக்கூடிய பாதிப்பை தடுப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுக்குமாறு குறித்த விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் பிரதமர் தெரிவித்துள்ளார்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழுள்ள கடற் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் தலைமையிலான சபையின் தலையீட்டுடனும் சம்பவ முகாமைத்துவ குழு, கடல்வள பாதுகாப்பு மற்றும் கடல்வள முகாமைத்துவ திணைக்களம், இலங்கை கடற்படை, இலங்கை விமானப்படை, இலங்கை துறைமுக அதிகார சபை, சுற்றாடல் அதிகாரசபை, கடற்றொழில் திணைக்களம், அனர்த்த முகாமைத்துவத் திணைக்களம், வளிமண்டலவியல் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உள்ளிட்ட 15 நிறுவனங்கள் ஒன்றிணைந்து விபத்திற்குள்ளான கப்பலின் தீயைக் கட்டுப்படுத்துவதற்கும், கடல் சூழலுக்கு ஏற்படக்கூடிய பாதிப்பை குறைப்பதற்கான நடவடிக்கைகளிலும் மேற்பார்வை செயற்பாடுகளிலும் ஈடுபட்டுள்ளன. (ஜ-2)

# ராகு-கேது பெயர்ச்சிப் பலன்கள்

## 01.09.2020 - 20.03.2022

## பத்தில் வருகிறது ராகு... முத்தான தொழிலில் இனி முன்னேற்றம்!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



### சிம்ம இராசி வாசகர்களே!

இதுவரை உங்கள் இராசிக்கு 11ஆம் இடமான லாப ஸ்தானத்தில் சஞ்சரித்து வந்த ராகு பகவான், செப்டெம்பர் முதலாம் திகதி முதல் தொழில் ஸ்தானம் எனப்படும் 10ஆம் இடத்தில் இருக்கிறார். கேது பகவான் உங்கள் இராசிக்கு 4ஆம் இடமான சுகஸ்தானத்திற்கு அதே நாளில் வந்துள்ளார்.

இதற்கிடையில் நவம்பர் 15ஆம் திகதி மகர இராசிக்கு குரு செல்கின்றார். அங்கு அவர் நீச்சம் பெறுகின்றார். நீச்சம் பெற்றாலும் அவர் பார்வைக்கு பலன் உண்டு. அதன்பிறகு டிசெம்பர் 26ஆம் திகதி மகர இராசிக்கு சனி பகவான் பெயர்ச்சியாகிச் செல்லப்போகின்றார். உங்கள் இராசிக்கு 6, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி பகவான். அவர் 6ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது அவரது பார்வை பதியும் இடங்களில் எல்லாம் மாற்றங்கள் உருவாகும். 2021 ஆம் வருடம் நவம்பர் 13 ஆம் திகதி குரு, கும்ப இராசிக்குச் செல்கின்றார். அப்பொழுது உங்கள் இராசியையும், 3, 11 ஆகிய இடங்களையும் பார்க்கப் போகின்றார். இவற்றையெல்லாம் அடிப்படையாக வைத்து ராகு-கேது பெயர்ச்சி பலன்களைப் பார்ப்போம்.

### தொழில் வளர்ச்சி தரும் ராகு

### சுபகாரியங்களை ஏற்படுத்தும் கேது



தொழில் ஸ்தானம் எனப்படும் 10ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் ராகுவால் தொழில் வளம் மிகச் சிறப்பாக இருக்கும். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும். தற்போதுள்ள தொழிலை விரிவுபடுத்தும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். வங்கிகளில் இருந்து கடனுதவி கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு முன்னேற்றங்களும், மேலதிகாரிகளின் ஆதரவும் கிடைக்கும். அரசு வேலைக்கு விண்ணப்பித்தவர்களுக்கு அது கிடைக்கும் வாய்ப்பும் உண்டு.

நான்காமிடத்தில் சஞ்சரிக்கும் கேதுவால் ஆரோக்கியத்தில் சிறுசிறு தொல்லைகள் வந்தாலும் உடனுக்குடன் நிவர்த்தியாகும். இல்லத்தில் சுபகாரியப் பேச்சுக்கள் கைகூடும். பூமி விற்பனையால் தனலாபம் கிடைக்கும். பிள்ளைகளின் கல்வி, கல்யாணம் சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் தடைகள் ஏற்பட்டு அகலும். அர்த்தாஷ்டம கேதுவின் ஆதிக்க காலத்தில் முட்டுக்கட்டைகள் விலக எதையும் திட்டமிட்டுச் செய்வது நல்லது.

### செவ்வாய் சாரத்தில் ராகுவின் சஞ்சாரம் (01.09.2020 முதல் 04.01.2021 வரை)

மிருகசீரிட நட்சத்திரக்காலில் செவ்வாய் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது, மிகுந்த நற்பலன்கள் கிடைக்கும். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். குடும்பத்தில் நிம்மதி பிறக்கும். திருமணம், குழந்தைப்பேறு, பணவரவு, வீடுகட்டும் யோகம் போன்றவற்றில் எந்த முயற்சி செய்தாலும் அது கைகூடும். வீண் விரோதங்கள் விலகும். அசையா சொத்துக்கள் வாங்கி அதில் வீடுகட்டிக் குடியேறும் ஆசை நிறைவேறும். ஆட்சிக்கட்டிலில் இருப்பவர்களின் அன்புக்கு பாத்திரமாகி, வரும் வாய்ப்புகளை எல்லாம் உபயோகப்படுத்திக் கொள்வீர்கள். விலகிச்சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து இணையலாம்.

### சந்திரன் சாரத்தில் ராகுவின் சஞ்சாரம் (05.01.2021 முதல் 12.09.2021 வரை)

சந்திரனின் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது, விரயங்கள் கூடுதலாக இருக்கும். விழிப்புணர்ச்சியுடன் செயற்பட வேண்டிய நேரமிது. உங்கள் இராசிக்கு 12ஆம் இடத்திற்கு அதிபதி சந்திரன் என்பதால் மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும்.

எதையும் திட்டமிட்டு செய்யமுடியாது. இடமாற்றங்கள், வீடு மாற்றங்கள் எதிர்பாராத விதத்தில் வந்தாலும் திருப்தி ஏற்படாது. வாகனப் பழுதுகளால் வாட்டம் ஏற்படும். பொல்லாதவர்களை இனம் கண்டுகொள்வது நல்லது. எதிர்மறைச் சிந்தனைகள் அதிகரிக்கும் நேரமிது.

### சூரியன் சாரத்தில் ராகுவின் சஞ்சாரம் (13.09.2021 முதல் 20.03.2022 வரை)

கார்த்திகை நட்சத்திரக்காலில் சூரியன் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது, நல்ல வாய்ப்புகள் பலவும் இல்லம் தேடி வரும். உங்கள் இராசிநாதனே சூரியன் என்பதால் எடுக்கும் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். புகழ் மிக்கவர்களின் ஒத்துழைப்பால் திருப்பங்கள் பலவும் காண்பீர்கள். கோபத்தைக் குறைத்துக்கொள்வது நல்லது. அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு பதவிகளும், பொறுப்புகளும் வந்து சேரும். அரசு வேலைக்கு முயற்சிகள் செய்திருந்தால் அது கிடைக்கக்கூடிய வாய்ப்பு உண்டு.

### பாதசார அடிப்படையில் கேது தரும் பலன்கள்

சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் கேது பகவான் முதலில் புதன் சாரத்திலும், பிறகு சனி சாரத்திலும் அதன்பிறகு குரு சாரத்திலும் சஞ்சரிக்கப் போகின்றார். 'நிழல் கிரகம்' என்று வர்ணிக்கப்படக் கூடிய கேது பகவான், நிகழ்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்வாரா என்று பார்ப்போம். பாதசார அடிப்படையில் சஞ்சரிக்கும் பொழுது பகை கிரகத்தின் சாரமாக இருந்தால், அதற்குரிய பரிகாரங்களையும், வழிபாடுகளையும் செய்தால் நற்பலன்களைப் பெறமுடியும்.

### புதன் சாரத்தில் கேதுவின் சஞ்சாரம் (01.09.2020 முதல் 09.05.2021 வரை)

கேட்டை நட்சத்திரக்காலில் புதன் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது மிகுந்த நற்பலன்கள் உங்களுக்கு வந்து சேரும். தன லாபாதிபதியான புதன் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, திட்டமிட்ட காரியம் திட்டமிட்டபடியே நடைபெறும். கட்டடம் கட்டும் முயற்சி கைகூடும். கடை திறப்புவிழா மற்றும் சுயதொழில் தொடங்கும் யோகங்கள் உண்டு. குடும்பத்தில் உள்ளவர்களின் குறைகளை தீர்த்து வைப்பீர்கள். வீட்டை விரிவு செய்து கட்ட வேண்டும் அல்லது கட்டிய வீட்டைப் பழுது பார்க்க வேண்டுமென்று நினைத்திருந்தால் அந்த எண்ணங்களைப் பூர்த்தி செய்வீர்கள். பிள்ளைகளுக்கு வேலை கிடைத்து உதிரி வருமானங்களும் வந்து சேரலாம். வாழ்க்கைத் துணைக்கு படிப்பிற்கேற்ற வேலை கிடைக்கும்.




### சனி சாரத்தில் கேதுவின் சஞ்சாரம் (10.05.2021 முதல் 16.01.2022 வரை)

உங்கள் இராசிக்கு 6, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி பகவான். அவருடைய சாரத்தில் கேது வரும்பொழுது எதிரிகளின் பலம் கூடும். எதையும் திருப்தியாகச் செய்ய இயலாது. கல்யாண வாய்ப்புகள் கைகூடுவது போல் இருந்து கைநழுவிச் செல்லலாம். வெளிநாட்டில் இருந்து எதிர்பார்த்த தகவல் வருவதில் தாமதம் ஏற்படும். நண்பர்கள் நம்பிக்கைக்குரிய விதம் நடந்து கொள்ள மாட்டார்கள். உடல் நலத்தில் அடிக்கடி தொல்லைகள் குறுக்கிடும். குறிப்பாக எலும்பு, நரம்பு சம்பந்தப்பட்ட பாதிப்புகள் ஏற்பட்டு அகலும். பணப் பரிவர்த்தனையில் பாதுகாப்புடன் செயற்படுவது நல்லது.



### குரு சாரத்தில் கேதுவின் சஞ்சாரம் (17.01.2022 முதல் 20.03.2022 வரை)

குரு பகவான், உங்கள் இராசிக்கு 5, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர். எனவே இக்காலத்தில் பிள்ளைகளால் பெருமை சேரும். பூர்வீக சொத்துக்களில் இருந்த வில்லங்கங்கள் விலகும். இழந்த வாய்ப்புகளை மீண்டும் பெறக்கூடிய நேரமிது. சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்து உள்ளவர்களின் ஒத்துழைப்பால் தொழில் வளர்ச்சி காண்பீர்கள். முன்னோர்கள் கட்டிவைத்து சிதிலமடைந்த கோவில்களை இப்பொழுது சீர்செய்ய முன்வருவீர்கள். தன்னம்பிக்கையும் கூடும். குடும்பத்தில் நடந்த சொல் யுத்தங்கள் சுமுகமாக முடியும். பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு புதிய திருப்பங்கள் ஏற்படும்.

### வளர்ச்சி தரும் வழிபாடு

பத்தாமிடத்து ராகுவால் தொழில் வளர்ச்சி சிறக்கவும், 4ஆம் இடத்து கேதுவால் நலம் யாவும் வீடு வரவும் நந்தியெம்பெருமானுக்குரிய பதிகங்களை இல்லத்தில் பாடி வழிபடுங்கள். அதோடு, ஞாயிற்றுக்கிழமை தோறும் சூரியனுக்குரிய சிறப்பு வழிபாடுகளை இல்லத்திலேயே செய்து வருவது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

ராகு-கேது பெயர்ச்சியின் விளைவாக குடும்பத்தில் சந்தோஷ வாய்ப்புகள் அதிகரிக்கும். கணவரின் அன்பிற்கு பாத்திரமாக விளங்குவதோடு மற்ற குடும்ப உறுப்பினர்களும் உங்களைப் பாராட்டும் விதத்தில் நடந்து கொள்வீர்கள். சனிப்பெயர்ச்சிக்குப் பிறகு உடல் நலத்தில் கவனம் தேவை. தடைப்பட்ட கல்யாணம் தானாக நடைபெறும். பணிபுரியும் பெண்களுக்கு எதிர்பார்த்த சலுகைகளும், உயர்பதவிகளும் கிடைக்கும். சதுர்த்தி விரதமிருந்து விநாயகப் பெருமானை வழிபட்டு வருவது நல்லது.

(தொடரும்)

# ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம்

(மன்னார்)

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் மாந்தை மேற்கு பிர தேச செயலாளரின் ஏற்பாட்டில் கடந்த வியாழக்கிழமை மன் னார் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பி னருமான காதர் மஸ்தான் தலைமையில் இடம்பெற்றது.

குறித்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான சாள்ஸ் நிர் மலநாதன், செல்வம் அடைக் கலநாதன், எஸ்.வினோநோக ரதலிங்கம், குலசிங்கம் திலீ பன் ஆகியோர் கலந்து கொண் டனர்.

இதன்போது மாந்தை மேற்கு பிரதேசத்தின் பல்வேறு அபிவி ருத்தித் திட்டங்கள் தொடர்பாக ஆராயப்பட்டன.

குறிப்பாக மாந்தை மேற்கு பிரதேசத்தின் கல்வி, நீர்ப்பா சனத் திட்டம், விவசாயம், கால் நடை, சுகாதாரம், வைத்திய சேவை, போக்குவரத்து, குடி நீர், வீதி அபிவிருத்தி உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர் பாக ஆராயப்பட்டன.

மேலும் தடைப்பட்டுள்ள மற்றும் இடையில் விடப்பட்டு ள்ள அனைத்து அபிவிருத்தித் திட்டங்களும் முழுமையாக்கப் பட வேண்டும் என அதிகாரி களினால் கோரிக்கை முன் வைக்கப்பட்டது. (5-4-285)

# மணல் அகழ்வில் ஈடுபட்ட வாகனங்களுடன் ஐவர் கைது

(தருமபுரம்)

சிறப்பு அதிரடிப்படையின ரால் ஐவர் நேற்றுக் கைது. கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான சிறப்பு அதிரடிப்படையினருக்கு கிடைக் கப்பெற்ற தகவலுக்கமைய தரு மபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாற்றுப்பகுதியில் அனும திப்பத்திரத்திற்கு முரணான வகையில் மணல் அகழ்ந்த குற்றச்சாட்டில் நான்கு டிப்பர்கள் மற்றும் ஒரு உழவு இயந் திரத் துடன் அதன் சாரதிகள் ஐவரும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் தரு மபுர பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என பொலிஸ் சிறப்பு அதிரடிப்படை யினர் தெரிவித்தனர்.(5-4-316)



சர்வமத சமாதான பெண்கள் அமைப்பின் நிதி அனு சரணையில் வீரபுரம், பாவற்குளம், பூந்தோட்டம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பெண் தலைமைத்துவ 5 குடும்பங் களுக்கு இருபது கோழிக்குஞ்சுகள், அதற்குரிய உபகரண ங்கள் என்பனவும் அண்மையில் வழங்கப்பட்டன.

(படம்:- நெளுக்குளம் செய்தியாளர்)

# 19 ஐ நீக்கி 20 ஐ கொண்டுவருவது

## ஒரு குடும்பத்தின் சர்வாதிகார ஆட்சிக்காகவே

(கிளிநொச்சி)

பத்தொன்பதாவது திருத்தச் சட்டத்தை நீக்கி 20 ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டு வருவது என்பது ஜனநாயக த்தைக் குழிதோண்டிப் புதைக் கும் செயல் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாரா ளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கனகாம்பிகைக்குள கிராம மக்களுடனான சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவி த்தார்.

இலங்கை அரசியல் வரலா ற்றில் அரசியல் யாப்புக்கள் அனைத்தும் சிறுபான்மையின மக்களின் நலன்களைக் கருத் தில் கொள்ளாது சிங்கள மக்களின் நலன்களைக் கருத் தில் கொண்டே உருவாக்கப்பட் டது. தமிழ்த் தலைவர்களி னதோ தமிழ் மக்களினதோ கரு த்துக்கள் எதையும் கருத்தில் கொள்ளாது உருவாக்கப்பட்டன.

13 ஆவது திருத்தச் சட்டம் என்பது இந்திய நாட்டினுடைய அழுத்தம் காரணமாக கொண்டு வரப்பட்டது. இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் தமிழர் தரப்பாக இந்தியாவே கையொப்பமிட்டி ருந்தது.

எமது பிராந்தியத்தினுடைய வல்லரசாக இருக்கும் இந்தியா தொடர்ந்தும் தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை பார்த்துக்கொண்டிருக்க மாட் டார்கள் என இப்போதும் ஈழத் தமிழர்கள் நம்புகின்றனர்.

சுயாதீன ஆணைக்குழுக் களை கொண்டமைந்த 19 ஆவது திருத்தச் சட்டத்தை நீக்கி 20 ஆவது திருத்தச் சட்டத்தை கொண்டுவருவது என்பது ஒரு குடும்பத்தின் சர்வாதிகார ஆட் சிக்காகவே ஆகும்.

மிலேனிய ஆண்டுகளை கடந்து வந்த இலங்கை தன்னை இந்த உலக ஒழுங்கிற்கு ஏற்ப



மாற்றியமைத்து தன்னை ஒரு பன்மைத்துவ தன்மையை ஏற்றுக்கொள்ளாத இலங்கை உலகப் பந்தில் தனக்குத் தானே சவக்கிடங்குகளை வெட்டத் தொடங்கி இருக்கிறது.

தமிழர்களின் ஒற்றுமை யைச் சிதைத்து விட்டதாக மார் தட்டும் ராஜபக்ஷக்கள் சிங்கள வர்களை ஏக தலைமைத்து வத்தின் கீழ் கொண்டு வந்தி ருப்பதாக மார்தட்டிக் கொள் கிறார்கள் எனவும் அவர் தெரி வித்தார். (5-4)

# சட்டவிரோதமாக தமிழகம் சென்ற இலங்கையர் கைது

(மன்னார்)

இலங்கையில் இருந்து சட்ட விரோதமாக படகு மூலம் தமி ழகத்துக்குள் இலங்கையை சேர்ந்தவர்கள் ஊடுருவி உள்ள தாக இராமேஸ்வரம் பொலிஸா ருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து தனுஸ்கோடி கடற்கரையில் நேற்று முன்தி னம் வெள்ளிக்கிழமை இரவு ரோந்துப் பணியில் ஈடுபட்ட னர்.

கம்பி பாடு கடற்கரையில் சந்தேகத்துக்கு இடமான முறை யில் நின்ற ஒருவரைக் கைது செய்து விசாரணை செய்த னர்.

இதன்போது குறித்த நபர் இலங்கையின் மன்னார் மாவ ட்டத்தைச் சேர்ந்த பிரதீப்குமார் பண்டாரநாயக்க (வயது-30) என விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இவர் குறித்து மத்திய உள வுத்துறை அதிகாரிகள் தீவிர மாக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (5-4-285)

# தனிமைப்படுத்தலை நிறைவு செய்த 164 பேர் சொந்த இடங்களுக்கு

(நெளுக்குளம்)

கொரோனா தாக்கம் கார ணமாக வெளிநாடுகளிலு ள்ள இலங்கையர்களை நாட் டிற்கு அழைத்துவரும் செய ற்பாடுகள் அரசினால் முன் னெடுக்கப்பட்டு வருகின் றது.

இந்நிலையில் சிங்கப்பூரிலி ருந்து 164 இலங்கையர்கள் விசேட விமானங்களின் மூலம் நாட்டிற்கு அழைத்து வரப்பட்டு வவுனியா வேலங்குளம் விமா னப்படை தனிமைப்படுத்தல் மையத்தில் தனிமைப்படுத் தப்பட்டனர்.

இவர்கள் தனிமைப்படுத் தலை நிறைவு செய்து நேற்று சொந்த இடங்களுக்கு அனு ப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

(5-4-299)

# வாகனங்களுடன் முதிரைக்குற்றிகள் மீட்பு

## சாரதிகள் தப்பியோட்டம்



(நெளுக்குளம்)

வவுனியா ஓமந்தை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாலமோட்டை பகுதியில் சட்டவிரோதமான முறையில் கடத்தி செல்லப்பட்ட முதிரை மரக்குற்றிகளை பூவர சங்குளம் விசேட அதிரடிப்படை யினர் மீட்டுள்ளனர்.

பாலமோட்டை பகுதியில் முதிரை மரங்கள் கடத்தப்பவு ள்ளதாக பூவரசங்குளம் விசேட அதிரடிப்படையினருக்கு கிடை த்த இரகசியத் தகவலையடுத்து நேற்று அதிகாலை குறித்த பகுதியில் பாதுகாப்புக் கடமை யில் ஈடுபட்டிருந்த விசேட அதி ரடிப்படையினர் மரக்குற்றி களை ஏற்றிச்சென்ற இரண்டு வாகனங்களை வழி மறித்துள் ளனர். எனினும் வாகனம் நிறு த்தாமல் சென்றதால் அதனை துரத்திச்சென்று தடையை ஏற் படுத்தினர்.

இதனால் நிலைகுலைந்த சாரதிகள் வாகனங்களை வீதி யில் நிறுத்தி விட்டு தப்பி ஓடியு ள்ளனர். குறித்த சம்பவத்தில் 10 இலட்சம் ரூபாய் பெறுமதி யான 18 முதிரை மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் அவ ற்றை கடத்திச்செல்ல பயன்பட்ட இரண்டு கப்ரக வாகனங்களும் கைப்பற்றப்பட்டன.

கைப்பற்றப்பட்ட முதிரை குற் றிகளை வனவளத்திணைக் களத்தினரிடம் ஒப்படைக்க உள் ளதாக விசேட அதிரடிப்படையி னர் தெரிவித்தனர்.(5-4-299)



இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 154 ஆவது ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு வவுனியா பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் வவுனியா காமினி மகாவித் தியாலயத்தில் மரம் நாட்டு நிகழ்வு அண்மையில் பாட சாலை அதிபர் தலைமையில் இடம்பெற்றது. இந்நிக ழ்வில் வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.பி. திஸ்ஸலால் த சில்வா, வவுனியா தலைமை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர்.மானமடுவ ஆகியோர் கலந்து கொண்டனர்.

(படம்:-நெளுக்குளம் செய்தியாளர்)

தர்மம் ஒன்றுதான் இறந்த பிறகும் வாழ்கிறது; மற்றவைகள் அனைத்தும் உடலுடன் நாசமடைகின்றன. – ஆஸ்கர் வைல்ட்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஆபத்பாந்தவனான கிருஷ்ணன் சூதைத் தடுக்காதது ஏன்?

இதிகாச காப்பியமான மகா பாரதத்தை அனைவரும் கற்றறிய வேண்டும். இராமாயணத்தைக் கடந்து, மகாபாரதம் போதிக்கின்ற தத்துவங்கள் மனித வாழ்வுக்குத் தேவையானவை.

இராமாயணத்தில் அவதார புருசனாகிய இராமர் துன்பப்படுகின்றார்.

மகாபாரதத்தில் அவதார மூர்த்தியான கிருஷ்ண பரமாத்மா தர்மத்தை நிலைநாட்டுவதற்காகச் செயலாற்றி நிற்கிறார்.

அவதாரமாயினும் பூமியின்கண் வந்துற்றால் கன்மவினைப்பயன் பற்றிக் கொள்ளும் என்ற உண்மை இராமாயணத்தில் உணர்த்தப்படுகிறது.

மகாபாரதத்தில் அவரவர் செய்கின்ற பாவ புண்ணியங்களுக்கு ஏற்ப தண்டனை வழங்கப்பட்டு தீயோரை அழிப்பதும் நல்லோரைக் காப்பதுமான காரியம் நடந்தாகிறது.

இஃது இராமாயணம் – மகாபாரதம் என்ற இரு பெரும் இதிகாசங்கள் தொடர்பான ஒப்பிடுகை.

இவை ஒருபுறமிருக்க, கௌரவர் சபையில் திரௌபதியின் துகில் களையப்பட்ட போது, கண்ணா! என்ற அவலக்குரல் கேட்ட மாத்திரத்தில் ஆபத்பாந்தவனாகிய கிருஷ்ண பரமாத்மா திரௌபதியின் மானம் காத்தருளினான்.

இவ்வாறு திரௌபதியின் மானம் காத்த கண்ணன், தருமர் சூதாடுவதைத் தடுக்காமல் இருந்தது ஏன்? அல்லது சூதாட்டத்தில் தருமர் வெற்றி பெறுவதாக நிலைமையை மாற்றாமல் விட்டது ஏன்? என்ற கேள்வி எழுகிறது.

இங்குதான் ஓர் உண்மைத் தத்துவத்தை நாம் புரிந்தாக வேண்டும். பாரதத்துக் கிருஷ்ணனைப் பொறுத்தவரை அதர்மமாகிய துரியோதனர் தரப்பை அழித்து, தர்மத்தின் பாத்திரமாக இருக்கக்கூடிய பாண்டவர்களை வெல்ல வைக்க வேண்டும்.

இதற்கான ஒரு வழியாக சூது அமைகிறது. சூதில் பங்கேற்க வேண்டாம் என்று தருமரைத் தடுப்பது கிருஷ்ணருக்கு கடினமன்று.

அதுதான் முடியவில்லை என்றாலும் பரவாயில்லை. சூதாட்டத்தில் தருமர் வெல்வதாகவும் துரியோதனன் தோற்பதாகவும் செய்தால் நாடு பாண்டவர்களுக்கு கிடைக்கும்

ஆனால் அஃது முறையன்று. தர்மத்தை தர்மத்தினூடாகவே அடைய வேண்டும். சூது அதர்மமானது. அதர்மத்தினூடு தர்மம் அடையப்பட்டால் அதுவும் அதர்மமே.

ஆகையால்தான், சூதில் தருமரைத் தோற்க வைக்கிறார் கிருஷ்ணர்.

தருமர் சூதில் தோற்பதனூடாக கௌரவர்களின் அதர்மத்தனம் வெளிப்படுத்தப்படும். அவ்வேளை பாண்டவர்கள் சபதம் செய்வர். அந்தச் சபதத்தினூடாக மகாபாரதப் போரை நடத்த முடியும்.

கௌரவர் – பாண்டவர் ஆகிய சகோதரர்களுக்கிடையில் சண்டை நடக்க வேண்டும். அப்போதுதான் தர்மத்தின் பக்கம் நிற்பது யார் என்பது புரியும்.

இதனாலேயே திரௌபதியின் மானம் காத்த ஆபத்பாந்தவன் தருமர் சூதாடுவதைத் தடுக்காமல் விட்டார்.

இதை நாம் கூறும்போது இது எதற்கானது என்று நீங்கள் கேட்கலாம்,

ஆம், 19ஆவது திருத்தச் சட்டமூலம் நீக்கப்படுவதும் 20 வருவதும் கூட, மகாபாரதத்தில் சகோதரர் சண்டை நடத்திய கிருஷ்ணனின் வேலையாக இருக்கலாம்.

# சிங்கராஜவனம் அச்சுறுத்தலில் இருப்பதாக யுனெஸ்கோவிற்கு மங்கள சமரவீர கடிதம்

(கொழும்பு)

சிங்கராஜவனத்திற்கு ஏற்பட்டிருக்கும் அச்சுறுத்தல் தொடர்பில் சுட்டிக்காட்டி, அதனைப் பாதுகாப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு வலியுறுத்தி முன்னாள் நிதிய மைச்சர் மங்கள சமரவீர ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி, விஞ்ஞான மற்றும் கலாசார அமைப்பிற்கு (யுனெஸ்கோ) கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

யுனெஸ்கோ அமைப்பின் பணிப்பாளர் நாயகம் ஒட்ரே அஸோலேவிற்கு அவர் அனுப்பிவைத்திருக்கும் கடிதத்தில், 1988 ஆம் ஆண்டில் யுனெஸ்கோ அமைப்பினால் உலக மரபுரிமையாக அங்கீகரிக்கப்பட்ட சிங்கராஜவனம் தற்போது அச்சுறுத்தலை எதிர்கொண்டிருக்கிறது என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, சிங்கராஜவனத்தை அண்டிய வீதியை விரிவாக்குவதற்கு முன்னர் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கை நிறுத்தப்பட்டது. எனினும் சிங்கராஜ வனத்தின் எல்லையில் அமையக்கூடிய வகையில் லங்காகமவில் இருந்து தெனியாயவிற்கு இலங்கை இராணுவம் வீதியொன்றை அமைக்கும்பணியை முன்னெடுத்துவருவது கடந்த ஓகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி வெளிப்படுத்தப்பட்டது.

இந்த நிர்மாணப் பணியில் பாரிய கனரக வாகனங்கள் பயன்படுத்தப்படுவதும் பெரிய மரங்கள் வெட்டப்படுவதும் சிங்க ராஜவனத்திற்கு குறுங்கால மற்றும் நீண்டகால அடிப்படையில் பல்வேறு பாதிப்புக்களை ஏற்படுத்தும்.

சிங்கராஜ வனத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியவாறான இந்த வீதி நிர்மாணத்தைக் கைவிடுமாறு அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும் என அவர் கோரியுள்ளார். (ஜ-4)

# வலுவிழந்தோரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த சமூக ஆர்வலர்களின் ஆதரவு அவசியம்

## வைத்தியர் நந்தகுமார் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

வலுவிழந்தோரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு சமூக ஆர்வலர்களின்ஆதரவுதேவையென வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் உபதலைவர் வைத்தியர் க.நந்தகுமார் தெரிவித்துள்ளார்.

வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்க வருடாந்த கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம் மாற்றுவலுவுடையவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக அமைக்கப்பட்டுள்ளது.

வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக எமது பிரதேசத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு முக்கிய பயிற்சிகளான தையல் பயிற்சி, மாலை கட்டுதல், கதிரை பின்னுதல், காகித உறை மடித்தல் போன்றவற்றை வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை நோக்கமாகக் கொண்டதுதான் இந்த நிறுவனம்.

1990ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த நிறுவனம் ஆரம்பத்திலிருந்து இன்றைய தினம் வரை மாற்றுத்திறனாளிகளுக்கான வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

இந்தச் செயற்பாடு மேலும் விரிவடைய வேண்டுமாயின் சமூக ஆர்வலர்கள் மற்றும் கொடையாளிகளின் ஆதரவு கிடைக்குமிடத்தில் எமது இந்த நிறுவனம் மென்மேலும் வளர்ச்சி அடைந்து மாற்றுத் திறனாளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவி புரியும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார். (ஜ-5-33)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ்அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும்பராமரிப்புவேலைகளுக்காக நாளை 07 ஆம் திகதி திங் கட்கிழமை காலை 8 மணி யிலிருந்து பிற்பகல் 5 மணிவரை

**வவுனியா பிரதேசத்தில்** பூவரசங்குளம், ஆண்டியப்புளியங்குளம் ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** கற்கிடந்தகுளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## ஊழல் மோசடி இடம்பெற வாய்ப்புள்ளதால் வேலைவாய்ப்புக்கள் இடைநிறுத்தப்பட்டன

### சுமந்திரன் சுட்டிக்காட்டு

(அராலி)

ஊழல் மோசடிகள் காரணமாகவே வடக்கு – கிழக்கில் ஒரு இலட்சம் வேலை வாய்ப்புகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அராலியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போது எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அது தொடர்பாக முறையிடுவதற்கு நாங்கள் நீதிமன்றத்திற்கு செல்ல முனைந்தோம்.


ஆனால் அந்த வேலை வாய்ப்பினை எடுத்துக் கொடுப்பதற்கு பலர் இலஞ்சம் கோரும் வாய்ப்புள்ளதாலேயே அது இடைநிறுத்தப்பட்டுள்ளது என்பதை அறிந்து நீதிமன்றம் செல்லும் முயற்சியை கைவிட்டோம்.

வேலைவாய்ப்புகள் கிடைக்காதவர்களுக்கு பொருளாதாரத்தை வளர்ப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்க அவர்களது சொந்த இடங்களிலேயே அமைப்புகளை நிறுவுவதற்கான முயற்சிகளை ஆரம்பித்துள்ளோம் எனத் தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டில் தண்ணீர் பிரச்சினை ஒரு முக்கிய பிரச்சினையாக காணப்படுகிறது.

அதற்கான தீர்வினை வழங்க உரிய முயற்சிகள் செய்வோம் என அவர் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-5-104)

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



- மிருதுவான பதில் சினத்தை மாற்றிவிடும். புண்படுத்தும் வார்த்தைகளோ ஆத்திரத்தைத்தான் கிளப்பிவிடும்.
- ஒரு சிறு குழந்தையைப் போலக் கடவுளின் ராஜ்யத்தை ஏற்றுக் கொள்ளாத எவனும் அதனுள் நுழைய மாட்டான்.
- உடைகளுக்காக நீங்கள் கவலைப்படுவானேன்? வயல் வெளியிலுள்ள லீலிப்புஷ்பங்கள் எப்படி வளருகின்றன என்று கருதிப் பாருங்கள். அவை உழைப்பதுமில்லை. நூற்பதுமில்லை.
- நேசத்தில் பயம் என்பதே இல்லை. பரிபூரணமான நேசம் பயத்தைப் புறம்பாக்கி விடுகிறது.
- சரீர முயற்சியின் பலன் சிறிதளவே. ஆனால், தெய்வீக தன்மையோ எல்லாவற்றிலும் அதிகமான பலன் தருவதாகும். இப்போதைய வாழ்விற்கும் இனி வரப்போகும் வாழ்விற்கும் உறுதி தருவதாகும்.
- முட்டாளுக்கு அவனது புத்தியீனத்திற்கு ஏற்ப பதில் சொல். பதில் சொல்லாவிட்டால் அவன் தன்னை அறிவாளி என்று நம்பிக் கொண்டிருப்பான்.
- அசட்டுத்தனமான வீண்கேள்விகளைத் தவிர்த்துவிடு. அவை சச்சரவுகளையே பிறப்பிக்கின்றன.

# யாழ்.கிரிக்கெட் சம்பியன்ஸ் - 2020

# கே.சி.சி.சி அணி அரை இறுதிக்கு தெரிவு



யாழ்.கிரிக்கெட் சம்பியன் 2020 தொடரில் 2 ஆவது கால் இறுதிப்போட்டி கடந்த மாதம் 30 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை அன்று மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடை பெற்றது.

போாட்டியில் கே.சி.சி.சி. அணி யூனியன்ஸ் அணியை 92 ஓட்டங்களால் வெற்றி பெற்று அரை இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது. முதலில் துடுப்பொடுத்தாடிய கே.சி.சி.சி. அணி 45.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 225 ஓட்டங்களைப் பெற்றது.

போட்டியில் யனுதாஸ் -55, டினேஸ் ஆட்டமிழக்காது 52, றொசான் - 12, பிரதீஸ் -16, சாம்பவன்-19 ஓட்டங்களை பெற்றனர்.

களத்தடுப்பில் யூனியன்ஸ் அணி சார்பாக பிரசாந் -02, சயந்தன் -03, தர்ஷன் - 01, ஜான்சன் -01, நிதர்ஸன் -02, விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யூனியன்ஸ் அணி 33.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக் களையும் இழந்து 133 ஓட்டங்களைப் பெற்றனர்.

போட்டியில் ஜான்சன்-28, சயந்தன் -17, ஆகீசன்-31 ஓட்டங்களை பெற்றனர். கே.சி.சி.சி அணி சார்பாக பிரதீஸ்-03, நிருசிகன் -01, டினேஸ்-01, சத்யன் -02, சாம்பவன் -03 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.(4)

## பிரதேச செயலகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான ஹொக்கிப் போட்டி

### உடுவில் பிரதேச செயலக அணி சம்பியன்



யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான ஆண்களிற்கான ஹொக்கிப்போட்டியில் உடுவில் பிரதேச செயலக அணி சம்பியன் வென்றுள்ளது.

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான ஆண்களிற்கான ஹொக்கிப் போட்டிகள் கடந்த 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சுழிபுரம் விக்டோரியா கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் உடுவில் பிரதேச செயலக அணியை எதிர்த்து தெல்லிப்பழை பிரதேச செயலக அணி மோதியது. இரு அணிகளும் சமபலத்துடன் மோதிய போதும் உடுவில் பிரதேச செயலக அணி ஒரு கோலைப் பதிவு செய்தது. ஆட்ட நேர முடிவில் உடுவில் பிரதேச செயலக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனாகியது. (4-60)

## தெல்லிப்பழை மின்னலடியாக்கி விளையாட்டுக்கழக கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டிகள்

தெல்லிப்பழை மின்னலடியாக்கி விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் யாழ். மாவட்டத்திற்கு உட்பட்ட A, B பிரிவைச் சேர்ந்தவர்களுக்கான மின்னொளியிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி கடந்த மாதம் 30 ஆம் திகதி ஆரம்பமாகியது.

அதனடிப்படையில் கடந்த 2 ஆம் திகதி நடைபெற்ற B பிரிவினருக்கு உரிய முதலாவது போட்டியில் கச்சாய் வெலிகிங்ஸ் விளையாட்டுக்கழக அணியினரை எதிர்த்து நீர்வேலி காமாட்சி அம்மன் விளையாட்டுக் கழக அணியினர் மோதினர்.

இப்போட்டியின் முதல் சுற்றில் நீர்வேலி காமாட்சி அம்மன் விளையாட்டுக் கழக அணி 25:23 என்ற அடிப்படையில் முன்னிலை வகித்து இரண்டாவது சுற்றில் கச்சாய் வெலிகிங்ஸ் அணியினர் 25:13 என்ற அடிப்படையில் முன்னிலை வகித்தனர்.

வெற்றி, தோல்வியை தீர்மானிப்பதற்காக மூன்றாவது சுற்றுப் போட்டி நடைபெற்றது. இச்சுற்றில் நீர்வேலி காமாட்சி அம்மன் விளையாட்டுக்கழக அணியினர் 25:14 என்ற அடிப்படையில் முன்னிலை வகித்து வெற்றியைப் பெற்றுக்கொண்டனர்

2 ஆவது B பிரிவினருக்கான போட்டியில் சிறுப்பிட்டி கலை ஒளி விளையாட்டுக்கழக அணியினரை எதிர்த்து கரவெட்டி வளர்மதி விளையாட்டுக்கழகம் மோதியது. இப் போட்டியின் முதல் சுற்றில் சிறுப்பிட்டி கலைஒளி விளையாட்டுக்கழக அணியினர் 25:23 என்ற அடிப்படையில் முன்னிலை வகித்தனர். இரண்டாவது சுற்றிலும் சிறுப்பிட்டி கலைஒளி விளையாட்டுக்கழக அணியினர் 25:10 என்ற அடிப்படையில் முன்னிலை வகித்து வெற்றியைப் பெற்றுக் கொண்டனர்.

A பிரிவின், நான்காவது போட்டியாக அமைந்தது. இந்த போட்டியில் புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக்கழகம் மோதியது. இப்போட்டியின் முதலாவது சுற்றில் புத்தூர் வளர்மதி அணியினர் 25:20 என்ற அடிப்படையில் முன்னிலை பெற்றனர்.

2 ஆவது சுற்றிலும் புத்தூர் வளர்மதி அணியினர் 25:19 என்ற அடிப்படையில் முன்னிலை வகித்து வெற்றியை தனதாக்கிக் கொண்டனர். (4)

## நொதேன் பிறீமியர் லீக் - 2K20 கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போட்டிகள்



- வல்லை றைனோஸ் எதிர் நோர்த் சுப்பீரியர்ஸ்.
- நோர்த் சுப்பீரியர்ஸ் - 61/10.
- வல்லை றைனோஸ் 47/10.
- நோர்த் சுப்பீரியர்ஸ் 14 ஓட்டங்களால் வெற்றி.
- ஆட்ட நாயகன் - லதுயன் - 3 விக்கெட்டுக்கள்.



- சங்கானை றொப் 11 எதிர் நோ நேம் கிரிக்கெட் கிளப்.
- நோ நேம் கிளப் - 96/8.
- சங்கானை றொப் 11 - 98/2.
- சங்கானை றொப் 11 8 விக்கெட்டுகளால் வெற்றி.
- ஆட்ட நாயகன் - சதீஷ் 33 ஓட்டங்கள்



- வல்லை றைனோஸ் எதிர் இனுவில் யுனைடெட் ஸ்ரார்.
- இனுவில் யுனைடெட் - 86/8.
- வல்லை றைனோஸ் 76/8.
- இனுவில் யுனைடெட் 10 ஓட்டங்களால் வெற்றி.
- ஆட்ட நாயகன் - மோகன்ராஜ் - 50 ஓட்டங்கள்.

## இலங்கையில்...

மொஹமட் அலி சப்ரி இந்த சட்டத் திருத்த வரைபை அமைச்சரவையில் தாக்கல் செய்தபோதே வாசுதேவ இதனைக் கூறியுள்ளார்.

எனினும் அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் இந்த நிலைப்பாட்டுக்கு அமைச்சரவையில் உள்ள பலர் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

அப்போது அமைச்சர் வாசுதேவவின் கருத்தை தெளிவுபடுத்தியுள்ள அமைச்சர் விமல் வீரவன்ஸ, ஒரு நபரை இலக்கு வைத்து அல்லாது கொள்கை ரீதியான காரணத்தை முன்வைத்தே அமைச்சர் வாசுதேவ இதனைக் கூறியதாகவும் இந்தியாவில் கூட இரட்டைக் குடியுரிமை கொண்டவர்கள் அரச பதவிகளை வகிக்க இடமளிக்கப்படுவதில்லை எனவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

அதேவேளை இந்த 20ஆவது திருத்தச் சட்டத்தில் சிறிய குறைகள் காணப்பட்டால், அதற்கு எதிராக எதிர்க்கட்சிகள் நீதிமன்றத்தை நாடும் என்பதால், திருத்தச் சட்டத்தை தொடர்ந்தும் ஆராய்ந்து அடுத்த அமைச்சரவையில் ஒப்புதல் பெறலாம் என அமைச்சர் உதய கம்மன்பில யோசனை முன்வைத்துள்ளார். இதற்கு அமைச்சரவையில் உள்ள பலர் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

இதன் காரணமாக 20ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்ட வரைபுக்கு அன்றைய தினமே ஒப்புதல் வழங்க அமைச்சரவை தீர்மானித்ததுடன் அன்றைய தினமே அது வர்த்தமானியில் வெளியிட அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. (ம-3)

**மெகா பவர்**
திகதி 05/09/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0603
வெற்றி எழுத்து W சுப்பர் இலக்க 07 வெற்றி இலக்கங்கள் 42 47 59 72

**கொவிசெத** உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 05-09-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2531
ஆங்கில எழுத்து Y வெற்றி இலக்கங்கள் 02 06 27 66
தேசிய லொத்தர் சபை

**சுபிரி வாசனா**
சீட்டிழுப்பு திகதி 2020 / 09 / 05 1532 சீட்டிழுப்பு இலக்கம்
சுப்பர் இலக்கம் 11 வெற்றி இலக்கங்கள் 12 45 50 55
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

**ஜாதிக சம்பத**
சீட்டிழுப்பு திகதி 05-09-2020 சீட்டிழுப்பு இலக்கம் 1052
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள் L 8 2 4 6 9 5
தேசிய லொத்தர் சபை

**மஹஜன சம்பத**
திகதி 2020/09/05
சீட்டிழுப்பு இலக்கம் 4236
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள் W 5 5 0 8 8 5
தேசிய லொத்தர் சபை

## முன்னணியில்...

கொக்குவிலில் அமைந்துள்ள கட்சியின் தலைமையகத்தில் நேற்று பிற்பகல் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை அறிவித்தார்.

இது தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் மேலும் தெரிவித்ததாவது,

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் மற்றும் ஊடகப் பேச்சாளர் பதவிகளிலிருந்து கட்சியின் மத்திய குழுவால் நீக்கப்பட்ட பின்னர் அவர் பதிலளித்திருந்தமை தொடர்பில் மத்திய குழு மீளவும் கூடி ஆராய்ந்து மணிவண்ணனின் பதில் தொடர்பில் ஆராய்ந்தது. அவரது பதில்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கவில்லை.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் அடிப்படை உறுப்பினர் தகுதி நிலையிலிருந்தும் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

அதுதொடர்பில் அவருக்கு மின்னஞ்சல் அனுப்பப்பட்டது. அத்துடன் பதிவுத் தபாலிலும் கடிதம் அனுப்பப்படும்.

வி. மணிவண்ணனுக்கு 14 நாட்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. அதற்குள் அவர் தனது பக்க நியாயங்களை கட்சிக்கு அறிவிக்கவேண்டும். அதன்பின்னர் கட்சியால் அவர் மீது முன்வைக்கப்படும் 6 குற்றச்சாட்டுத் தொடர்பில் ஒழுக்காற்று விசாரணை நடத்தப்படும்.

எனவே தற்போது வி.மணிவண்ணன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பெயரைப் பயன்படுத்தி செயற்பட முடியாது என்று பொதுமக்களுக்கு அறிவிக்கின்றோம் என்று தெரிவித்துள்ளார். (ம-3,18)

## நிறுவனங்களை...

புதிய சட்டம் ஒன்றை கொண்டு வர அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

புதிய சட்ட வரைபை உருவாக்க அரசாங்கம் கலாநிதி சுசந்த குணதிலக்கவை நியமித்துள்ளது.

இலங்கையில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு வருடாந்தம் 36 பில்லியன் நிதி கிடைப்பதாகவும் அவற்றை வழங்கும் நாடுகள் தொடர்பான தகவல்கள் வெளியாவதில்லை எனக் கூறப்படுகிறது.

இலங்கையில் ஆயிரத்து 600க்கும் மேற்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. இந்த அரச சார்பற்ற நிறுவனங்களில் சில நிறுவனங்கள் அரசியல் கட்சிகளுடன் சம்பந்தப்பட்டவை.

இந்த நிறுவனங்கள் அரசாங்கங்களை கவிழ்க்கவும் தலையீடுகளை செய்திருந்தாக தற்போதைய அரசாங்கத்தின் உயர் மட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரச சார்பற்ற நிறுவனங்கள் சம்பந்தமாக இந்தியா நிறைவேற்றியுள்ள சட்டத்திற்கு நிகரான சட்டத்தை உருவாக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இந்த சட்ட வரைபு அடுத்த இரண்டு மாதங்களுக்குள் அமைச்சரவையில் தாக்கல் செய்யப்பட உள்ளது. (ம-3)

## புதையல் தோண்...

பூவரசங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை 9.30 மணியளவில் அரபாநகர் பகுதியிலுள்ள காணியொன்றில் புதையல் தோண்டும் நடவடிக்கையில் சிலர் ஈடுபட்டு வருவதாக பூவரசங்குளம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து அப்பகுதிக்குச் சென்ற பொலிஸார் 8 பேரை கைது செய்துள்ளனர்.

குறித்த சம்பவத்தில் கொழும்பு, வவுனியா உட்பட பல்வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களிடமிருந்து நிலத்தை தோண்டுவதற்கு பயன்படும் மண்வெட்டி உட்பட சில பொருட்களையும் இரண்டு சொகுசுக் கார்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களுள் ஒருவர் பொலிஸ் உத்தியோகத்தராக கடமையாற்றி வருவதாக தெரிவித்த பொலிஸார் அவர்கள் அனைவரும் இன்றைய தினம் வவுனியா நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளதாக மேலும் தெரிவித்தனர். (ம-3,299)

## ஐரோப்பிய...

தூதுவர் டெனிஸ் சேய்பி, இத்தாலி மற்றும் நெதர்லாந்துக்கான ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர்கள், ருமேனியா, ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளிலுள்ள ஐரோப்பிய ஒன்றியத் தூதரகங்களின் அலுவல்களுக்குப் பொறுப்பான அதிகாரிகள் அடங்கிய குழுவினர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தனவை சந்தித்து பல்வேறு விடயங்கள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தனர்.

மீண்டும் வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்பட்ட தினேஷ் குணவர்தனவிற்கு வாழ்த்துத் தெரிவித்த பிரதிநிதிகள், தொடர்ந்தும் ஐரோப்பிய ஒன்றியத்துடன் இலங்கை நெருக்கமாகச் செயலாற்றி வருவது குறித்து மகிழ்ச்சியையும் வெளிப்படுத்தினர்.

மேலும் இதன்போது இலங்கையின் மிகமுக்கியமான ஏற்றுமதிச் சந்தையாக ஐரோப்பா விளங்குவதுடன் இலங்கைக்கான நேரடி வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் சுற்றுலாத்துறை வருமானம் என்பனவும் அதனூடாகவே அதிகளவில் கிடைக்கப்பெறுவது பற்றியும் சுட்டிக்காட்டப்பட்டது. (ம-3)

## 15...

வீட்டிலிருந்தவர்கள் உறக்கத்திலிருந்தபோது ஓடு பிரித்து உள்நுழைந்த திருடர்கள் மேற்படி திருட்டை நிகழ்த்தியுள்ளனர்.

இது தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3)

## வாள்...

பிடித்து அச்சுவேலி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

ஆவரங்கால் வன்னியசிங்கம் வீதியில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்துடன் இவர்களுக்கு தொடர்பு இருக்கலாம் என்ற கோணத்தில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-3)

## சூலத்தின் மீது...

ஒருவர் சூலத்தின் மீது தவறிவிழுந்து படுகாயமடைந்துள்ளார். இந்த சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

கோவில் பூசைகள் மாலை இடம்பெற்றிருந்த நிலையில் கெற்பேலி மேற்கு மிருசுவிலைச் சேர்ந்த 47 வயதான ஒருவருக்கு திடீரென கலை வந்துள்ளது.

இதனையடுத்து அவர் கலை ஆடியபடியே அங்கிருந்த சூலத்தின் மீது விழுந்துள்ளார்.

இதன்போது சூலம் அவரின் உடலில் ஏறி படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-3)

## இந்தியா...

ரீதியில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் இந்தியா இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளது.

நேற்று மட்டும் 89,237 கொரோனா தொற்றாளர்கள் இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

மொத்தமாக இந்தியா முழுவதும் 40 இலட்சத்துக்கும் அதிகமானோர் கொரோனா தொற்றுக்கு இலக்காகியுள்ளனர். (ம-3)

**සංවර්ධන වාසනාව** அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 364 திகதி 05.09.2020 வர்ணம் சிவப்பு
ஆங்கில எழுத்து F வெற்றி இலக்கங்கள் 13 34 61 விதி எண் 5
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 11,342,524
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

**SUPER BALL**
சீட்டிழுப்பு வாரம் 1206 நிறம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 05.09.2020 தினம் சனிக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் R 02 33 41 47
SUPER 500 விசேட இலக்கம் 1 6 1 5
அபிவிருத்தி லொத்தர் சபை

**ராசி அதிர்ஷ்டம்**
திகதி 05.09.2020 வெற்றி வாரம் 2913 வர்ணம் இளம் நீலம்
வெற்றி இலக்கங்கள் 07 14 39 60 துலாம்
டபள் சான்ஸ் விசேட இல.
ரூ.500 பரிசுக்குரிய 5502
ரூ.100 பரிசுக்குரிய 724
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 11,001,732
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
www.dlb.lk
தொ. பே.: 0112 333 546/47

**அத கோடிபதி** ADA KOTIPATHI
சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1032
வர்ணம்: மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2020.09.05
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 4,220,380/-
வெற்றி இலக்கங்கள் 22 28 30 34 ஆங்கில எழுத்து Y
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 7508
ரூ. 100/- பரிசுக்கான விசேட இலக்கம் 535
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை

**சனிதா**
சனிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2020.09.05
சீட்டிழுப்பு இல.: 3362
வர்ணம்: பச்சை
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 39,384,074.50
வெற்றி இலக்கங்கள் 07 58 60 71 ஆங்கில எழுத்து R
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 5917
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை

**AMC ACADAMY**
BMC LANE, JAFFNA.

A/L 2020 ICT மாணவர்களுக்கான விசேட கருத்தரங்கு தொடர் - 1

காலம்:- 07.09.2020 திங்கள்
நேரம் :- 3.00 p.m - 6.00 p.m

- வினாக்களிற்கு அதி உச்சப் புள்ளிகளை பெற்றுக் கொள்வதற்கான நுட்பங்கள்.
- எதிர்பார்க்கை வினாக்கள் புள்ளியிடலில் அனுபவம் வாய்ந்த வளவாளர்.

**Mr. M.I. PALAH** (3813)

பாடப்பரப்புக்கள் அனைத்தும் துரித மீட்டல் செய்யப்படும்.

070 171 0061
077 694 4543


## நெருக்குதலே...

என்னுடைய எதிர்பார்ப்பு.

நெருக்குதல் ஒன்று தான் பெரும்பான்மையினரை தமது மாட மாளிகைகளில் இருந்து கீழிறக்கும் என்பது எனது கருத்து.

துரதிஷ்ட வசமாக எமது தலைவர்கள் எமது வரலாற்றைப் பேசத் தயங்குகின்றார்கள். அவர்களுக்கு எமது வரலாறு பற்றி உண்மையில் தெரியாதா அல்லது தெரிந்தும் மௌனிகளாக மாறிவிட்டார்களா என்று எனக்குப் புரியவில்லை. ஆனால் இன்றைக்கு பள்ளிக்கூடத்தில் படிக்கின்ற மாணவ மாணவியர்க்கும் பல்கலைக்கழக மாணவ மாணவியர்க்கும் இந்த உண்மைகள் தெரியும்.

கற்றறிந்தவர்களும் அறிஞர்களும் சொல்லுகின்ற உண்மை வரலாற்றை எவர் வேண்டுமானாலும் படிக்கலாம். அறிந்துகொள்ளலாம். எங்கள் வரலாற்றை பற்றி சரியாகத் தெரியாத எமது தலைவர்கள் எப்படி சிங்களத் தலைவர்களுடன் பேச முடியும்? அல்லது அதைப் பேசத் தயங்குபவர்களால் எப்படி இனப்பிரச்சினையை தீர்த்து வைக்கமுடியும்?

எல்லா வினைகளுக்கும் எதிர்வினை உண்டு என்பதை பாராளுமன்றத்தில் சுட்டிக்காட்டிய போது, அதனைப் பிரிவினைவாதம் என்று எச்சரிக்கின்ற சிங்கள தலைவர்கள் இருக்கும் பாராளுமன்றத்தில், எங்கள் நியாயங்களை இனத்திற்காகப் பேசுகின்ற தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இல்லையே! படைத்துறை உயர்தளபதி சரத் பொன்சேகா என்னைச் சுடுவோம் என்ற தொனியில் பேசியதை நீங்கள் பார்த்துக் கேட்டிருப்பீர்கள். அதாவது சிங்கள மக்களைக் கோபம் ஊட்டியவர்களைத் தாம் சுட்டுக்கொன்றதை எனக்கு நினைவுபடுத்துவதாகத்தான் பொன்சேகா அவர்கள் சொல்லி எச்சரித்தார்.

மரணம் என்பது எல்லோருக்கும் பொது. படைத்துறை உயர் தளபதிகளுக்குங் கூட மரணம் வரும். நான் ஓய்வெடுத்து என் பேரப்பிள்ளைகளுடன் பொழுதைக் களிக்கலாம். ஆனால் வடக்கின் முதலமைச்சர் பதவிக்காக இழுத்து வரப்பட்ட எனக்கு, சில கடமைகள் இருப்பதை உணர்ந்தேன். பல உண்மைகளை அழுத்தம் திருத்தமாக எடுத்துச் சொல்ல வேண்டும் என்பதையும் இப்போது உணர்ந்து கொண்டுள்ளேன். அதைத் தடுக்க சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லது உயர் இராணுவ அதிகாரிகள் எனக்கு மரணபயம் ஊட்டுவதால் ஆவதொன்றுமில்லை.

அந்த வகையில் எத்தகைய அச்சுறுத்தல்களைக் கடந்தும், அரசியல் மிரட்டல்களைக் கடந்தும் என்னுடைய குரல் உங்களுக்காக ஒலிக்கும். தம் உயிர், வாழ்வு என அனைத்தையும் பல ஆயிரக் கணக்கான இளைஞர்கள் இனத்திற்காக தியாகம் செய்த இந்த மண்ணில், எங்கள் தனிப்பட்ட பாதுகாப்புக்காகவும் உயிர் வாழ்தலுக்காகவும் பொய்களைப் பேசி, மக்களுக்கு அநியாயங்களைச் செய்வது எந்த வகையிலும் நியாயம் ஆகாது என்பதை உறுதிபடச் சொல்கின்றேன். இன்றைய காலகட்டத்தில் மரணபயம் இருந்தால் அரசியல் செய்யமுடியாது.

எதற்காக என்னைப் பாராளுமன்றம் அனுப்பினீர்களோ அந்தக் கடமையை நிவைவேற்றுவதை என் உயரிய கொள்கையாக, பணியாகக் கொண்டு செயலாற்றுவேன்.

நீங்கள் அனைவரும் பார்வையாளர்களாக இருக்காமல்பங்காளர்களாக இணைய வேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகின்றேன். நீங்கள் பார்வையாளர்களாக இருந்தால், கடந்த காலத்தைப் போன்று சிங்களத் தலைவர்கள் மாத்திரமல்ல, தமிழ் தலைவர்களும் உங்களை ஏமாற்றி விடுவார்கள்.

கடந்த வருடம் முன்னாள் போராளிகளை கிளிநொச்சியில் சந்தித்தபோது, அவர்களை எமது கட்சியின் தலைமைப் பதவிகளை ஏற்க வருமாறு அழைத்திருந்தேன். பலரும் எம்முடன் இணைந்தார்கள். மீண்டும் அவர்களைத் தலைமை ஏற்க அழைக்கின்றேன். உண்மையில் மாற்றத்திற்கான இந்தப் பயணத்தை ஆரம்பித்து காலக்கிரமத்தில் தலைமைத்துவத்தை இளைய தலைமுறையினரிடம் கையளிக்க வேண்டும் என்பதே எனது அவா என்பதையும் சொல்லி வைத்துள்ளேன் என்றார். (ம-03)


## வேலையாட்கள் தேவை

முல்லைத்தீவில் புதிதாக இயங்க இருக்கும் நிறுவனம் ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை. (3801)

077 266 6429, 076 700 1072



## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**

வழமைபோல வெளிநாடுகளுக்கு பொதிகளை எமக்கூடாக அனுப்பிவைக்க முடியும்

எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய்
● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

(C-126)

0768226240



## பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

தகுதி - 30 வயதிற்கு உட்பட்டவர்கள் - O/L, A/L எடுத்தவர்கள் விரும்பத்தக்கது (இருபாலாரும்)

(C-221)

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
**V2 TRAVELS**

எமது கிளைகள்: கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி, கொடிகாமம், கோப்பாய், சுன்னாகம், மானிப்பாய், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, புத்தூர்

● பயிற்சிக்கால ஊக்கத்தொகை -10'000/-
● பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
● பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
● ஆரம்ப சம்பளம் -15'000/-

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0768226243
v2vacancies@gmail.com



## வாடகைக்கு

பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் (வீரமாகாளி அம்மன் கோவிலுக்கு அருகாமையில்) என்னும் முகவரியில் மேற்தள வீடு வாடகைக்கு கொடுக்கப்படும்.

தொடர்பு (3799)
076 759 3822
மு. சற்குணநாதன்



## அண்ணா விரைவுப் பொதிகள் சேவை

11kg க்கு மேல் 1 கிலோவுக்கான கட்டணம்

| | |
|---|---|
| பிரான்ஸ் | -ரூ.1300 |
| ஜேர்மனி | -ரூ.1300 |
| டென்மார்க | -ரூ.1300 |
| கொலன்ட் | -ரூ.1300 |
| பெல்ஜியம் | -ரூ.1300 |
| இத்தாலி | -ரூ.1450 |
| லண்டன் | -ரூ.1150 |

இச் சேவையில் மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் கட்டணங்களும் வெளிநாட்டில் அறவிடப்படமாட்டாது.
5 - 8 வேலை நாட்கள்

எம்முடன் இணைந்து பொதிகள்சேவை தொடங்குவதாயின் தொடர்புகொள்ளவும்

கப்பல் ஊடாகவும் பொருட்கள் அனுப்ப முடியும் (குறைந்தது 100-200Kg) (C-234)

லண்டன்-1050/= ,பிரான்ஸ்-ஜேர்மனி-டென்மார்க்-1200/= கனடா- 1450/= சுவிஸ்- 1350/= அவுஸ்ரேலியா- 1750/= (வரி உள்ளடக்கப்படவில்லை)

976,KKS வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | நெல்லியடி சங்கானை | கிளிநொச்சி முல்லைத்தீவு | 077 888 9388, 070 330 5500 | பளை மன்னார் கொழும்பு



## வேலை வாய்ப்பிற்கான பதவி வெற்றிடங்கள்

வட மாகாணத்தில் கல்வி கற்று வேலை வாய்ப்பு ஒன்றிற்காக காத்துக் கொண்டிருக்கும் உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். நாடு முழுவதும் பிரசித்தி பெற்றுக் காணப்படும் எமது EDM கம்பனியில் காணப்படும் பதவி வெற்றிடங்கள்.

கணக்காளர், முகாமைத்துவ உதவியாளர், நிர்வாக உத்தியோகத்தர், மேற்பார்வையாளர், பயிற்றுவிப்பாளர்.

மேலதிக வெற்றிடங்களுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களை மேற்கொள்வதற்காக விரையுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு :-

◆ மேற்குறிப்பிட்ட பதவிகளுக்காக பதவி வெற்றிடங்கள் 60 மாத்திரமே கோரப்படுகின்றது. மற்றும் தங்குமிட வசதிகள், உணவுகள் என்பன ஏற்படுத்திக் கொடுக்கப்படும். பயிற்சியின் போது 20,000/- - 24,000/- ரூபாய் வரை பெற்றுக் கொள்ளலாம். நிரந்தர வேலை வாய்ப்பின் பின் 45,000/- ரூபாய்க்கு மேல் வழங்கப்படும்.

அரிய சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள். (3814)

விபரங்களை அறிய,
076 939 3965, 077 006 4030, 021 314 2828



## விரைவு பொதிகள் சேவை

DHL வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை 3 -5 நாட்களுக்குள் வழங்கப்படுகின்றன

**Lanka Cargo Worldwide Express**

315, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (3806)
021 221 1995
076 283 2397



## English Trainer Training Diploma
240 hrs (Teacher Training) 4 Months

- ஆங்கிலத்தை முழுமையாகவும்
- அடிப்படையிலிருந்து கற்க விரும்புபவர்களுக்கு
- ஆங்கில ஆசிரியராக விரும்புபவர்களுக்கும்
- பல்கலைக்கு தெரிவாகியுள்ள மாணவர்களுக்கும்

ஆரம்பம் 05.09.2020 - Weekends, 07.09.2020 - Weekdays } 9. AM - 1. PM

ELAS இல.51, மாநகரசபை புதிய கட்டடத்தொகுதி கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. : 076 223 5678, 076 697 3040 (3811)


## 2 ரூபாயினால்...

அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர் சங்கம் இதனை தெரிவித்துள்ளது.

இதற்கமைய, கோழி முட்டையொன்றை 18 ரூபாய்க்கு விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் மகிந்த ராஜபக்ஸவின் பணிப்புரைக்கு அமைவாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர் சங்கம் குறிப்பிட்டுள்ளது. (ம-03)


## காப்புறுதித் துறையில் வாழ்க்கையை மாற்றும் ஒரு கூட்டிணைவை ஆரம்பித்திடுவோம்

தொடர்ந்து 7 வருடங்கள் வேலை செய்வதற்கு மிகச்சிறந்த இடம் என்ற (G.P.W) விருதினைப் பெற்ற யூனியன் அஷ்யூரன்ஸ் இருந்து தொழில்வாய்ப்புகள் யாழ்.பிராந்தியம்

◎ முகாமையாளர் - வியாபார அபிவிருத்தி
◎ உதவி முகாமையாளர் - வியாபார அபிவிருத்தி

**முகாமையாளர் - வியாபார அபிவிருத்தி**
◎ க.பொ.த உயர்தரம் 3 பாடங்களில் சித்தி
◎ அடிப்படை கொடுப்பனவு 40,000/= + மேலதிக 3 கொடுப்பனவுகள்

**உதவி முகாமையாளர் - வியாபார அபிவிருத்தி**
◎ க.பொ.த உயர்தரம் 3 பாடங்களில் சித்தி
◎ அடிப்படை கொடுப்பனவு 30,000/= + மேலதிக 3 கொடுப்பனவுகள்



உங்களது சுயவிபரக் கோவையினை அல்லது விண்ணப்பங்களை 12.09.2020க்கு முன்னர் rayman2017r@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
218, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
UNION ASSURANCE A JOHN KEELLS COMPANY (3769)



வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.09.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka

விலை : 30.00

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 274

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2051 | 06.09.2020 | தொலைபேசி : 021 222 3378

# கண்ணீரும் கனத்த படையே!







AIA இன்ஷுவரன்ஸ் நிதியியல் ஸ்திரத்தன்மை - நிலையான சேவை.

- இலங்கையின் காப்புறுதித் துறையில் பாரிய மூலதன விகிதத்தினைக் கொண்டிருத்தல்.
- 30 வருடங்கள் தொடர்ச்சியாக இலாபப்பங்கினைப் பகிர்ந்ததில் சாதனை (2019 ஆம் ஆண்டு ... பகிர்ந்துள்ளது).
- உயர் தரத்திலான முதலீடுகளை மேற்கொண்டிருத்தல.
- ஓய்வூதியம் மற்றும் தேகாரோக்கியம் போன்ற ஆயுள் காப்பீட்டுத் திட்டங்களின் முன்னோடி.
- 100 வருடங்களுக்கும் மேலான அனுபவம் மற்றும் AIA குழுமத்தின் துணையுடன் முதல்தரத்துடன் உலகின் பாரிய ஆயுள் காப்புறுதியாளனாகத் திகழ்கின்றது.

*12 மார்ச் 2019 ஆண்டின் சந்தை மூலதன மதிப்பின் அடிப்படையில், உலகின் பாரிய ஆயுள்காப்புறுதி நிறுவனம்

ஓய்வூதியம், தேகாரோக்கியம் மற்றும் ஆயுள் காப்புறுதி


AIA இன்ஷுவரன்ஸ்

AIA HEALTHIER, LONGER, BETTER LIVES

TBWA\SRI LANKA

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு



## வெளியிடத்துப் பெற்றோர்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டும்

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக நியமிக்கப்பட்டுள்ள பேராசிரியர் சி.ஸ்ரீசற்குணராஜாவுக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்ற தீர்மானத்தை நிறைவேற்றுவம் எனக்கூற, புதிய துணைவேந்தருக்கு வாழ்த்துத் தெரிவிக்கும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

பண்டிதர் ஐயா துணைவேந்தருக்கு வாழ்த்துத் தெரிவிக்கும் தீர்மானத்தோட இன்னுமொரு தீர்மானத்தையும் நிறைவேற்ற வேணும். விதானையார் விசுவலிங்கம் கூறினார்.

பண்டிதர்: விதானையார் என்ன தீர்மானம் எண்டதைச் சொல்லுங்களன்.

விதானையார்: யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட உடற்கல்வி டிப்ளோமா கற்கைநெறி இப்ப இயங்குகிறதில்லையாம்.

இந்தக் கற்கைநெறியை மீள ஆரம்பிக்கவேணும் எண்டு வெளிநாட்டிலே இருக்கிற விஜயகுமார் என்பவர் தொடர்ச்சியாகக் கோரிக்கை விட்டு வருகிறார். எனவே நாங்களும் உடற்கல்வி டிப்ளோமாவை மீள ஆரம்பிக்கவேணும் எண்ட கோரிக்கையை புதிய துணைவேந்தரிட்ட விடுவம்.

கங்காணி: உண்மைதான். நானும் பார்த்தனான். புதிய துணைவேந்தர்கள் பதவியேற்ற கையோட விஜயகுமார் என்ற அன்பர் உடற்கல்வி டிப்ளோமா கற்கைநெறியை ஆரம்பிக்கவேணும் எண்ட கோரிக்கையை பத்திரிகை வாயிலாக விடுக்கிறார்.

அந்தக் கற்கைநெறியைக் கற்ற ஒருவர் வெளிநாட்டில இருக்கின்ற போதிலும் எங்கட இளைஞர் யுவதிகளுக்கும் அந்த உடற்கல்வி வாய்ப்புகள் கிடைக்க வேணும் எண்ட நல்ல நோக்கில விஜயகுமார் விடுக்கின்ற கோரிக்கையைப் பார்த்து உண்மையிலேயே நான் நெகிழ்ந்து போனன்.

வாத்தியார்: இப்படியான நல்ல நோக்கம் உடையவர்கள் எங்களிட்ட இருக்கிறதாலதான் இந்த மண்ணில இன்னமும் மழை பெய்யுது. ஆகையால யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில மீளவும் உடற்கல்வி டிப்ளோமாவை ஆரம்பிக்க வேணும் எண்ட கோரிக்கையை நாங்களும் தீர்மானமாக நிறைவேற்றுவம்.

மாநாட்டுத் தலைவர் வாத்தியார் வைத்திலிங்கம் கூறியதை ஆலடி மாநாடு ஏகமனதாக நிறைவேற்றிக் கொண்டது.

தீர்மானம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து சாத்திரியார் சதாசிவம் குரல் கொடுத்தார்.

சாத்திரியார்:வாத்தியார் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில உள்ள ஒரு விடயத்தை நான் அவதானித்தனான். இப்ப யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில வெளிமாவட்டப் பிள்ளைகள் குறிப்பாக சிங்கள, முஸ்லிம் பிள்ளைகள் நிறையப் படிக்கினம்.

இந்தப் பிள்ளைகளின்ர பெற்றோர்கள் தங்கட பிள்ளைகளைச் சந்திப்பதற்காக இங்க வாறவியள். அப்படி வாறவியள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுழைவாயிலுக்கு முன்பாக கால்கடுக்க நிற்பினம். விரிவுரைகள் முடிந்த பின்பு பிள்ளைகள் வந்து தங்கட பெற்றோரை அந்த இடத்தில சந்திப்பினம். எனக்கெண்டால் அதைப் பார்க்க அந்தரமாக இருக்கும்.

மூப்பர்: ஏன் சாத்திரியார் இந்தப் பிள்ளைகள் தங்கியிருக்கிற இடங்களுக்குப் போய்ச் சந்திக்க முடியாதோ?

சாத்திரியார்: இல்லை மூப்பர். அந்தப் பிள்ளைகள் பல்கலைக்கழக விடுதிகளில தங்கியிருந்தால், பெற்றோர்கள் அங்க போய்ச் சந்திக்கிறது சாத்தியம் இல்லைத்தானே.

அதோட வாடகைக்கு றூம்களில இருந்தாலும் இருக்கிற வீட்டுக்காரர், பெற்றோர்களும் உறவினர்களும் வாறதை விரும்ப மாட்டினம் தானே!

சிறாப்பர்: அப்ப சாத்திரியார் இதுக்கு என்ன செய்யிறது.

சாத்திரியார்: என்னைப் பொறுத்தவரை வெளிமாவட்டத்தைச் சேர்ந்த பிள்ளைகளை அவர்களின்ர பெற்றோர்கள் சந்திப்பதற்கான ஒரு ஏற்பாட்டை யாழ். பல்கலைக்கழக நிர்வாகம் செய்யவேணும்.

பல்கலைக்கழக வளாகத்தில ஓர் இடத்தில ஒரு கொட்டகை அமைத்து அதில வெளிமாவட்டப் பெற்றோர்கள் காத்திருந்து தங்கள் பிள்ளைகளைச் சந்திப்பதற்கு வசதி செய்யப்பட வேணும். இதுதவிர குடிநீர் மற்றும் வோஷ்றூம் வசதிகளும் இருந்தால் நல்லது.

பண்டிதர்: சாத்திரியார் சொல்லுறதும் சரிதான். மற்றவர்கள் எங்களுக்கு என்ன செய்யினம் எண்டது வேற. நாங்கள் உயர்ந்த பண்பாட்டோட நடந்துகொள்ள வேணும். எனவே சாத்திரியார் சொன்ன விடயம் தொடர்பில எங்கட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேணும் எண்டு ஆலடி மாநாட்டில ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவம். இவ்வாறு வாத்தியார் கூற, அந்தத் தீர்மானமும் ஏகமனதாக நிறைவேறியது.

மூப்பர்: இண்டைக்கு முழுக்கத் தீர்மானமாகத்தான் இருக்குது.எண்டாலும் பரவாயில்லை. எல்லாம் வரவேற்கப்படவேண்டிய தீர்மானங்கள்தான்.

கங்காணி: அதுசரி. இரவு நேரத்தில ஆரேனும் சிறு காயப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்குப் போனால், அங்க வாசலில இருக்கிறவியள் இதுக்கு மருந்து கட்டமுடியாது. விடியத்தான் மருந்துகட்டவேணும். இல்லையெண்டால் வாட்டில தங்கியிருக்க வேணும் எண்டு சொல்லுகினமாம்.

சிறாப்பர்: என்ன கங்காணியார் சொல்லுறியள்.

கங்காணி: நேற்று முன்தினமிரவு இயந்திரம் ஒன்றை இறக்கும்போது ஒருவர் கைவிரலில காயப்பட்டுப் போனார். உடனடியாக அவரை யாழ். போதனா வைத்தியசாலைக்கு கூட்டிச் சென்றபோது,அங்க முன்னுக்கு இருந்தவியள் இப்படித்தானாம் சொன்னவியள்.

மூப்பர்: அப்ப பிறகு என்ன நடந்ததாம்.

கங்காணி: இப்படி முன்னுக்கு இருந்தவர் சொல்ல அங்க போன ஒருவர் அப்ப நாங்கள் மேலிடத்திற்குச் சொல்லுறம் எண்டு கான்போனை எடுத்த வராம். அவ்வளவுதான் உடன மருந்து கட்டி ஆளை அனுப்பிவிட்டினம்.

விதானையார்: இதுதான் சொல்லுறது நிர்வாகங்கள் பற்றிப் பொது மக்கள் அறிந்திருக்க வேணும். இல்லையெண்டால் ஏமாறப்படுகிறதுதானே.

சிறாப்பர்: ஓ! இப்ப பொதுமக்களை அலைக்கழிக்கிற நிர்வாகங்கள் தானே நடக்குது. அதிகாரத்தில இருக்கிறவர் தான் நினைச்சபடி எதுவும் செய்யலாம் எண்டாச்சுது.

பண்டிதர்: உண்மைதான். வடக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலகம் தனது ஆளுகைக்குட்பட்ட விளம்பரங்களை வலம்புரிக்குக் கொடுக்கிறதில்லையாம். இதுபற்றி ஏன் எண்டு ஆராய்ந்த போது வலம்புரி ஒரு சமயம் சார்ந்து செயற்படுவதாகவும் அதால அந்தப் பத்திரிகைக்கு விளம்பரம் கொடுக்க வேண்டாமெண்டும் கடுமையான உத்தரவை வடக்கு மாகாணத்தின் பிரதான பதவியில் இருக்கிறவர் பிறப்பித்திருக்கிறதாகவும் கேள்வி.

வாத்தியார்:சரி... சரி... மாப்புளிக்கிறது அப்பத்துக்கு நல்லது தானே. காலம் கனியட்டும்.


இவ்வாறு வாத்தியார் கூற, அதனை ஆமோதிப்பது போல ஆலடிப்பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# ஆக்குவாய் அழிப்பாய் 19-வது திருத்த சட்டமூலத்தை
















ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராகவும் ஜனாதிபதியுமாக இருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தன 1978 இல் கொண்டு வந்த நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை, ஐக்கிய தேசியக் கட்சிக்குச் சாவுமணி - அடித்துள்ளது.

இதைவிட இன்னும் ஒரு படி மேலாகச் சொல்வதாயின் ஜே.ஆரின் நரித்தந்திரம் அவரின் கட்சிக்குப் புதைகுழி தோண்டி அதில் போட்டு மூடியும் விட்டது.

நிறைவேற்று அதிகாரத்தின் மூலம் இந்த நாட்டை ஆள நினைத்த ஜே. ஆர். இன்றில்லையாயினும் அவரின் தூரநோக்கற்ற சிந்தனையும் ஜனநாயகத்தின் மீது அக்கறைப்படாத அவரின் போக்கும் இலங்கையில் ஜனநாயகத்தைக் கேள்விக் குறியாக்கியுள்ளது.

ஜே. ஆர். ஜெயவர்த்தன கொண்டுவந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையானது ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் குழப்பத்தையும் சிக்கல்களையும் ஏற்படுத்தவே செய்கிறது.

அதிலும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுகின்ற ஒவ்வொருவரும் நிறைவேற்று அதிகாரம் தமக்குத் தேவை என்று நினைக்க, எதிர்க்கட்சியில் இருக்கக் கூடியவர்கள் நிறைவேற்று அதிகாரம் இந்த நாட்டின் ஜனநாயகத்திற்குக் கேடு என்கின்றனர்.

ஆதலால் ஆதரவும் எதிர்ப்பும் என்ற நிலைமையானது நாட்டின் அரசியலமைப்பை ஆக்குவதும் ஆக்கியதை அழிப்பதுமான நடவடிக்கையாக நீண்டு செல்கின்றன.

ஆக, ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேனவைத் தவிர, ஏனைய ஜனாதிபதிகள் அனைவரும் தமக்கான நிறைவேற்று அதிகாரத்தை ஆதரிப்பவர்களாகவே இருக்கின்றனர்,இருப்பர்.

இந்த அடிப்படையிலேயே 19ஆவது திருத்த சட்டமூலம் இரத்துச் செய்யப்படப் போகின்றது, 19 ஆவது திருத்தச் சட்டமூலம் இல்லாது செய்யப்படுமாயின், ஜனாதிபதிக்கான அதிகாரம் மீண்டும் ஏறிவிடும்.

ஜனாதிபதி நினைத்தால் ஒரு வருட முதிர்வில் பாராளுமன்றத்தைக் கலைக்க முடியும் என்பதோடு பாராளுமன்ற முறைமை, ஜனாதிபதியின் சர்வ வல்லமைக்குக் கட்டுப்பட்டதாகவே இருக்கும்.

இங்கு 19ஆவது திருத்த சட்டமூலம் போயகல 20 ஆவது திருத்த சட்டமூலம் ஆகப் போகிறது. 20 ஆவது சட்டமூலத்தை ஆக்குவதும் காப்பதும் குடும்ப அரசியலுக்கானது என்ற கோசங்கள் பரவலாக எழுந்தாலும் இந்தக் கோசங்களும் எதிர்ப்புகளும் 19 ஐக் காப்பாற்றவோ அல்லது 20 ஐ தடுக்கவோ முடியாது.

மாறாக, 19 ஐப் போக்கி 20 ஐ ஆக்கி அரசியலமைப்பில் படைத்தலும் காத்தலும் அழித்தலுமென பஞ்சகிருத்தியம் நடக்கவே செய்யும்.

இங்கு 19 ஆவது திருத்த சட்டமூலத்தை இல்லாதொழிப்பதற்கான முயற்சியில் சஜித் பிரேமதாஸ தரப்பிலான ஐக்கிய மக்கள் சக்தி களமிறங்கியுள்ளது.

தமது முயற்சிக்கு ஆதரவு வேண்டி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடனும் சஜித் பிரேமதாஸ பேசவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இப்போது 19 ஆவது திருத்தச் சட்டமூலத்தைக் காப்பாற்ற வேண்டும் எனக் கங்கணம் கட்டி நிற்கும் சஜித் பிரேமதாஸவை கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் ஆதரித்திருந்தனர். வடபுலத்தில் அதி கூடிய வாக்குகள் சஜித் பிரேமதாஸவுக்குக் கிடைத்தது.

ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுத்த கோரிக்கையை அடுத்து தமிழ் மக்களின் வாக்குகள் அவருக்குக் கிடைத்தனவாயினும் தனக்கு வாக்களித்த தமிழ் மக்களைத் திரும்பியும் பார்க்காதவர் சஜித் என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

இதுதவிர, இராணுவத் தளபதியாக சவேந்திர சில்வாவை நியமித்த போது, அதற்கு அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்தன.

தமிழ்மக்கள் சார்ந்த அமைப்புக்களும் அரசியல் கட்சிகளும் கண்டனங்களை வெளியிட்டன.

ஆனால் சஜித் பிரேமதாஸ சவேந்திர சில்வாவுக்குத் தனது ஆதரவை வெளிப்படையாகத் தெரிவித்தார்.

இதுதவிர, இந்த நாட்டின் ஆதிக்குடிகள் தமிழர்கள் என பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்; பாராளுமன்றத்தில் வைத்துக் கூறியதைக் கடுமையாகச் சாடியதும் சஜித் தரப்பு என்பதை இங்கு நினைவுபடுத்துவது அவசியம்.


நிலைமை இதுவாக இருக்கையில், இப்போது சஜித் பிரேமதாஸ தரப்பு 19 ஆவது திருத்தச் சட்டமூலம் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளது எனும் போது, எங்கோ ஒரு நெருக்கம் இரண்டு தரப்பிற்கும் இருப்பது தெரிகிறது.

இந்த நெருக்கம் உறுதி செய்யப்படுமிடத்து பல உண்மைகள் வெளிவர வாய்ப்புக்கள் உள்ளன. எது எவ்வாறாயினும் அரசியலமைப்பின் திருத்தச் சட்ட மூலங்கள் தொடர்கதையாக நீடிக்கப் போகிறது என்பதும் அதன் உள்நோக்கம் சிறுபான்மைத் தமிழ்மக்களுக்குப் பாதகத்தைச் செய்வதாக இருக்குமேயன்றி மற்றும்படி தமிழ் இனத்திற்கு உரிமை தருவதற்கானதல்ல என்பதும் அறுதியிட்டுக் கூறக்கூடிய உண்மை.

**விதுரன்**




## ரூபாய் நோட்டு



ஒரு கிராமத்தில் ஒரு பள்ளி இருந்தது. அந்த பள்ளியில் குமார் எனும் சிறுவன் படித்து வந்தான். ஒருநாள் குமார் சோகமாக இருப்பதை கண்ட ஆசிரியர் அவனிடம் காரணம் கேட்டார்.

அதற்கு பதிலளித்த குமார் தான் ஒரு தவறு செய்து விட்டதாகவும், அந்த தவறை காரணமாக காட்டி அவனின் நண்பர்கள் அவனை வெறுத்து ஒதுக்குவதாகவும் கூறினான்.

செய்த தவறை உணர்ந்த குமார் தன் நண்பர்களை எண்ணி ஏங்குவதை அறிந்து கொண்ட ஆசிரியர் குமாருக்கு உதவி செய்ய நினைத்தார்.

அடுத்த நாள் வகுப்பிற்கு சென்ற ஆசிரியர், ஒரு 50 ரூபாய் நோட்டை கையில் வைத்து இது யாருக்கு வேண்டும் என்று மாணவர்களிடம் கேட்டார்.

துள்ளி எழுந்த மாணவர்கள் அனைவரும் கைகளை உயர்த்தினர்.

மாணவர்களின் செய்கையை பார்த்த ஆசிரியர், அந்த நோட்டைக் கைகளால் கசக்கி இப்போது அந்த ரூபாய் நோட்டு யாருக்கு வேண்டும் எனக் கேட்டார். அப்போதும் மாணவர்கள் கைகளை தூக்கியவாறே நின்று கொண்டிருந்தனர்.

இம்முறை ரூபாய் நோட்டினை காலில் மிதித்த ஆசிரியர் மாணவர்களிடம் அதே கேள்வியை கேட்டார். மாணவர்களிடம் எந்த ஒரு மாற்றமும் இல்லை.

வகுப்பிலிருந்த அனைவருக்கும் அந்த 50 ரூபாய் வேண்டும் என்பதுபோல் கையை இறக்காமல் நின்றனர்.

கையில் ரூபாய் நோட்டை எடுத்த ஆசிரியர், இந்த 50 ரூபாய் நோட்டு அழுக்காக இருந்தாலும், கசங்கி இருந்தாலும் அதன் மதிப்பு குறைவதில்லை.

அதேபோல் சில நேரங்களில் நாம் தெரியாமல் செய்யும் தவறுகள் நம் மதிப்பை குறைத்துவிடாது.

ஒரு மனிதன் தவறு செய்வது இயல்பு. அவன் தான் செய்த தவறை உணர்ந்து விட்டாலே அவன் மன்னிக்கப்பட வேண்டும்.

அந்த வகையில் இந்த வகுப்பில் படிக்கும் குமார் சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக ஒரு தவறை செய்துவிட்டான். அந்த தவறு ரூபாய் நோட்டின்மேல் பட்டிருக்கும் அழுக்கை போன்றது.

அதனால் குமாரின் மதிப்பு எப்போதும் குறையாது. எனவே, தெரியாமல் செய்த தவறுக்காக குமாரை ஒதுக்காமல் அவனுடன் சேர்ந்து பழகுங்கள் என ஆசிரியர் கூறினார்.

ஆசிரியர் கூறிய கதையில் இருந்த உண்மையை உணர்ந்த சக மாணவர்கள் குமாரிடம் மன்னிப்பு கேட்டு அவனை தங்களுடன் சேர்த்துக் கொண்டனர்.

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## கலாரசிகனின் கலைக்கோயில்

59


கங்கைகொண்ட சோழபுரம்

பல்லவர்களின் கலைத்திறன் சாதனையைக் கண்டு பொறாமைப்பட்டு அடுத்த விநாடியே இராஜசிம்மேஸ்வரத்தை தரைமட்டமாக்காமல் அதை விடவும் ஒரு சிறந்த கோயிலை எழுப்பிக் காட்ட வேண்டும் என்று எண்ணியதில் அந்தக் கால மன்னர்களிடமிருந்து ராஜராஜன் தனித்து நிற்கின்றார்.

பெரிய கோயில் எப்படி கட்டப்பட வேண்டும் என்று ராஜராஜன் தன் மந்திரிகளுடன் ஆலோசனை செய்தார்.

நிச்சயம் இக்கோயிலைக் கட்டப் பல ஆயிரம் மக்கள் தேவைப்படும் என்கின்ற கேள்வி எழுப்பப்பட்டபோது 'நம் மண்ணில் தான் திறமைக்குக் குறைவில்லாமல் சிற்பிகளும் ஓவியர்களும் இருக்கிறார்களே! நிச்சயம் செய்து காட்ட முடியும்' என்று ராஜராஜன் தன் கலைஞர்கள் மீதது அதிக நம்பிக்கை வைத்துப் பேசினார்.

கட்டடக்கலை, ஓவியக்கலை, சிற்பக்கலை இந்த மூன்றின் உதவியோடு கட்டப்படுகின்ற கோயில் உச்சபட்ச சாதனையை நிகழ்த்திக் காட்ட வேண்டும் என்று ராஜராஜன் ஆசைப்பட்டபோது பாணர் சொன்னார்.

'இந்தக் கோயில் ஆயிரம் ஆண்டுகள் கழித்தும் பேசப்படும். பல ஆயிரம் ஆண்டுகள் நிலைத்து நிற்கும் சோழப்பேரரசின் அழியாத புகழைப் போல.'

ஆற்றங்கரை நாகரிகத்தின் வரலாற்றுப் பதிவான பெரிய கோயிலின் கட்டுமானப் பணி, 1006 இல் தொடங்கியது.

தஞ்சாவூர்ப் பகுதி முழுவதும் ஆறுகள், வாய்க்கால்கள், வயல்வெளிகள் எனப் பாறைகளே இல்லாத சமவெளிப் பிரதேசம். மலைகளே இல்லாத, கற்களே கிடைக்காத காவிரி சமவெளிப் பகுதியில் அறுபது, எண்பது கி.மீ. தொலைவில் இருந்து கற்களைக் கொண்டுவந்த கோயில் எழுப்பப்பட்டு உள்ளது.

கோயில் கட்டுமானத்தில் சுடு செங்கல் இல்லை. மரம் இல்லை. சொறிகல் என்ற பூராங்கல் இல்லை. மொத்தமும் கருங்கல். தரை கெட்டியாக உள்ள செம்மண் பிரதேசத்தில், பெரிய பெரிய கற்பாறைகளைக் கொண்டு வந்து இக்கோயிலைக் கட்டியது ராஜராஜன் காலத்தின் பொறியியல் திறமைக்குச் சான்று.

கற்கள் கொண்டுவரப்பட்ட இடங்களிலிருந்து மண்ணியல் ரீதியான ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளன. திருச்சியின் மான மலையிலிருந்தும் புதுக்கோட்டையை அடுத்த குன்னாண்டார் கோயில் பகுதியிலிருந்தும் உறுதியான கற்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன.

பச்சை மலையிலிருந்து பெரிய சிலைகளுக்கான கற்கள் கொண்டுவரப்பட்டன. பெரிய லிங்கத்துக்கான கல் திருவக்கரையிலிருந்து வரவழைக்கப்பட்டது.

மலைகளோ, கற்பாறைகளோ இல்லாத தஞ்சை பூமியில் ஏறத்தாழ இரண்டு இலட்சம் தொன் எடையுள்ள கற்களைக் கொண்டு 216 அடி உயரமுடைய ஒரு மலையாகவே தஞ்சைப் பெரிய கோயிலை வடித்துள்ளார் ராஜராஜன்.

(தொடரும்)



வடிவேலுவின் நகைச்சுவைகளைப் பிடிக்குமா உங்களுக்கு?




போதைக்குள் சிக்குண்டு சின்னாபின்ன மாகிறதே வடக்கு. தடுக்க ஏதும் வழி உண்டா?



எரிக் சொல்ஹெய்ம் கேம் ஆடுகிறாரோ?

**தானா — வதிரி**

**19 இற்கு சமாதி கட்டி 20 நிறைவேற்றம் எப்பேர்ப்பட்டது வியாசரே?**

பொதுஜன பெரமுவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் மிக முக்கியமான விடயம் இந்த 19 ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாதொழிப்பதென்பது.

அப்போதே இது சரியல்ல ராஜபக்ஷக்கள் சுயநலனுடன் செயற்படவே 19 இற்கு சமாதி கட்டப் பார்க்கிறார்கள் என மக்களுக்குத் தெளிவுபடுத்தி இருக்கலாமே.

அப்போது விட்டுவிட்டு மக்கள் அதற்கு ஆணை வழங்கிய பின்பு எதிர்ப்பை வெளியிட்டு பயனேதும் இல்லை.

எம்மைப் பொறுத்தவரை 13இற்கும் இதே நிலை வரும். அப்போது எல்லாம் முடிந்த பின்பு கத்தாமல் இப்போதே 13ஐப் பாதுகாக்க முயல்வோம்.

**நேதாஜி — வதிரி**

**எரிக் சொல்ஹெய்ம் கேம் ஆடுகிறாரோ?**

கேம் ஆடுகிறாரென்றால் அவர் வெளியிடும் கருத்துக்களுக்கு அரசாங்கம் மறுத்தான் அடித்திருக்கும்.

மாறாக மௌனம் காப்பது ஏன் என்பது புரியவில்லையா? என்ன செய்ய எமக்குக் கிடைத்த பொன்னான வாய்ப்பு அது.

அதை நழுவ விட்டுவிட்டோமே. இல்லையேல் இப்போது பல உயிர்களை நாம் இழக்காமல் இருந்திருப்போம்.

பலர் அவயவங்களை இழக்காமல் இருந்திருப்பர். பலபேர் காணாமல் போயிருக்கமாட்டார். அரசியலில் கைதிகளாக சிறையில் தவித்திருக்கமாட்டார்.

**தரன் — மானிப்பாய்**

**வடிவேலுவின் நகைச் சுவைகளைப் பிடிக்குமா உங்களுக்கு?**

வடிவேலு நடிக்காமல்விட்டு பல வருடங்கள் ஆனாலும் இன்றுவரை அனைத்துத் தொலைக்காட்சிகளும் வடிவேலுவை நம்பியே இருக்கின்றன.

என் தந்தை அடிக்கடி சொல்லுவார். நகைச்சுவை என்றால் அது நாகேஸ்தான் என்று நினைத்திருந்த எமக்கு வடிவேலுவைப் பார்த்தபின் வடிவேலைப்போல் இனி எவரும் இருக்கமாட்டர்கள் என்று.

உண்மைதான் நகைச்சுவையில் தொடாத உயரம் அத்தனையையும் தொட்டுவிட்டார் வைகைப்புயல்.

**விஜயரட்ணம் — யாழ்ப்பாணம்**

**தமிழ்மொழியில் எங்காவது சிங்களம் கலந்திருக்கிறதா வியாசரே?**

எனக்குத் தெரிய அப்படி எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

தமிழ்மொழியின் வரலாறு பற்றித் தெரியாதவர்கள் தான் அதை எதிர்ப்பார்களே தவிர தெரிந்தவர்கள் எதிர்க்கமாட்டார்கள்.

குண்டுச் சட்டியில குதிரை ஓட்டுபவர்கள் அதற்கு வெளியே நிறைய இடம் இருக்கிறது எனவும் அது எப்பேற்பட்டது எனவும் அறிந்து கொண்டால் நல்லது.

இலங்கையின் மூத்தகுடிகள் பேசும் தமிழ் மொழியில் உங்களை வாழ்த்துகின்றேன். இதற்குள் இனவாதம் இருக்கிறதா என்று தான் தேடிப் பார்க்கிறேன்.

**வியாசர் பதில்கள்**
**உங்கள் எண்ணத்தில் தோன்றும் கேள்விகளை 021 567 1532 என்ற இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்**

**கேதீஸ் — கீரிமலை**

**காணாமல் போன உறவுகளின் கண்ணீருக்கு முடிவே இல்லையா?**

என் பிள்ளை இருக்கிறானா? இல்லையா? என்றுதான் கேட்கிறாள் தாய்.

இதற்கு இன்றுவரை ஒரு முடிவு வருவதாக இல்லை.

தன் பிள்ளையைத் தேடிய தாயின் கண்ணீருக்கு எவ்வளவு பவர் இருக்கிறது என்பது இன்னமும் பலருக்குப் புரியவில்லை.

அண்மையில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டத்தில் ஒரு தாய் தன் கழுத்தை தானே நெரித்த துயரம் எப்பேற்பட்டது என்பது ஆட்சியாளர்களுக்கு இன்னமும் புரியவில்லை.

தாயின் கண்ணீரின் வலிமை புரியாதவர்கள் நிச்சயம் அனுபவிப்பர். இது நிச்சயம்.

**சுதன் — குப்பிழான்**

**புலிகளுக்கு அதிகாரம் வழங்க மகிந்த தயாராக இருந்தாராம் உண்மையோ?**

இனி இதைப்பற்றி பேசிப் பிரயோசனம் இல்லை என்பதே எமது கருத்து.

எப்போதும் பலம் இருக்கும்போதுதான் எதிரியும் மதிப்பான். பலம் இழந்தோமானால் ஏறி மிதித்துச் செல்வான்.

இதுதான் விடுதலைப் புலிகள் விடயத்திலும் நடந்தது.

தம் இனத்துக்காகப் போராடியவர்கள் மிகப்பலமாக இருக்கும்போது பேச்சுவார்த்தைகள் பல நடந்திருந்தன. அதே பலமிழந்த போது அழிக்கப்பட்டனர் அவ்வளவே.

**தமிழ் — யாழ்ப்பாணம்**

**மற்றவர் பிரச்சினைகளில் மூக்கை நுழைப்பது சரியானதா வியாசரே?**

மனிதருக்கே உரித்தான விசேட அம்சம் அது. அடுத்த வீட்டில் கணவனுக்கும் மனைவிக்கும் சண்டை என அறிந்தவுடன் அந்த வீட்டு வேலிக்குள் போய் மறைந்து நின்று அவர்களின் சண்டையை ரசிப்பது.

அடுத்தநாள் அதை அடுத்த வீட்டு பங்கஜத்துடன் இருமடங்காய் பெரிதுபடுத்தி பேசுவது.

அவள் ஏதோ பிரச்சினை போல. அதுதான் ஒரே சண்டை என தீர்ப்பு வழங்குவது. இவை எல்லாம் மனித குணம்.

எல்லா இடங்களிலும் இப்பேற்பட்டவர்கள் இருக்கத்தான் செய்வார்கள்.

**சிவம் — வதிரி**

**போதைக்குள் சிக்குண்டு சின்னாபின்ன மாகிறதே வடக்கு. தடுக்க ஏதும் வழி உண்டா?**

தலைக்கு மேல் வெள்ளம் வந்த பின்னர் அணைகட்ட மண்வெட்டி எடுப்பதுதான் எங்களுடைய பழக்கம்.

2009 இற்குப் பின்னர் வடக்குக் கிழக்கை மையமாகக் கொண்டு போதைப் பொருள் வேலைத்திட்டம் நடைபெறுகிறது. எம் இளைஞரைக் காப்பாற்ற நாம் அணிதிரள வேண்டும் என எத்தனையோதரம் எடுத்துச் சொன்னோம். யாரும் கேட்கவில்லை. இப்போது அல்லோலகல்லோலப்பட்டு பயனேதும் இல்லையே.

வெள்ளம் வருமுன் அணைகட்டுவதா? வந்தபின் மண்வெட்டி எடுப்பதா?. எது சரியானது சொல்லுங்கள்.

## சிந்திப்போம் செயற்படுவோம்

மருத்துவம் தந்த மகத்தான
சேவைகளை – நாளும்
மறவோம் கொரோனா வைரஸ்
நோயிற்கே
மருந்துமில்லை வாழ்வுக்கு என்றும்
மரணத்தால் தொல்லை

சிந்தித்தபோதே வந்ததே சோதனை
கொரோனாவால் சிரிப்பதா அழுவதா
இதுவே உலக மக்களின் கேள்வியாகும்
மாற்றம் தேவையா சிந்திப்போம்
செயற்படுவோம்...


உலகினையே புரட்டிப்போட்டு
உலுக்கியதே பயங்கரம்
உணர்வோடும் உறுதியோடும்
போராடுவோம் பயத்தைவிடு

பெற்ற தாய் தந்தை முகம்
பார்க்க முடியல
பெற்ற பிள்ளைகளோடு
கதைத்துப்பேச பயம்
உறவுகளோடு கூடி
உறவாட முடியவில்லை
அதனால் வருமாம்
கொரோனா வைரஸ் நோய்

சுகாதாரம் சொல்வது சரியென நம்பு
எப்போதும் முடிந்தளவு சவர்க்காரம்
போட்டு கைகளை கழுவு
மூக்கிற்கும் வாயுடன் இணைத்து
துணிகளை கட்டிவிடு

*கவியரசன்*
*கே.ஜே.றெகீஸ்*
*கிளிநொச்சி*

## தமிழனுக்கோர் வணக்கம்




தாய்மொழியின் தாலாட்டுக் கேட்டிடவே காத்திருக்கும் காதலர்கள் நாம்
வீசும் அந்தத் தமிழ்ச் சாரலை சுவாசித்திடும் தமிழர் நாம்
பேசும் அந்த பொன்மொழியை போற்றி வணங்கும் தமிழர் நாம்
வீற்றிருந்த நாட்களில் வீழா எழுமை பெற்று சாதனை செய்த இனத்தவராம் எம் தமிழர்
பகைவருக்கு பாடம் சொல்ல வையகத்தினையே எதிர்த்து நின்று
வீற்றிருந்த எதிரிகளை வீழவைத்த பின்னர் வீரவணக்கம் செலுத்திய தமிழர் நாம்
அத்தகைய சிறப்புமிக்க நாம் நெஞ்சகத்தில்
தமிழர் என்ற அகந்தையுடன் கால்பதிப்போம் எம் தாய் மண்ணில்

ந.விதுஷன், யா/ கற்கோவளம் மெ.மி.த.க.பாடசாலை

## பல வேடம் தரித்தவர்கள்



பச்சோந்தி கூட்டம் ஒன்று பாராளுமன்றத்திலே
மிச்சம் மீதி ஏதும் உண்டோ தம்மினத்தை தாரைவார்க்க
கோடிகளுக்கு அடிபணிந்து கொள்கைவழிதனை மறந்து
மாடிமாடியாய் வீடு கட்டி மண்டியிட்ட தலைமைகளே
வெள்ளை வேட்டியும் வேடிக்கைப் பேச்சுகளும்
முள்ளிவாய்க்கால் என்று வந்தால் வாய் அடைத்துப் போயிடுவார்
தீபாவளிக்கு தீர்வு என்றார் (ஐயா) நான்கைந்து நத்தாரும் போய்விட்டது
சட்டத்தில் சாணக்கியர் சரமாரி பேசிடுவார்
திட்டமிட்ட தீர்வுகளை தெற்கிற்கே வழங்கிடுவார்
பக்கச்சார்பு கொண்ட பாதுகாப்பு பறைசாற்றும் உண்மைகளை
அறளை பேர்ந்த வயசினிலே அரசியலும் எதற்கையா (எம்)
குரல்வளையை நெரித்தவர்களோடு கூட்டம்போட்டு நாட்டம் கொள்ளவோ
உடல்நிலையும் குரல்வளமும் நன்றாக இருந்தபோது
பெற்றுத்தரமுடியாத தீர்வுகளை தள்ளாடும் வயதிலே
பெற்றுத் தரவோ அரசியல் இருப்பு

தமிழ்யோகி

## நவீன யுகம்

அடுத்த வீட்டுப் பிள்ளை
பசியெடுத்துப் பாலுக்காய்
வீறிட்டு அழுத வேளை– அதை
அணைத்தெடுத்து உச்சி முகர்ந்து
தன் பிள்ளையாய் பசியாற்றி
தூங்க வைக்க ஆராரோ
பாடிய காலங்களை
வெறும் கற்பனை என
கடந்து செல்கின்றது நவீன யுகம்

ஊர் பெண்ணொருத்தி
பிரசவ வலியால் துடிக்க
இதயம் துடித்தழ
மாட்டுவண்டி பூட்டி
அவளை அதில் ஏற்றி
மருத்துவமனை கொண்டு சென்ற
காலங்கள் எல்லாம் வெறும் கட்டுக்கதை
என முரண்டு பேசுகின்றது நவீன யுகம்

ஊர்க்கோடியில் எண்பது வயது
பழம் ஒன்று இறந்துவிட
உடல் அடக்கம் வரை
ஊரில் யார் வீட்டிலும்
அடுப்பெரியாத கதை– இது
வெறும் பொய் என்கிறது நவீன யுகம்

வீதியில் செல்லும் பெண்ணை
யாரும் விசும்பு பேச்சு பேசி
வம்புக்கு இழுத்துவிட்டால்
தட்டிக்கேட்டு நிமிர்ந்து
நின்ற இளைஞர்களை
நடக்கும் காரியமா என
நளினம் பேசுகிறது நவீன யுகம்

வாளும் இல்லை– போதைப்பாக்கும் இல்லை
அப்போ கோவில் குளம் என்று
அடக்கமாய் வாழ்ந்தனாங்கள் என்றால்...
அடங்காத் தமிழன் என முகப்புத்தகத்தில்
முன்னிற்கிறது நவீன யுகம்

மாவை. நா.கஜேந்திரன்

## மௌனத்தின் தேடல்– 493



## பாதக மனிதா

வஞ்சினை நெஞ்சில் கொண்டு
வார்த்தை ஜாலம் பேசி
முன்னே முகமலர்ந்து
நல்லவர் போல் நடித்திடும்
நயவஞ்சக மனிதா
பின்னே ஆயுதம் வைத்து
பிறமுதுகில் குற்றுவது
பண்பாடோடு
வீரத்திற்கும் இழுக்கல்லவா?
விவேகமுள்ள
மனிதன் செயலாயிது

*சி.திவ்வியா*
*யா/ப.மெ.ம.வி.*

## மௌனத்தின் தேடல் –494



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதைகளை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி– சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## நம்பிக்கைத் துரோகம்

கிழக்கு அடிவானில்
காரிருள் மேகம் போல்
மன்னவர் மனதில்
மறைந்தது செஞ்சுடர்
அடைக்கலத்தில் அசராதே
அன்புக்கு அடிமையாயிராதே
உள்ளொன்று நாவொன்று
பேசும் உலகிது
மெய்யால் பொய்மையை
வென்றெடுத்தவர் பலர்
கரம்கொடுத்து கண் மயக்கி
கத்தியையும் தீட்டி
தம் செல்வுத்தியையும் தீட்டி
தீனி ஊட்டி திணறவைக்கும்
னிதமிது– இதுவும் கணப்பொழுதில்
கழுத்தறுக்கும் வினையல்லவோ

*வி.டிலக்ஸன்*
*யா/ தும்பளை*
*சிவப்பிரகாச*
*மகா வித்தியாலயம்*

## இன்றைய உலகம்

உலகில் இன்று
சில மனிதர்கள்
முகத்துக்கு நேரே
இப்படிக் கைகுலுக்கி
அன்பு காட்டுவர்
அவர்களே பின்புறம்
கத்தி வைத்துக்கொண்டு
நம்மைக் கொல்ல
சதித்திட்டம் தீட்டுவர்
ஆம் இதுதான்
உலகம்
மனிதா உன்னிடம்
வேண்டும் கவனம்

*சுப்பிரமணியம்*
*ஜெயரூபன்*
*பருத்தித்துறை*

## மனநலம்

பறவைகள் பறக்கச் சிறகு
மனிதர்கள் நினைக்க மனசு
துயரத்தில் தனிமைப்படல்
தவறான முடிவிற்கே வழிவகுக்கும்
உயிரை மாய்ப்பதும்
பழியை விதியின் மேல்
போடுவதும் அபத்தம்
இயற்கை மரணங்கள்
அருகி வருவதை
பத்திரிகைகளும் சுட்டிக்காட்டும்
திண்ணிய நெஞ்சத்துடன்
தெளிந்த நல்லறிவையும் வேண்டும்
மகாகவி பாரதியின்
பாடல் வரிகள்
மனநலக் கலையைப் போற்றும்

*க.நாகராசா*
*நுணாவில்*

## துரோகம் அழியாது

கை தா
கண்ணை மூடு
என நம்பவைத்து
நெஞ்சில்
குத்தாமல்
முதுகில் குத்தும்
கூட்டங்கள்
இருக்கும் வரை
துரோகம்
அழியாது

*இ.சுதர்சன்*
*துன்னாலை*


## நம்பிக்கைத் துரோகம்

உன்னை
நம்பினேன்
உன் புன்னகையை
பொய்யென
எண்ணாமல்
நட்புக் கொண்டேன்
அதற்கு நீ
தந்த பரிசு
நம்பிக்கைத்
துரோகம்

*வேணுஜன்*
*சரசாலை*



# தாயுள்ளம்



சிறுகதை

அன்னம்மாக்கிழவி கண்விழிக்கும் போது காலை எட்டு மணியைத் தாண்டியிருக்கும். கண்ணெல்லாம் ஒரே இரைச்சல்.வாய் வேப்பங்காயைப் போல் கசந்தது. உடம்பைத் திருப்பி எழும்ப முடியவில்லை. கால்கள் எல்லாம் மரத்த மாதிரியிருந்தது. வரவரக் கால்களின் நிலைமை மோசமாகப் போவதாக அவள் உணர்ந்தாள். காகம் ஒன்று இடை விடாது கரைந்த வண்ணம் இருந்தது.

வீட்டிற்கு அருகாமையால் செல்லும் வீதியால் வாகனங்கள் செல்லும் இரைச்சல் கேட்டது. முன்னர் எல்லாம் இந்த வீதி வெறிச்சோடிக்கிடக்கும். இப்போதெல்லாம் இரவு பகலாக ஒரே வாகன இரைச்சல் தான். காலவோட்டம் எத்தனை மாற்றங்களை ஏற்படுத்திச் செல்கின்றது.

"புள்ள... புள்ள..." என்று கூப்பிட்டுப் பார்த்தாள் அன்னம்மாக் கிழவி. சத்தத்தைக் காணவில்லை. காதைக் கூர்மையாக்கிக் கேட்டாள் குளியலறையில் குளிக்கும் சத்தம் கேட்டது. கிழவிக்குக் காது கொஞ்சம் கூர்மைதான். யாரும் அவளருகில் இரகசியம் கதைத்துவிட முடியாது. கேட்காது எனக் கதைத்தும் அவளிடம் வாங்கிக் கட்டுவதும் உண்டு. மீண்டும் காதுகளை கூர்மையாக்கிக் கொண்டாள். குளியலறையில் சத்தத்தைக் காணவில்லை.

"புள்ள... அடி புள்ள..." என உரத்துக் கூப்பிட்டாள். "இருங்கோ வாறனனை" என்று அடுத்த அறையில் இருந்து சத்தம் வந்தது. மகள் உடுப்பு மாத்துகிறாள் என்று எண்ணிக் கொண்டாள். சிறிது நேரத்தில் 50 வயது மதிக்கத்த க்க பெண்மணி ஒருத்தி வந்து நின்றாள்.

" என்னனை நித்திரையால எழும்பியாச்சே...?" இளைய மகள் மஞ்சு கனிவோடு கேட்டாள். தோய்ந்துவிட்டு தலையில் துணி யொன்றைச் சுற்றிய வாறு நீர் சொட்டச் சொட்ட வந்து நின்றாள். " என்னைக் கொஞ்சம் எழுப்பி விடு புள்ள" மகள் தன் தாயைப் பிடித்து மெல்ல இருத்தினாள். " எனக்கு தலை சுற்றுகிற மாதிரி இருக்கு. வாய் கொப்பளிக்கப் போறன். செம்புக்க தண்ணி தா"

மகள் தண்ணீர்ச் செம்புடன் மூலையில் கொப்பளிக்கவென இருந்த கிண்ணத்தையும் எடுத்துக் கொடுத்தாள். கிழவி கொப்பளித்துவிட்டு கையை நனைத்து ஈரக்கையால் முகத்தைத் துடைத்துக்கொண்டது. மெல்லக் கையால் தடவி தலையணைக்குக் கீழ் இருந்த விபூதிச்சரையை எடுத்து "சிவ... சிவா..." என்று பூசிக்கொண்டது. பின் இருந்த படியே கைகளைப் பரப்பி அருகில் இருந்த மேசையில் தடவி தனது சோடாப் புட்டி கண்ணாடியை எடுத்து அணிந்தது கிழவி. தூசுப்படலம் போல் மங்கலாகத் தெரிந்தது.

"அம்மா நான் கடைக்கு போய் மரக்கறி சாமான் வாங்கி வாறன் நீங்க இருங்கோ வந்து சாப்பாடு தாறன்" என்று கூறிவிட்டு புறப்பட்டாள் மகள். "உந்த றேடியோவை சத்தமா போட்டுட்டு போ புள்ள" என்றது கிழவி. கிழவியின் பொழுதுபோக்கு அது ஒன்று தான்.

மகள் கதவுகளைப் பூட்டி திறப்பை தன்னுடன் எடுத்துச் சென்றாள்.இன்று மட்டுமல்ல முப்பது வருடங்களுக்கு மேலாக வீட்டுச் சிறைக்குள் முடங்கிக் கிடக்கிறாள் இந்த அன்னம்மாக் கிழவி.

யார் இந்த அன்னம்மாக் கிழவி ?

1990 வரை இந்த வீட்டில் கோலோச்சியவள் அவள். சில்லுப்பூட்டிய மனித இயந்திரம். அவள் ஒரு போதும் ஓய்திருந் தது கிடையாது. அவளது குடும்பம் விவ சாய நடுத்தர குடும்பம். இவள் கணவன் கண்ணியமான ஓர் மனிதர். கடின உழைப்பாளி .இவளும் தோட்டத்தில் நீர் பாய்ச்சுவாள். வெங்காயத்தில் புல் பிடுங்குவாள்.மிளகாய்பழம் பிடுங்குவாள். புகையிலை உலர்த்துவாள். கணவனுக்கு சரி நிகராக வேலை செய்பவள். பின் பிள்ளைகளுக்கு தேவையானதைச் செய்ய வேண்டும். அடுப்படியுடன் போராடுவாள். இவளுக்கு ஐந்து பிள்ளைகள். இதில் மூத்தோர் இருவரும் பெண்கள்.

1980களில் அவள் வீடு பல போராளிகளுக்கு புகலிடம். அரவணைத்து அடைக்கலம் கொடுக்கும் அன்ன சஸ்திரம். ஆணும் பெண்ணுமாக இரு பிள்ளைகள் இரு வேறு போராட்ட அமைப்பில் இணைந்து நாட்டுக்காக உழைத்த காலம். இதனிடையே இருவரது போராளிக் குழுக்களும் வீட்டில் வந்து தங்கிச் செல்வார்கள்.

திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார், அம்பாறை என்று வருவோர் பட்டியல் நீண்டு செல்லும்.அவர்களும் அவளது பிள்ளைகள் தான். வீட்டில் உள்ளோரை விட அதிமாக உலையில் அரிசி வேகும்.

பல அரசியல் கூட்டங்கள் இங்கு அரங்கேறும்.முற்றத்தில் தலைவாசலில் இருக்கும் மல்லிகைப் பந்தல் அரசியல் கூடம் ஆகும். எப்போதாவது ஒருமுறை அவள் மகன் வீடு வருவான். எங்கிருந்து அப்பு வாராய்? என்பாள் ஒருமுறை முல்லைத்தீவு என்பான். மறுமுறை மலையகம் என்பான்.தன் பிள்ளையை எண்ணி பெருமை கொண் டாலும் பேதை மனம் கவலையும் கொள் ளும்.

மகனை கட்டியணைத்து உச்சி மோர மனம் ஏங்கும்.ஆனால் பிள்ளை சங்கடப் படுவான் என எண்ணி மனதில் தன் ஆசைகளைப் புதைத்துக் கொள்வாள்.

ஒருமுறை புழுதி என்று சொல்லி தன் பிள்ளையின் தலையை வாஞ்சையுடன் தடவி விட்டாள்.அம்மா நான் மட்டும் உன் பிள்ளையல்ல இங்கு வரும் போராளிகளும் உன் பிள்ளைகள் தான். எனக்காக எங்கள் குடும்பம் இருக்கு. ஆனால் குடும்பமே இல்லாத பல தோழர்கள் எம்முடன் இருக்கின்றார்கள் என்று கூறி நாசுக்காக அவள் அன்பில் நனையாது விலகிக் கொள்வான்.பெத்த மனம் பித்து பிள்ளை மனம் கல்லு என்பாள் தாய் ஏமாற்றத்துடன்.

1980களில் தமிழர் போராட்டம் புத்துயிர் பெற்ற காலம்.பல போராட்ட இயக்கங்கள் உருவான காலம் அனைத்து போராளிக் குழுக்களும் இராணுவத்தை முகாம்களுக்குள் முடக்கி வைத்த காலம். இந்தக் காலம் நீடிக்கவில்லை. இயக்க மோதல்கள் உருவானது.

பல உயிர்கள் அநியாயமாக பலியெடுக்கப்பட்டன. இந்தத் துர்ப்பாக்கிய நிலை அன்னம்மாக் கிழவியின் வீட்டுப் படலையடி வரை வந்தது.தன் குஞ்சைப் பருந்திடம் இருந்து காக்கும் கோழியைப் போல் சண்டைக் கோழியாக மாறிவிட்டாள் அன்னம்மா. தன் மகனைச் சுடவென தேடிவந்த போராளிக் குழுவோடு அவள் வாயத்தர்க்கத்தில் ஈடுபட்டிருந்தாள்.

நீ யாரடா என்ர பிள்ளையைச் சுட. உனக்கு யாரடா இந்த அதிகாரத்தை தந்தது. நீ அவனைச் சுடுகிறதென்டா முதல்ல என்னச் சுடு என்று அவர்களின் வாகனத்தின் முன் படுத்துக்கிடந்தவள்.

1986 பங்குனி மாதத்தில் ஓர் நாள் வெள்ளிக்கிழமை கழுவி விரதம் இருந்து மதியம் சாப்பிடும் போது புரையேறியது. உடனே அவள் "என்ர புள்ள என்னை நினைக்கிறான் "என்று எண்ணினாள். புரையேறும் போதெல்லாம் அவள் இப்படித்தான் சொல்லிக் கொள்வாள்.

அன்று தோட்டத்தில் நிறைய வேலை. அவள் கடகம் நிறைய மிளகாய்ப்பழங்களைப் பிடுங்கி தலைசுமையாய் வீடு வர மாலைச் சூரியன் மறையத் தொடங்கி விட்டான்.

வீட்டிற்கு வர வீடு இரண்டுபட்டுக் கிடந்தது. தலைவாசலில் இளையமகள் மயங்கிக் கிடந்தாள். வீட்டிற்குள் இரு ந்து மூத்த மகள் கூ... என்று கத்திய வாறு ஓடி வந்தாள். கிழவிக்கு புரிந்து விட்டது. தலையில் இருந்த மிளகாய்ப் பழ கடகத்தை பொத்தென்று போட்டாள். தன் தலையை கொண்டே தலைவா சல் குந்துடன் மோதி மோதிக் கதறி அழுதாள்.

முல்லைத்தீவில் ஆமி சுற்றிவளைச்சபோது தம்பியை சுட்டுப் போட்டாங்களாம். உடம்பையும்எடுக்க முடியலையாம் என்று கூறி கத்தி அழுதாள் மூத்த மகள். தலையை முட்டி முட்டி அழுத தாய் மூர்ச்சையாகிப் போனாள்.

விழிப்பு வரும் போதெல்லாம் தன் தலையை சுவரில் மோதிக் கொண்டாள். கிழவி யின் மகனின் இழப்பிற்குப் பின் வாழ்க்கை மட்டுமல்ல அவளின் கண்களும் ஒளியிழந்து போனது.

அன்றிலிருந்து அவள் வாழ்க்கை வீட்டிற்குள் முடங்கிப் போய் பின்னர் நான்கு சுவர்களுக்குள் அடங்கிப் போனது. பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் எல்லோரும் புலம்பெயர் நாடுகளில் வாழும் போது அவளது இளைய மகளும் மருமகனும் அவளை இங்கு பராமரித்து வருகின்றனர்.

அம்மா... அம்மா என்று குரல் கொடுத்தவாறு தன் முகக் கவசத்தை கழட்டி வைத்து விட்டு கை,கால் முகம் கழுவி விட்டு வந்தாள்.

"என்னணை றேடியோ சொல்லுது?" "ஏதோ பார்லிமென்றில் கன்னி அமர்வாம்" "வேற என்னவாம்?"

"உந்தக் கொரோனாவைப் பற்றியும் சொல்லுறாங்கள்.எவ்வளவு சனங்கள் வெளிநாடுகளில சாகுதுகள். என்னைத் தான் கடவுள் கொண்டு போறான் இல்லை" என்றாள் ஏக்கப் பெருமூச்சுடன்.

"ஏனணை உனக்கு என்ன குறை இருங்கோ சாப்பாடு கொண்டு வாறன்" என்று சொல்லி மகள் குசுனிப்பக்கம் போனாள்.

கிழவிக்கு தன் மகன் என்றாவது ஓர்நாள் வருவான் என்ற சிறிய நப்பாசையும் உண்டு. ஒருவேளை அவன் சிறைப்பட்டு இருக்கலாம்.என்றாவது ஒருநாள் என்னைத் தேடி வரலாம். அதற்காகத் தான் கடவுள் தன்னை உயிருடன் இன்னும் வைத்திருக்கிறார் என அந்தப் பேதை மனம் எண்ணிக் கொள்ளும்.

கிழவி கட்டிலின் கீழ் கையை விட்டு துலாவி பாக்குரலை எடுத்தது.தன் கைக்கெட்டிய தூரத்தில் இருந்த வெற்றிலைச் சரையை அதில் போட்டு லொக்கு லொக்கு என்று இடிக்கத் தொடங்கி விட்டாள். சாப்பிட்ட பின் வாய்க்கு வெற்றிலை போட வேண்டும்.

சி.சிறீரங்கன், உரும்பிராய்

# இலங்கை அரசியலும் அரசியலமைப்புத் திருத்தங்களும்

**கடந்தவார தொடர்ச்சி**

இந்தக் கட்டுரைத் தொடரிலே இலங்கையின் அரசியல் யாப்பில் இதுரை மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களையும் அவற்றுக்கான பின்னணிகள். அவற்றில் காணப்படும் சாதக பாதக விடயங்கள் மற்றும் புதிய திருத்தம் கொண்டிருக்க வேண்டிய அடிப்படைப் பண்புகளையும் பற்றி சுருக்கமாக பார்த்துக் கொண்டிருக்கின்றோம். 1977 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் பிரமாண்ட வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றிய ஐ.தே.கட்சி 1978 ஆம் ஆண்டு அரசியல் திட்டத்திலே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையைக் கொண்டு வந்தது என்று பார்த்தோம். இதன்மூலம் பிரதமராக தெரிவு செய்யப்பட்ட ஜெ.ஆர்.ஜெயவர்த்தன ஜனாதிபதித் தேர்தல் இன்றியே நிறைவேற்று அதிகார ஜனாதிபதியானார்.

மேலும் கடந்த வாரத்திலே மூன்றாவது அரசியல் யாப்பு சீர்திருத்தம் பற்றிப் பார்த்தோம். இந்த மூன்றாவது திருத்தத்தின் நோக்கம் ஜனாதிபதியின் முதல் 4 வருட பதவிக்காலம் நிறைவடைந்தவுடன் மீண்டுமொரு தடைவை மக்கள் வாக்கைப் பெற்றுக் கொள்வதற்கு இடமளிப்பதாகும். மூல யாப்பின்படி ஜனாதிபதியின் பதவிக் காலம் 6 வருடங்களாக இருக்கையில் இந்தத் திருத்தத்தின் மூலம் ஜனாதிபதி பதவியேற்று 4 வருட காலம் முடைவடைந்த பின்னர் எந்தக் காலத்திலும் ஒரு பிரகடனத்தின் மூலம் தான் தொடர்ந்து இன்னொரு பதவிக் காலத்திற்கு பதவியிலிருப்பதற்கு மக்களின் அனுமதியைக் கோர முடியும். எனினும் இவ்விடயம் கடந்த வாரம் 3 ஆவது திருத்தத்தின் பிரகாரம் "ஜனாதிபதியின் பதவிக் காலத்தின் முதல் 4 வருடகாலம் முடிவடைந்த பின்பு ஜனாதிபதி தேர்தலை நடத்தாமல் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தி மக்கள் அபிப்பிராயத்தைப் பெற்று ஜனாதிபதியின் பதவிக்காலத்தை மீண்டும் ஒரு தடவை பெற்றுக் கொள்ள இயலச் செய்வதாகும்" என தவறுதலாக இடம் பெற்று விட்டமையை வாசகர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

உண்மையில் இந்த திருத்தத்தை அக்கால அரசாங்கம் மேற்கொண்டதன் உள்நோக்கம் "காற்றுள்ள போதே தூற்றிக் கொள்" என்ற தமிழ் முதுமொழிக்கேற்ப தனக்கு சாதகமாக மக்கள் அபிப்பிராயம் காணப்படும் போதே தேர்தல் ஒன்றை நடத்தி தேர்தலில் வெற்றி பெற்று பதவியை தக்கவைத்துக் கொள்ளலாகும். ஏனெனில் 1977 ஆம் ஆண்டுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் பக்கம் அடித்த மாபெரும் ஆதரவு அலை படிப்படியாக குறையத் தொடங்கியமையை ஜெயவர்த்தன உணரத் தலைப்பட்டமையாகும். அந்த மக்கள் ஆதரவு குறைவடைவதற்குள் ஜனாதிபதித் தேர்தலை நடத்தி முடித்து விட அவர் தீர்மானித்தமையே 3 ஆவது அரசியல் திட்ட சீர்திருத்தத்திற்குரிய காரணமாகும். இந்தத் திருத்தத்தின் பின்னர் 20.10.1982 இல் நடைபெற்ற முதலாவது ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளரான ஜெ.ஆர்.ஜெயவர்த்தன 52.91% வாக்குகளைப் பெற்றுக் கொண்டார்.



## நாலாவது அரசியல் யாப்புச் சீர்திருத்தம் (23.12. 1982)

இத்திருத்தத்தின் மூலம் அரசியலமைப்பின் 21 ஆவது அத்தியாயத்தின் 161(உ) உறுப்புரை திருத்தம் செய்யப்பட்டது. இதன்படி 1977 இல் ஆட்சிக்கு வந்த பாராளுமன்றத்தின் ஆட்சிக் காலத்தை பாராளுமன்றத் தேர்தல் ஒன்றை நடத்தாமலே மேலும் 6 வருடங்கள் நீடித்துக் கொள்ள முடியும். இந்தத் திருத்தத்தின் பிரகாரம் முன்பே கலைக்கப்படாமலிருந்தால் முதல் பாராளுமன்றம் 1989 ஒகஸ்ட் 4 ஆம் திகதி வரை நிலைத்திருக்கும். இந்த அரசியலமைப்பு சீர்திருத்தத்தை மேற்கொள்வதானால் பாராளுமன்றத்தின் 2/3 பெரும்பான்மை பலத்தை பெறுவதை விட மக்கள் கருத்துக் கணிப்பு மூலம் அதற்கான அனுமதி பெறப்பட வேண்டும் என்பது உயர் நீதிமன்றத் தீர்ப்பாகும். இதனை செயற்படுத்துவதற்கு அப்போதைய அரசாங்கம் நாடுபூராகவும் 22.12.1982 இல் சர்வஜென வாக்கெடுப்பு ஒன்றை நடத்தியது. இதுவே இலங்கை அரசியல் வரலாற்றில் முதல் தடவையாகவும் ஒரே ஒரு தடவை மட்டும் நடைபெற்ற மக்கள் சர்வஜன வாக்கெடுப்பாகும். அரசறிவியலில் பயன்படுத்தப்படும் அடிப்படை எண்ணக்கருக்களுள் ஒன்றாக விளங்கும் மக்கள் தீர்ப்பு என்பது ஜனநாயகத்தின் ஓர் அங்கமாகக் கருதப்படுகின்றது. ஜனநாயகத்தில் இரண்டு விதமான முறைகள் காணப்படுகின்றன. ஒன்று நேரடி ஜனநாயக முறை, மற்றையது பிரதிநிதித்துவ ஜனநாயக முறை. மக்கள் தீர்ப்பென்பது நேரடி ஜனநாயக முறையாகும். இவ்வாறான மக்கள் தீர்ப்புக் கோரல்கள் சுவிட்சர்லாந்து நாட்டில் சர்வசாதாரணமாக நடத்தப்படும் மக்களாட்சி அரசாங்கச் செயன்முறையாகும். ஆனால் அங்கெல்லாம் ஒரு பொது நோக்கோடு அவை முன்னெடுக்கப்பட இங்கு இவ்வாறான சிறந்த அரசியல் செயன்முறை ஒரு குறுகிய அரசியல் நோக்கோடு செயற்படுத்தப்பட்டமையை அவதானிக்க முடிந்தது.

இந்தச் சர்வஜன வாக்கெடுப்பிலே பாராளுமன்றத்தின் பதவிக்காலத்தை மேலும் 6 ஆண்டுகள் நீடிப்பதற்கு விரும்பின் விளக்குச் சின்னத்திற்கு எதிராக புள்ளடியிட வேண்டும். விரும்பாது விடின் குடச் சின்னத்திற்கெதிராக புள்ளடியிட வேண்டும். இந்த வாக்கெடுப்பில் விளக்குச் சின்னத்திற்கு அதாவது பதவிக்காலத்தை நீடிப்பதற்கு ஆதரவாக 3,141,223 (54.66%) வாக்குகளும் எதிராக குடம் சின்னத்திற்கு 2,605,983 (45.34%) வாக்குகளும் கிடைத்தன.

## ஐந்தாவது அரசியல் யாப்புச் சீர்திருத்தம் (25.02.1983)

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரவு யாப்பின் உறுப்புரை 161(ஈ) (iii) திருத்தப்பட்டது. 30 நாட்களுக்குள் ஒரு குறிப்பிட்ட கட்சி தனது கட்சியில் ஏற்பட்டுள்ள வெற்றிடத்திற்கு ஒரு அங்கத்தவரை நியமிக்காது விடின் தேர்தல் ஆணையாளர் உடனடியாக அதனை ஜனாதிபதிக்கு அறிவிக்க வேண்டும். ஜனாதிபதி அத்தகைய வெற்றிடம் உள்ள தேர்தல் மாவட்டத்தில் தேர்தலை நடத்த வேண்டும். இந்தத் திருத்தமும் ஏறக்குறைய 4 ஆவது அரசியல் திருத்தத்திற்கு சமமானது என அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர். இதன்மூலம் பல தேர்தல் தொகுதிகளில் இடைத் தேர்தல் நடத்தப்பட்டன.

## ஆறாவது அரசியல் யாப்புச் சீர்திருத்தம் (08.08.1983)

இந்த அரசியல் சீர்திருத்தமும் இலங்கை அரசியல் வரலாற்றில் குறிப்பாக இலங்கை இனப் பிரச்சினையில் மிக முக்கியமான தாக்கத்தைச் செலுத்திய அரசியல் திட்ட சீர்திருத்தமாகும். இந்தத் திருத்தத்தின் பிரகாரம் எந்த ஒரு அரசியல் கட்சியோ அலலது மற்றைய சங்கங்களோ அல்லது ஒழுங்கமைப்போ இலங்கையின் ஆட்புலத்தில் தனியானதொரு அரசினை உருவாக்கலை ஒரு இலக்காகக் கொண்டிருக்கக் கூடாது.

6 ஆவது அரசியல் திருத்தமானது இலங்கை அரசியல் வரலாற்றில் இனப் பிரச்சினையை கூர்மையடையச் செய்த திருத்தமாக நோக்கப்படுகிறது. காலத்திற்குக்காலம் இலங்கையை ஆட்சி செய்த அரசாங்கங்களினால் கடைப் பிடிக்கப்பட்ட தூரநோக்கற்ற கொள்கைகளினால் இலங்கையில் இனப்பிரச்சினை ஆயுதப்போராட்டமாக பரிணமித்தது. அவ்வாறானதொரு மிக மோசமான காலப் பகுதியாக இலங்கை வரலாற்றில் 1983 ஜுலைக் கலவரம் அல்லது கறுப்பு ஜுலை நோக்கப்படுகின்றது. இவ்வாறானதொரு சம்பவத்தினால் தென்னிலங்கை வாழ் தமிழர்கள் மோசமாக தாக்கப்பட்டதுடன் பல்லாயிரக்கணக்கான உடைமைகள் அழிக்கப்பட்டு தமிழ் மக்கள் இந்தியா மற்றும் ஏனைய நாடுகளுக்கு புலம்பெயர்ந்தது மட்டுமல்லாது சர்வதேசத்தின் கவனமும் இலங்கையின்பாற் திருபப்பட்டது. தமிழர்களிடையே பிரிவினைவாத எண்ணம் வேர் விடவும் பலமடையவும் இக்கலவரம் வழி சமைத்தது.

6 ஆவது அரசியல் திருத்தத்தின் மூலம் அரசாங்கம் பிரிவினைவாத சக்திகளை தடை செய்ய உத்தேசித்தது. இந்த அரசியல் திட்ட சீர்திருத்தத்தின் நோக்கம் இலங்கைக்குள் வேறு நாடு உருவாவதற்கு துணை செய்யும் கட்சிகள் மற்றும் நபர்களை தடை செய்வதாகும். இந்தத் திருத்தத்திற்கிணங்க பாராளுமன்ற உறுப்பினர்களிடம் சத்தியப்பிரமாணம் வேண்டிக் கொள்ளப்பட்டது. அதன்படி பாராளுமன்ற உறுப்பினர்கள்

"………ஆகிய நான் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் திட்டத்தைப் பாதுகாப்பதோடு வேறு நாடு உருவாவதற்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இலங்கைக்குள் அல்லது வெளியில் உதவி புரிதல், துணை நிற்றல், அனுசரணை அளித்தல், பணம் வழங்கல், தைரியமளித்தல் மற்றும் போதனைகள் மேற்கொள்ளமாட்டேன் என்று கௌரவத்துடனும்தேசப்பற்றுடனும் உறுதி மொழி வழங்கி சத்தியப்பிரமாணம் செய்து கொள்கிறேன்" என்று சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர். இந்த அரசியலமைப்புத் திருத்தத்திற்கு அப்போதைய எதிர்க்கட்சியான தமிழர் விடுதலைக்கூட்டணி எதிர்ப்புத் தெரிவித்திருந்தது. அதன் காரணமாக அதன் தலைவர் அப்பாபிள்ளை அமிர்தலிங்கம் மற்றும் கட்சி உறுப்பினர்கள் பாராளுமன்றத்திலிருந்து விலக்கப்பட்டனர். இதன்மூலம் தமிழர் விடுதலைக் கூட்டணி உள்ளிட்ட அனைத்து தழிழ் அரசியல் சக்திகளினதும் தனி நாட்டுக்கான அரசியல் செயற்பாடுகள் முடக்கப்பட்டன. கூட்டணியினர் பாராளுமன்றத்தி லிருந்து விலகி தமிழ் நாட்டில் தஞ்சம் புகுந்தனர். தழிழ் இயக்கங்கள் தலை மறைவு செயற்பாட்டுக்கு தள்ளப்பட் டன. இது இலங்கையில் தமிழர் இனப்பிரச்சினை கூர்மையடைவதற்கான சாத்தியக் கூறுகளை அதிகரித்ததாக நடுநிலையான அரசியல் ஆய்வாளர்கள் கருதினர்.

(தொடரும்…)

-பிரணவன்-

# அதிகாரப் பரவலாக்கல் என்பது அனைவருக்கும் சமமானதாக இருக்க வேண்டும்

> தமிழரின் நிலையில் சிங்களவர்கள் இருந்திருந்தால் ஒவ்வொரு சிங்களவர்களின் மனநிலையும் எவ்வாறு இருக்கும் என்பதை ஒருகணம் சிந்தித்துப் பார்த்தால் தமிழினத்திற்கான உரிமை மறுக்கப்படாது என்பது வெள்ளிடைமலை

இலங்கையின் ஆட்சி அதிகார வரலாற்றில் தமிழர்களுக்கான தீர்வை வழங்க வேண்டும் என பேரினவாத அரசுக்கள் விரும்பியதே இல்லை.

சிறுபான்மை எனும் ஒற்றை வார்த்தைக்காய் தமிழர்கள் தொடர்ந்தும் புறக்கணிக்கப்படுகின்றமை ஆரோக்கியமான செயலன்று.

இனங்களுக்கிடையிலான நல்லுறவு மிக அவசியமானதாகின்றது. இந்நல்லுறவில் விரிசல் ஏற்படுமாயின் அது ஆரோக்கியமான ஒன்றாக அமையாது என்பதே எமது கருத்து.

இனவாதம் எங்கு, எப்படி தோற்றம் பெற்றன என்பதை நாம் அறிந்த கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

வெறும் வார்த்தையில் நல்லுறவு என்பது இருக்குமாயின் அது மீண்டும் பழைய இடத்திற்கு நாம் செல்வதையே நினைவுபடுத்தும்.

தமிழ் இளைஞர்கள் ஏன் ஆயுதம் ஏந்தினார்கள் என்பதை தென்னிலங்கை அரசியல்வாதிகள் ஒருகணம் சிந்திக்க வேண்டும்.

அத்துடன் எம்மால் தமிழினம் எவ்வளவு துன்பப்பட்டிருக்கிறது என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழரின் நிலையில் சிங்களவர்கள் இருந்திருந்தால் ஒவ்வொரு சிங்களவர்களின் மனநிலையும் எவ்வாறு இருக்கும் என்பதை ஒருகணம் சிந்தித்துப் பார்த்தால் தமிழினத்திற்கான உரிமை மறுக்கப்படாது என்பது வெள்ளிடைமலை.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருக்கும் போது தனது ஆட்சிக்காலம் முடியும் முன்னரே ஜனாதிபதி தேர்தலுக்கான அறிவிப்பை விடுத்தார்.

அத்துடன் என்னை எதிர்த்து நிற்கும் அந்த பலம்வாய்ந்த நபர் யார் என ஆவலுடன் எதிர்பார்த்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணிலோ அல்லது ஐக்கிய தேசியக் கட்சியில் உள்ள வேறு ஒருவரோதான் தன்னுடன் போட்டியிடப் போகிறார். தான் வென்று விடலாம் என எண்ணியதாலேயே அவர் அவ்வாறு செயற்பட்டார்.

இருப்பினும் தனது ஆட்சியில் தன்னுடன் இணைந்து செயற்பட்ட, முதல் நாள் ஜனாதிபதி செயலகத்திற்கு வந்து தன்னருகில் இருந்து அப்பம் சாப்பிட்டுச் சென்ற மைத்திரிபால சிறிசேனவே தனக்கெதிரான அந்த வேட்பாளர் என்பதை அப்போது அவர் அறிந்திலர்.


ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன என்றதும் அதிர்ந்து விட்டார் மகிந்த.

இறுதியில் மகிந்த ராஜபக்ஷ தோல்வியடைய மைத்திரி ஆட்சி அதிகாரத்திற்கு வந்து நல்லாட்சி எனும் நாமத்துடன் ஆட்சி நடத்த ஆரம்பித்தார்.

தேர்தல் வாக்குறுதிப்படி ஜனாதிபதிக்குள்ள அதிகாரங்களைக் குறைத்து பாராளுமன்றிற்கு அதிகாரங்களை வழங்கும் நடவடிக்கையில் 19 ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

நல்லாட்சி என்பது மக்கள் ஆணையாக இருந்தாலும் அது நிலைக்கவுமில்லை, நல்லாட்சியாய் செயற்படவும் இல்லை என்பது அனைவரும் அறிந்தது.

ஆனந்த சுதாகரன் என்ற அரசியல் கைதியின் மனைவி இறந்து போக இரண்டு பிள்ளைகள் அநாதைகளாகி அந்தரித்து நிற்க அடுத்த வருடம் உங்கள் தந்தை உங்களுடன் இருப்பார் என அந்தப் பிஞ்சு மனங்களில் நம்பிக்கை விதைத்த மைத்திரிபால சிறிசேன அதனை நடைமுறைப்படுத்தவில்லை.



வெறும் பெயரளவிற்கே அது நல்லாட்சி என்பதற்கு இது ஒன்றே போதுமான உதாரணமாகும்.

தமிழர்களுக்கான தீர்வுகளை வழங்குவதில் சரி, தமிழரின் பலத்தினை உடைத்த பெருமை கொண்ட ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருக்கத் தகுதி அற்றவர் என மைத்திரிபால சிறிசேன உணர்ந்து கொண்டார்.

பிணைமுறி மோசடி நல்லாட்சி என்கின்ற நாமத்துக்கே களங்கமாக அமைந்ததும் ஜனாதிபதிக்குத் தெரியாமல் பல திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன என்பதும் மைத்திரிபால சிறிசேனவின் அந்த நிலைப்பாட்டிற்குக் காரணமாகியது.

மக்களுக்கும் நல்லாட்சி அரசில் நம்பிக்கை இழக்கும் நிலைவர உயிர்த்த ஞாயிறு தற்கொலைத் தாக்குதல் பேரிடியாகியது.

பாதுகாப்பு நடைமுறைகள் சரியாக இல்லாததினாலேயே உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடைபெற்றன என்பது மறுக்க முடியாத உண்மை.

ஆயினும் ஏற்கனவே தற்கொலைத் தாக்குதலுக்கான அச்சுறுத்தல் பாதுகாப்புத் தரப்புகளுக்குக் கிடைத்ததாகவும் அதை அசண்டையீனம் செய்ததனாலேயே இந்த நிலை ஏற்பட்டது என்ற கருத்தும் எழுந்தது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என மைத்திரியும், இல்லை ஜனாதிபதி மைத்திரிக்கு இதுபற்றி அறிவித்தல் கிடைத்தது என ரணிலும் சண்டையிட்டது, பாடசாலையில் சிறுவர்களுக்குள் பென்சில், அழிறப்பர் எடுத்ததில் வரும் சண்டையாய் மக்கள் நோக்கினர்.

இதனால் நல்லாட்சி அரசாங்கத்தை இனி நம்பிப்பிரயோசனம் இல்லை என்ற முடிவுக்கு வந்தனர். அதுவே மகிந்தவின் மீள் எழுச்சியாகியது.

ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ அமோக வெற்றி பெற மீண்டும் மகிந்த ஆட்சி மலர்ந்ததாய் சிங்கள மக்கள் கொண்டாடினர்.

நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் மகிந்த அணியின் பிரதான பொருளாக 19 ஆவது திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்தல் என்ற வாக்குறுதியுடன் குதித்தவர்களுக்கு மக்களின் அமோக ஆதரவுடன் மூன்றில் இரண்டு பெரும்பான்மை எனும் அமோக பலம் கிடைத்தது.

19 ஆவது திருத்தச் சட்டத்தை நீக்கி 20 ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதுடன் 13 ஆவது திருத்தச் சட்டத்திற்கு சமாதி கட்டுங்கள் என்ற வாதங்கள் இப்போது மேலெழத் தொடங்கி விட்டன.

இலங்கையில் இனங்களுக்கிடையிலான முரண்பாடுகளில் தமிழர்களுக்கு தொடர்ந்து அநீதி இழைக்கப்பட்டதால் தமிழர்களுக்கான உச்ச அதிகாரங்களை வழங்கி அதனூடே ஒரு சுயாட்சியை ஏற்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாதொழிக்க வேண்டும் என்ற கருத்து இனவாதிகளிடம் எழுந்துள்ளது எனின் மீண்டும் தமிழினத்திற்கு இன்னல் விளைவிக்க பேரினவாதிகள் எண்ணுகிறார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது.

பாராளுமன்ற கன்னி அமர்வில் பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனின் "இலங்கையின் ஆதிக்குடிகளான தமிழ்க்குடியின் மொழியான தமிழால் உங்களை வாழ்த்துகிறேன்" என்ற கருத்திற்கு இனவாதங்களைத் தூண்டும் கருத்துகள் வருவதைப் பார்க்கும் போது தமிழர்கள் சிறுபான்மை இனத்தினர். உரிமை பற்றியோ தீர்வு பற்றியோ வரலாறு பற்றியோ பேசக்கூடாது. மீறிப் பேசினால் நடப்பதே வேறு எனும் தொனியில் தமிழரின் வாயை அடைப்பதாய் அமைகிறது.

அதிலும் தென்னிலங்கை தேரர் ஒருவர் தமிழர் இலங்கை என்ற வீட்டில் வாடகைக்கு இருப்பதாயும் வாடகைக்கு இருப்பவர்கள் வரலாறு பற்றிப் பேசக்கூடாது என்றும் கூறியிருக்கிறார் எனின், இவர்களின் சிந்தனை என்ன என்பது தெட்டத் தெளிவாகப் புரிகிறது.

இது சிங்கள பௌத்த நாடு, இங்கு நாம் வைத்ததே சட்டம், சிறுபான்மைத் தமிழர்கள் எதுவும் பேசக் கூடாது, மீறிப்பேசினால் பிரபாகரனுக்கு நடந்தது தான் நடக்கும் என்றால்,


மீண்டும் பழைய இடத்திற்கு தமிழ் இளைஞர்களைக் கொண்டு செல்வதற்கான நடவடிக்கையே தவிர வேறு எதுவுமாக இருக்க முடியாது.

தற்போது மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்றிருக்கின்ற இந்த அரசு தமிழர்களுக்கான தீர்வைப் பெற்றுத்தர இந்த மூன்றில் இரண்டைப் பயன்படுத்த வேண்டும்.

தமிழர்களுக்கான அதிகாரங்களை வழங்காமல் இது சிங்கள பௌத்த நாடு. இங்கு தமிழர்களுக்கென்றொரு பூர்வீகமோ, வரலாறோ இல்லை என்று செயற்படுவார்களாக இருந்தால்,

என்னை எதிர்த்துப் போட்டியிடும் அந்த பலம் வாய்ந்த வேட்பாளர் யார் என அப்போதைய ஜனாதிபதி மகிந்த கேட்ட போது, நானே என, அவருடனேயே இருந்த மைத்திரி எழுந்து நின்றது போல இன்னுமொருவர் எழுந்து நிற்கும் நிலை வரும் என்பது தெளிவு.

**அபிமன்யு**






பெண் என்பவள், நாம் அழும் போது அரவணைக்கும் அன்னை. பசிக்கும் போது உணவூட்டும் அன்புத்தாய். இன்பதுன்பங்களில் கலந்து கரைந்து நிற்கும் நிலையில் வாழ்க்கைத் துணை தளரும் போது தாங்கிப்பிடிக்கும் தமக்கை. தவிக்கும் போது பாசம் காட்டும் தங்கை. ஒரு பெண், நம் சமூகத்தில் வகிக்கும் பொறுப்பு பிரமிக்கத்தக்கது. நம் பெண்களைப் பற்றிப் பேசிப்பேசித்தீர, சில சொற்கள், வாக்கியங்கள், பக்கங்கள்போதாது. பெண்ணைப்பற்றி "பெண்ணிற் பெருந்தக்கயாவுள' எனக் குறிப்பிடுகிறார் திருவள்ளுவர். 'பெண்ணைவிடப் பெருமையுடையது வேறு என்ன இருக்க முடியும்?' என்பது அதன் பொருள்.

"யாயும் ஞாயும் யாராகியரோ...'எனத் தொடங்கும் பாடலில், "என் தாயும் உன்தாயும் யார்யாரோ... என் தந்தையும் உன் தந்தையும் எந்த முறையிலும் உறவினர்கள் அல்லர்... நானும் நீயும் கூட ஒருவரையொருவர் அறிந்தவர்களில்லை... ஆனாலும், செம்மண்ணும் தண்ணீரும் இரண்டறக் கலந்து உடன் பிரிக்க முடியாததைப் போல அன்புடைய நம் நெஞ்சங்கள் கலந்து விட்டனவே...' என்கிறார் செம்புலப் பெயனீரார் என்கிற சங்ககாலப்புலவர்.

இதயத்து அன்பு, அறமாக மலர்கிறது. அது சாதி அடையாளங்களைத் தாண்டிய அன்பு. சங்ககாலம் காட்டுகிற காதல் வாழ்வு. இதயத்தில் தொடங்கி, இல்லத்து அன்பாக மலர்ந்து, அறமாக விரிந்து மணம் பரப்புகிறது.

"முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்...' எனத் தொடங்கும் பாடலில் அப்பர் பெருமான், இறைவனைத் தலைவனாகவும், தன்னைத் தலைவியாகவும் எண்ணிப் பாடுகிறார். பக்தி வாழ்வில் இறைவன் திருவடிகளில் சரணாகதி அடைவதாகப்பாடும் இந்தப் பாடல், அன்பு வாழ்க்கைக்கும் பொருந்துவது போல் தோன்றுகிறது. தன்னை மறத்தல், தன்னலம் துறத்தல், தன் கணவனுக்காகவோ அல்லது காதல் தலைவனுக்காகவோ தன் சுகத்தை, இன்பத்தை, மகிழ்ச்சியைத் துறந்து தலைவனுக்காகவே வாழ்தல்... அவள் தான் பெண்!

**"உடம்பொடு உயிரிடை என்னமற்றன்ன**
**மடந்தையொடு எம்மிடை நட்பு'**

என்கிறார் திருவள்ளுவர். காதல் வாழ்வில், ஒருவர் மற்றவருக்காக வாழும் வாழ்க்கைதான் உண்மையான அன்பு கலந்தது. அது, `Made for each other' என்ற நிலைப்பாடு.

இந்த நிலைப்பாட்டை அமெரிக்க எழுத்தாளர் ஓ.ஹென்றி, "திகிஃப்ட்ஆஃப்திமேகி' (The Gift of the Magi) என்ற சிறுகதையில் அழகாக விபரிக்கிறார். எல்லோருக்கும் தெரிந்த கதைதான். டெல்லா, ஜிம் என்கிற தம்பதி. பண்டிகை நாள். பரிசுப் பொருட்களைப் பரிமாறிக்கொள்ள வேண்டிய தருணம். இருவரிடமும் பணம் இல்லை. டெல்லாவுக்கு முழங்கால் வரை நீளும் நீண்ட, அழ்கான கூந்தல் அதைச் சீவுவதற்குப் பொருத்தமான சீப்பு இல்லை. ஜிம், ஒரு தங்க வாட்ச் வைத்திருந்தான் அதற்குக்கை செயின் இல்லை. ஜிம், வாட்சை விற்று, டெல்லாவின் அழகிய கூந்தலைச் சீவுவதற்கு ஆமை ஓடுகளால் செய்யப்பட்ட, ரத்தினக் கற்கள் பதித்த விலையுயர்ந்த சீப்பு ஒன்றை வாங்கி வந்தான். டெல்லா, தன் கூந்தலை விற்று, ஜிம்மின் கைக்கடிகாரத்துக்கு பிளாட்டினத்தால் ஆனகை செயின் ஒன்று வாங்கி வந்தாள். இருவரும் பரிசுகளைப் பரிமாறிக் கொண்டார்கள். பரிசுப் பொருள்களால் இருவருக்கும் பயனில்லையே என்ற வருத்தம் இருந்தாலும், அன்பின் ஆணி வேரில் இருவரின் அன்பும் உயர்ந்து நின்றது.

ஒரு விளக்கைக் கொண்டு, ஆயிரம் விளக்குகளைப் பிரகாசிக்கச் செய்ய முடியும். அதனால், அந்த விளக்குக்கு எந்த இழப்பும் இல்லை. அதைப் போல அன்பை மற்றவர்களுக்குத் தருவதால், நாம் எதையும் இழக்கப் போவதில்லை. அன்பின் அடித்தளத்தில் ஏற்பட்ட வாழ்க்கையைத் தான் திருவள்ளுவர் "அறன் எனப்பட்டது இல் வாழ்க்கை' என்கிறார். இன்ப துன்பங்களில் இணைந்திருக்கிற சக துணையை "வாழ்க்கைத் துணை நலம்' என்று சொன்ன திருவள்ளுவர் தான் "மனைவி' எனப்படும் பெண்ணுக்கு "மாண்பு' என்ற அடைமொழியையும் தருகிறார்.

**"மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்**
**வளத்தக்காள் வாழ்க்கைத் துணை'**

என்கிறார். 'மாண்பு' என்ற சொல் இன்றைக்கு உயர் பதவியில் இருப்பவர்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது. ஆனால், அதை முதலில் பெண்ணுக்குத் தந்தவர் திருவள்ளுவர். ஓர் அலுவலகம். அங்கே பம்பரம் போல் பணியாற்றுகிற ஒரு பெண். சிறு சிறு தவறுகளுக்காக மேலதிகாரி அவளைத்திட்டும் போதெல்லாம், அவள் தன் மேஜைக்குள்ளிருந்து ஒரு புகைப்படத்தை எடுத்துப் பார்ப்பாள். பிறகு, இயல்பாகத் தன் பணியைத் தொடர ஆரம்பித்து விடுவாள். ஒருநாள் பக்கத்து இருக்கைத் தோழி கேட்டாள்... "அவர் திட்டுறப்பல்லாம், ஒரு போட்டோவை எடுத்துப் பார்க்குறே... அப்புறம் உற்சாகமா வேலை பார்க்க ஆரம்பிச்சுடுறே... அது எப்படி? என்கிட்ட காட்டேன்... அது எந்த சாமியோட படம்?"

**"அது சாமிபடமில்லை. என் கணவரோட புகைப்படம்."**

**"ஓஹோ... அப்போ உனக்குக் கணவனே கண்கண்ட தெய்வம்னு சொல்லு..."**

"அப்படியெல்லாம் ஒண்ணுமில்லை. நம்ம மேலதிகாரி திட்டுறப்போ, என் வீட்டுக்காரரோட படத்தை எடுத்துப் பார்க்குறேன்ல... அப்போ அவர் வீட்டுல திட்டுற வார்த்தைகளெல்லாம் ஞாபகத்துக்குவரும். அதுக்கு முன்னால இவரோட திட்டெல்லாம் சாதாரணமாத் தெரியும். நானும் உற்சாகமா வேலை பார்க்க ஆரம்பிச்சிடுவேன்..."

ஒரு வீட்டில் அப்பா, தன் மகளுக்கு வரன் பார்த்தார். ஜோதிடரிடம் தன் மகளுக்குப் பொருத்தம் பார்க்கச் சொல்லி இரு ஜாதகங்களைக் கொடுத்தார். வாங்கிப் பார்த்த ஜோதிடர், "ரெண்டுமே பெண்களோட ஜாதகமா இருக்கே!" என்று கேட்டார். "ஆமாம். ஒண்ணு, என் மகளோட ஜாதகம். இன்னொண்ணு, மாமியார் ஜாதகம். ரெண்டும் பொருத்தமா இருந்தாதான் என் மக வாழ்க்கை நல்லா இருக்கும்."

இது யதார்த்தம். ஆனால், பெண்ணின் முக்கியத்துவம் காலங்காலமாகப் போற்றப்பட்டும் வந்திருக்கிறது. சமூகம், புரட்சிப் பெண்களை அடையாளம் காட்டி வந்திருக்கிறது. இதிகாச காலத்தில் பாஞ்சாலியின் பெண்மை, ஆன்றோர்களும் சான்றோர்களும் கூடியிருந்த அரச சபையில் அவமானப்படுத்தப்பட்டது. "என் பெண்மைக்கு அவமானம் தேடித் தந்த அரசை அழித்தே தீருவேன்' என்று சபதமெடுத்தாள் பாஞ்சாலி. அதை நிறைவேற்றியும் காட்டினாள்.

**" காப்பிய காலத்தில் ஒரு புரட்சிப் பெண்மணி... அவள் கணவன் மீது "கள்வன்' என்று பழி சுமத்தப்பட்டது. "குற்றமற்ற என் கணவனைக் கொலை செய்த அரசை அழித்தே தீருவேன்' என்று சபதமெடுத்தாள். அதை நிறைவேற்றியும் காட்டினாள் "கண்ணகி' "**

காப்பிய காலத்தில் ஒரு புரட்சிப் பெண்மணி... அவள் கணவன் மீது "கள்வன்' என்று பழி சுமத்தப்பட்டது. "குற்றமற்ற என் கணவனைக் கொலை செய்த அரசை அழித்தே தீருவேன்' என்று சபதமெடுத்தாள். அதை நிறைவேற்றியும் காட்டினாள் "கண்ணகி எனப்படும் புரட்சிப் பெண்மணி.

திருமுறைக் காலத்தில், வீழ்ந்து கிடந்த தமிழினத்தை நிமிரச் செய்த, 'இசையும் தமிழும் எங்கும் பரவ வேண்டும்' என்று புரட்சி செய்த ஒரு மங்கை தோன்றினாள். 'வீழ்ந்து கிடந்த தமிழ்ப் பண்பாட்டை உயர்த்திப் பிடித்த அந்தப் பெண்ணின் பெயரை எவரெல்லாம் உச்சரிக்கிறார்களோ, அவர்களின் பாதங்களை என் தலை தாங்கும்' என்று சேக்கிழார் சொன்னார். அந்தப் பெண்மணி, "மங்கையருக்கு அரசி' என்று போற்றப்பட்ட மங்கையர்க்கரசி அம்மையார்.

அதனால்தான் நம் மகாசந்நிதானம், மங்கையர்க்கரசியார் பெயரில் மன்றங்களைத் தோற்றுவித்தார்கள். "மங்கையர்க்கரசியார் மன்றங்கள்' தமிழ் வழிபாடு, திருமுறை அர்ச்சனை, திருவிளக்கு வழிபாடு, கல்விப்பணி என ஒரு சமூகப்பணிக்களமாக இன்றைக்கும் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

"குடும்ப விளக்காகச் சுடர் விட்டுப் பிரகாசிக்கும் குடும்பப் பெண்கள், குவலயத்து விளக்காகச் சுடர் விட்டுப் பிரகாசிக்க வேண்டும். பெண்களின் அடிமைத்தனம் ஒழிய வேண்டும்' என்றான் பாரதி. தேசத்தின் விடுதலையோடு, சமூகத்தின் விடுதலையாக பெண்ணினத்தின் விடுதலையும் வேண்டும் என்று பிரகடனம் செய்தான். 'குழந்தைத் திருமணம் கூடவே கூடாது' என்றான். உரிய வயதில், தான் விரும்புகிற கணவனைப் பெண்கள் திருமணம் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினான். குறிப்பாக, இளம் விதவைப் பெண்கள் மறுமணம் செய்து கொள்ள வேண்டும் என்றான். 'பெண்களுக்குக் கல்வி அவசியம். ஆட்சி அதிகாரத்திலும் பெண்களின் பங்களிப்பு தேவை' என்றான். அந்த உண்மையான பெண்ணுரிமைச் சமூகம் மலர வேண்டும். எனவே,


**அன்பு உயிர்பெற்று எழுந்து அன்னையானது.**
**பண்பு உயிர்பெற்று எழுந்து தமக்கையானது.**
**காதல் உயிர்பெற்று எழுந்து வாழ்க்கைத் துணைவியானது.**
**எல்லாம் ஒருருவாகப் பெண்மையானது.**
**பெண்மையே தாய்மையானது.**
**தாய்மையே இறைமையானது.**

# காங்கிரஸால் ஓரம் கட்டப்பட்டாலும்

# விஸ்வாசத்தால் உயர்ந்த பிரணாப்

**பிரதமர் நாற்காலி தவிர அநேகமாக இந்திய அரசின் உயர்பதவிகள் அனைத்தையும் அடைந்த ஓர் அரசியல்வாதி, எல்லாக் கட்சிக்காரர்களுக்கும் நண்பராக இருப்பது ஆச்சர்யம். மூன்று தலைமுறை காங்கிரஸ்காரராக இருந்தும், தயக்க மின்றி ஆர்.எஸ்.எஸ்.மாநாட்டுக்குச் சிறப்பு விருந்தினராகச் சென்று பங்கேற்றதும் ஆச்சர்யம். காங்கிரஸ் கட்சியின் தெரிவாக குடியரசுத் தலைவர் ஆன அவரை, "தந்தை போல இருந்து என்னை வழி நடத்தினார்" என பிரதமர் நரேந்திர மோடி புகழ்ந்ததும் ஆச்சர்யம். இந்தியாவின் மிக உயரிய கௌரவமான 'பாரதரத்னா' விருதை பி.ஜே.பி. அரசு அவருக்கு அளித்தது மேலும் ஓர் ஆச்சர்யம்.**

இத்தனை ஆச்சர்யங்களுக்குச் சொந்தக்காரரான பிரணாப் முகர்ஜி, 84 வயதில் இப்போது மறைந்திருக்கிறார். 'இந்தியாவின் முதல் குடிமகன்' என்ற அடையாளத்துடன் ஜனாதிபதி மாளிகையில் ஐந்து ஆண்டுகள் குடியிருந்து விட்டால், அது நிறைவான அரசியல் வாழ்வு. ஆனால், இரண்டு முறை பிரதமர் நாற்காலி வரை நெருங்கிச் சென்று, அது கைகூடாத நிராசையுடன் விடை பெற்றிருக்கிறார் அவர்.



மேற்கு வங்காள அரசியலில் இருந்த பிரணாபை அடையாளம் கண்டு டில்லிக்கு அழைத்தவர் இந்திரா காந்தி. 1969 ஆம் ஆண்டில் ராஜ்யசபா எம்.பியாகி டில்லி வந்தவர், நான்கே ஆண்டுகளில் இந்திராவின் அமைச்சரவையில் இடம்பிடித்தார். பல சீனியர்களைத் தாண்டி இந்திராவின் நம்பிக்கைக்குரிய தளபதியாக மாறினார்.

காங்கிரஸில் பலகிளர்ச்சிகள் நிகழ்ந்து கொண்டிருந்த அந்தக் காலத்தில், இந்திராவுக்கு நம்பிக்கையான சமாதானத் தூதர்கள் தேவைப்பட்டனர். இந்தியா முழுக்க எதிர்க்குரல் எழுப்பும் மூத்த தலைவர்களிடம் ஓடிப்போய், இந்திராவின் சார்பில் சமாதானம் பேசும் நம்பிக்கை மனிதராக பிரணாப் இருந்தார்.

இந்திராகாந்தி அவசர நிலையைப் பிரகடனம் செய்த போது பிரணாப் தர்ம சங்கடத்தில் தவித்தார். அவருக்குள் இருந்த ஜனநாயகவாதி, 'இந்திரா செய்வது தவறு. இதை எதிர்த்துக் குரல்கொடு' என எச்சரித்தான். ஆனால், பிரணாபின் தந்தை அவரைக் கண்டித்தார். "எல்லோரையும் போல நீயும் இந்திராவை எதிர்க்காதே! இந்த நெருக்கடியான தருணத்தில் அவருக்கு விசுவாசமாக இரு"என்று தந்தை சொன்னதை மதித்தார் பிரணாப். அவசர நிலைக் காலத்தின் அழியாத கறை, காங்கிரஸ் கட்சியின் மீது நிரந்தரமாகப் படிந்தது போலவே, பிரணாபின் அரசியல் வாழ்விலும் படிந்தது.

ஆனால், அந்த விசுவாசம் தான் இந்திரா அவரை முழுமையாக நம்புவதற்குக் காரணமாக அமைந்தது. மீண்டும் ஆட்சிக்குவந்தபோது, பிரணாபைக் கேட்காமல் அவர் எதையும் செய்ததில்லை. அமைச்சரவையில் அவர் 'நம்பர் 2' இடத்தில் இருந்தார். இந்திரா வெளிநாடு செல்லும் நேரங்களில், பிரதமரின் இடத்திலிருந்து மற்ற அமைச்சர்களை வழிநடத்தியது பிரணாப் முகர்ஜி தான்.

அதுவே தான் பிரணாபின் அரசியல் வாழ்வுக்குச் சறுக்கலாகவும் அமைந்தது. 1984, ஒக்டோபர் 31 அன்று இந்திரா சுடப்பட்ட போது பிரணாப் கொல்கத்தாவில் இருந்தார். ராஜீவ்காந்தியும் தற்செயலாக கொல்கத்தா போயிருந்தார். டில்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் இந்திரா உயிருக்குப் போராடிக் கொண்டிருக்க, ராஜீவையும் பிரணாபையும் சிறப்பு விமானம் மூலம் டில்லிக்கு அழைத்து வந்தார்கள். விமானம் நடு வழியில் இருந்தபோதே, இந்திராவின் மரணச் செய்தி வந்தது. கூடவே, கலவரச் செய்திகளும் வந்தன.

பிரதமர் இல்லாத சூழலில், நம்பர் 2 இடத்தில் இருப்பவர் தானே நாட்டை வழி நடத்த வேண்டும்! எனவே, விமானத்தில் வரும்போதே விமானி மூலம் டில்லிக்குத் தகவல் சொல்லி, முப்படைத் தளபதிகள், முக்கிய அதிகாரிகளை விமான நிலையத்துக்கு வரச்சொன்னார். விமானத்திலிருந்து இறங்கியதும், அவர்களுக்குக் கட்டளைகள் பிறப்பித்தார். அதே விமானத்தில் வந்த ராஜீவ் காந்திக்கு ஆறுதல் சொல்லக் காத்திருந்த சில தலைவர்கள் இதைத் தவறாகப் புரிந்து கொண்டனர். 'இந்திரா இல்லாத சூழ்நிலையில் பிரதமர் நாற்காலியை பிரணாப் கைப்பற்ற நினைக்கிறார்' என ராஜீவிடம் போட்டுக் கொடுத்தனர்.

தான் உயிராக நேசித்து விசுவாசம் காட்டிய தலைவியின் மரணத்துயரில் இருந்த பிரணாப் முகர்ஜிக்கு அடுத்தடுத்து துயரச்செய்திகளே வந்தன. ராஜீவ்காந்தி பிரதமராகி அமைத்த முதலமைச்சரவையில் அவர் இடம் பெறவில்லை. கட்சிப் பதவியிலிருந்தும் நீக்கப்பட்டார். தன்மானத்துக்கு விடப்பட்ட சவாலாக இதைக் கருதிய பிரணாப், 1986ஆம் ஆண்டு ராஷ்ட்ரிய சமாஜ்வாடி காங்கிரஸ் என்ற தனிக்கட்சியை ஆரம்பித்தார். பல மாநிலங்களில் ஓரங்கட்டப்பட்ட காங்கிரஸ் தலைவர்களை இணைத்துக் கொண்டு பலம் காட்ட ஆரம்பித்தார்.

ஆட்சியை இழந்த பிறகு ராஜீவ்காந்தி இவரைப் புரிந்து கொண்டார். 'பிரணாப் போன்ற ஓர் அறிவுஜீவி காங்கிரஸுக்கு வேண்டும்' என்று சமாதானம் பேசினார். பிரணாப் தன் கட்சியைக் கலைத்துவிட்டு, மீண்டும் காங்கிரஸில் இணைந்தார். 1991 தேர்தல் பிரசார நேரத்தில் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட, மீண்டும் ஒருமுறை காங்கிரஸ் தலைமையில் வெற்றிடம் ஏற்பட்டது.

'சீனியர் தலைவர்' என்ற முறையில் பிரதமர் பதவிக்குத் தன்னைத் தகுதியான நபராகக் கருதினார் பிரணாப். அதற்காக ஆதரவும் திரட்ட ஆரம்பித்தார். ஆனால், 'முன் கோபக்காரர்' என்ற இமேஜும், இடையில் பிரிந்து போய் தனிக் கட்சி நடத்தியதும் அவருக்கு எதிரான விடயங்களாக ஆகின. 'பிரணாப் நமக்கு இணக்கமாக இருக்க மாட்டார்' என நினைத்து, கிட்டத்தட்ட அரசியல் துறவறம் போயிருந்த நரசிம்மராவை இழுத்து வந்து பிரதமர் நாற்காலியில் உட்கார வைத்தார்கள் மற்ற தலைவர்கள். முதல் வாய்ப்பு பறிபோனது.

1982-84 காலகட்டத்தில் பிரணாப் நிதியமைச்சர். 'வெளிநாடுகளில் போய் படித்த பொருளாதார நிபுணர்' என அவரிடம் யாரோ மன்மோகன் சிங்கை அறிமுகம் செய்து வைத்தார்கள். உடனே மன்மோகனை ரிசர்வ்வங்கி ஆளுநர் ஆக்கினார் அவர். பிற்காலத்தில் நரசிம்மராவ் அந்த மன்மோகனை நிதியமைச்சர் ஆக்குவார் என்பதை பிரணாப் எதிர்பார்க்கவில்லை.

சோனியாகாந்தி காங்கிரஸ் தலைவராகப் பதவியேற்றதும், பிரணாபின் ஆலோசனைகளைக் கேட்க ஆரம்பித்தார். மாமியாரைப் போலவே மருமகளையும் தலைவியாக ஏற்றார் பிரணாப். அந்த மருமகள் தன்னை ஒதுக்கிவிட்டு, மன்மோகன்சிங்கை பிரதமர் ஆக்கிய திருப்பத்தை அவர் எதிர்பார்க்கவில்லை. ரிசர்வ் வங்கியின் ஆளுநராகத் தனக்குக் கீழே இருந்தவர் பிரதமராகி விட, அவருக்குக் கீழே அமைச்சராகப் பணிபுரியும் சூழலைச் சலனமின்றி ஏற்றுக் கொண்டார் பிரணாப். மன்மோகனும் அவரை கண்ணியத்துடன் நடத்தினார்.

அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தத்தை எதிர்த்து, காங்கிரஸ் கூட்டணி அரசுக்கான ஆதரவை இடது சாரிகள் விலக்கிக் கொண்டனர். '2009 தேர்தலுக்குப் பின் காங்கிரஸ் மீண்டும் ஆட்சி அமைக்க இடது சாரிகள் தயவு தேவைப்படும். அப்போது பிரதமர் பதவிக்குத் தன்னை இடது சாரிகள் பரிந்துரைப் பார்கள்' என பிரணாப் கருதினார்.

அந்தத் தேர்தலில் அப்படி ஒரு சூழலே வராமல் போய்விட்டது. சோர்ந்து போயிருந்த பிரணாப், ஜனாதிபதி பதவியை வேறு வழியின்றி ஏற்றுக் கொண்டார்.

ஒவ்வோர் ஆண்டும் துர்கா பூஜைக்கு மேற்கு வங்காளம் சென்று, தான் பிறந்த மிரதி கிராமத்தில் பூஜையைக் கொண்டாடுவார் பிரணாப். ஜனாதிபதியாக இருந்தபோதும், தன் ஊர் மக்களுடன் கொண்டாடும் இந்த வழக்கத்தை மாற்றியதில்லை. 'இந்தியாவின் முதல் குடிமகன்' என்பதைப் போலவே' மிரதி கிராமத்தின் தலைமகன்' என்ற அடையாளத்தையும் முக்கியமாகக் கருதினார் அவர்.

அடுத்த மாதம் மிரதி மக்கள், தங்கள் தலைமகன் இல்லாத துர்கா பூஜையை எதிர்கொள்வார்கள்.

**-ஜூனியர் விகடன்-**

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : அவளுக்கென்று ஒரு மனம்
இயற்றியவர் : கண்ணதாசன்
இசை : எம்.எஸ்.விஸ்வநாதன்
பாடியவர் : எஸ்.ஜானகி




உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்
உன்னை உள்ளமெங்கும் அள்ளித் தெளித்தேன்
உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்
உன்னை உள்ளமெங்கும் அள்ளித் தெளித்தேன்

உறவினில் விளையாடி வரும் கனவுகள் பலகோடி
உறவினில் விளையாடி வரும் கனவுகள் பலகோடி
உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்
உன்னை உள்ளமெங்கும் அள்ளித் தெளித்தேன்

காற்றில் ஆடும் மாலை என்னை பெண்மை என்றது
காற்றில் ஆடும் மாலை என்னை பெண்மை என்றது
காதல் ஒன்று தானே வாழ்வில் உண்மை என்றது
காதல் ஒன்று தானே வாழ்வில் உண்மை என்றது
இதழுடன் இதழாட நீ இளமையில் நடமாடு
நினைத்தால் போதும் வருவேன்
ஆஆ ஆஆ தடுத்தால் கூட தருவேன்

உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்
உன்னை உள்ளமெங்கும் அள்ளித் தெளித்தேன்

வெள்ளம் செல்லும் வேகம் எந்தன் உள்ளம் சென்றது
வேகம் வந்த நேரம் இன்ப இல்லம் கண்டது
இனியொரு பிரிவேது அந்த நினைவுக்கு முடிவேது
இரவும் பகலும் கலையே
ஆஆ ஆஆ இருவர் நிலையும் சிலையே


உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்
உன்னை உள்ளமெங்கும் அள்ளித் தெளித்தேன்

ஊடல் கொண்ட பெண்மை அங்கே தனியே நின்றது
ஊடல் கொண்ட பெண்மை அங்கே தனியே நின்றது
கூடல் கொள்ள மன்னன் உள்ளம் அருகே வந்தது
கூடல் கொள்ள மன்னன் உள்ளம் அருகே வந்தது
என்னடி விளையாட்டு என்று சொன்னவன் மொழிகேட்டு
ஆசையில் விழுந்தேன் அங்கே
ஆஆ ஆஆ காலையில் கனவுகள் எங்கே

உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்
உன்னை உள்ளமெங்கும் அள்ளித் தெளித்தேன்
உறவினில் விளையாடி வரும் கனவுகள் பலகோடி
உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்

# பாரதியைக் கவர்ந்த பெண் துறவி





அவள் ஒரு பெண் துறவி. நாட்டில் விடுதலைப் போராட்டம் குறித்து ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுவதற்கு சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டு இருந்தார். ஆங்கிலத்தில் அழகாக உரையாற்றினார். அவர் பேசி முடித்தவுடன் விழாவுக்கு தலைமை தாங்கிய நபர், பெண் துறவியின் ஆங்கில உச்சரிப்பு, இனிய குரல், கம்பீரத் தோற்றம் போன்றவற்றை புகழ்ந்து பேசிக் கொண்டிருந்தார். இதைக் கேட்டு பொறுமை இழந்த பெண் துறவி ஆவேசமாக எழுந்து "மூடுங்கள் உங்கள் திருவாயை. அடிமைத்தனத்தில் ஆனந்தம் கொள்ளும் அசடுகள், தேசிய உணர்வற்ற மரக்கட்டைகள், நாட்டுக்காகச் செய்ய வேண்டிய வேலைத் திட்டங்கள் குறித்து நான் பேசியவை உங்கள் காதில் நுழையவில்லை. ஆனால் ஆங்கிலச் சொல் சித்திரத்தில் சொக்கிப் பாராட்டுகிறீர்கள் என சீறினார்.

புகழ்ச்சிக்கு பலர் அடிமையாகும் நிலையில் புகழ்ந்து பேசியதை கடிந்து கொண்டதோடு தேச விடுதலையே இலக்கு என்றும் அதை நோக்கியே பயணிக்க வேண்டும் என்பதனையும் அழுத்தமாக பதிவு செய்து இருந்தார் அவர்.

இந்தப் புயல் பேச்சுக்குச் சொந்தமான பெண் துறவி அயர்லாந்து நாட்டைச் சேர்ந்தவர். ஆம், சுவாமி விவேகானந்தரின் முதன்மை சீடரான நிவேதிதா தான் அவர். அவருடைய இயற்பெயர் மார்கரெட் எலிசபெத் நோபிள். அயர்லாந்தில் 1867 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 28 ஆம் திகதி பிறந்தார். சமூக சேவகி, எழுத்தாளர், ஆசிரியை என பன்முகம் கொண்டவர். விவேகானந்தரின் சொற்பொழிவுகளைக் கேட்டு அவர் வழி நடக்கத் தொடங்கினார்.

விவேகானந்தரை குருவாக ஏற்று பயிற்சி பெற்றார். அவரின் அறிவாற்றல் கண்டு விவேகானந்தரும் சிறப்பாக பயிற்றுவித்தார். அவருக்கு பிரம்மச்சாரிய தீட்சை கொடுக்கும் போது மார்கரெட் எலிசபெத் நோபிள் என்ற பெயரை நிவேதிதா என்று விவேகானந்தர் மாற்றினார்.

நிவேதிதா என்றால் தெய்வத்துக்கு அர்ப்பணிப்பு என்று பொருள்படும். விவேகானந்தரின் அழைப்பை ஏற்று இந்தியாவுக்கு தொண்டாற்றுவதற்காக நிவேதிதா சென்றார்.

கொல்கத்தாவில் பெண்களுக்கான பள்ளியைத் தொடங்கி நடத்தினார். அந்த பள்ளியில் பெண் குழந்தைகளுக்கு எழுத, படிக்கச் சொல்லிக் கொடுத்ததுடன் ஓவியம் வரைதல், மண் பொம்மைகள் செய்தல், துணி தைத்தல் போன்றவற்றையும் கற்றுக் கொடுத்தார். பின்னர் தாய்மார்களுக்கும் கல்வி மற்றும் நுண்கலைகளை போதித்தார். அவர் பள்ளிக்கூடத்தை நடத்துவதற்காக புத்தகங்கள் எழுதி நிதி திரட்டினார். வெளிநாடுகளிலும் நிதி திரட்டி பள்ளியை நடத்தினார்.

விவேகானந்தர் மறைவுக்குப் பிறகு நாட்டின் விடுதலைக்காகவும் நிவேதிதா செயற்படத் தொடங்கினார். விவேகானந்தர் மறையவில்லை. அவர் நம்மிடையே இருந்து வருகிறார். வருந்திக் கொண்டிருப்பதை விட மேலும் பணிசெய்ய விரும்புகிறேன் என்று அவருடைய பணியைச் செவ்வனே செய்தார். ஆரம்பகால கட்டத்தில் இங்கிலாந்தும் இந்தியாவும் நட்புறவு நாடுகள், நட்புடன் வாழுகின்றன என்று நம்பிக் கொண்டு இருந்த அவருக்கு இந்திய வாழ்க்கை அனுபவம் விடுதலை பெறாமல் மேன்மை பெற முடியாது என்பதனை உணர வைத்தது.

இந்திய விடுதலைக்காக பாட்னா, லக்னோ, காசி, மும்பை, நாக்பூர், சென்னை எனப் பல இடங்களிலும் மேடைகளில் அவர் உரையாற்றினார். "வந்தே மாதரம்" தேசிய பாடலாக அங்கீகரிக்கப்படாத அந்தக் காலத்திலேயே அவர் நடத்திய பள்ளியில் காலை வணக்கத்துடன் "வந்தே மாதரம்" பாடலை பாடச் செய்தார். அவருடைய எழுச்சி உரையையும் நேர்த்தியான வாழ்க்கைப் பயணத்தையும் அறிந்ததால் அவரைச் சந்திக்க வேண்டும் என்று பாரதி விரும்பினார்.

கொல்கத்தாவில் நிவேதிதாவை பாரதி சந்தித்துப் பேசினார். இருவரும் இந்திய விடுதலை குறித்து உணர்வுபூர்வமாகப் பேசிக் கொண்டு இருந்தார்கள். அப்போது நிவேதிதா பாரதியைப் பார்த்து நீங்கள் உங்கள் மனைவியை அழைத்து வரவில்லையா? என்று கேட்டார். அதற்கு பாரதி தனது மனைவியை வெளியே எங்கும் அழைத்துச் செல்வது இல்லை என்றும் அவருக்கு அரசியல் குறித்து எதுவும் தெரியாது என்றும் கூறினார்.

இதைக் கேட்ட நிவேதிதா உங்கள் மனைவிக்கே நீங்கள் சம உரிமையும் விடுதலையும் கொடுப்பதில்லையா? என்று கேள்வி எழுப்பினார். இந்தக் கேள்வியை பாரதி சற்றும் எதிர்பார்க்கவில்லை. இந்தக் கேள்விக்குப் பிறகு பாரதி பெண்ணுரிமைக்கும் அதிகம் போராடினார். இந்தச் சந்திப்பு பாரதியின் வாழ்வில் முக்கியமான சந்திப்பாக அமைந்தது.

பாரதி தனது குருவாகவே நிவேதிதாவை ஏற்றுக் கொண்டார். இதன் வெளிப்பாடாக பாரதி தனது முதல் கவிதை தொகுப்பான "ஸ்வதேச கீதங்கள்" எனும் நூலை நிவேதிதாவுக்கு சமர்ப்பணம் செய்தார்.

நிவேதிதாவின் கடைசி மூச்சு இந்தியாவிலேயே பிரிந்தது. 1911 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 13 ஆம் திகதி மேற்கு வங்கத்தில் உள்ள டார்ஜிலிங் பகுதியில் உடல் நலக் குறைவால் காலமானார். அப்போது அவருக்கு (வயது-44). அரை நூற்றாண்டு வாழ்வைக் கூட பூர்த்தி செய்யாத அந்தப் பெண் மணி வாழ்ந்த வாழ்க்கை தான் பல ஆண்டுகள் கடந்தும் பசுமையாய் நினைவுகூர்ந்து திரும்பிப் பார்க்க வைக்கிறது.

**தொகுப்பு:**
**வி.பிரணவன்**
**யாழ்.கலட்டி.**

# புதிய லுக்கில் காமெடி கிங் அறந்தாங்கி நிஷா



சினிமா பிரபலங்களை தாண்டி தொலைக் காட்சி -பிரபலங்களுக்கு தனி ரசிகர்கள் கூட்டமே உள்ளது. அவர்களும் ரசிகர்களுடன் இணைப் பில் இருக்க வேண்டும் என்று தங்களது சமூக வலைத்தள பக்கத்தில் மிகவும் அக்டீவாக இருப்பார்கள். காமெடியில் பெண்கள் கலக்குவது கொஞ்சம் கடினமாகவே இரு ந்தது. ஆனால் தனது நகைச்சுவை உணர்வை ஒரு நிகழ்ச்சி மூலம் வெளிக் காட்டி இப்போது பெரிய நட்சத்திரமாக உயர்ந்து இருப்பவர் அறந்தாங்கி நிஷா. இவர் இப்போது ஒரு நிகழ்ச்சியின் படப் பிடிப்பில் உள்ளார். அதற்காக போடப்பட்ட மேக்கப்பில் புகைப்படம் எடுத்து இன்ஸ் டாவில் பதிவு செய்து ள்ளார்.

அதைப் பார்த்த ரசிகர்கள் எங்களது கறுப்பு நிற அறந்தா ங்கி நிஷா எங்கே. இது அவரே இல்லை என கமெண்ட் செய்து வரு கி ன்றனர்.

காரணம் மேக்கப் போட்டு வெள் ளையாக இருக் கிறார் நிஷா.



பழைய தோற்றத்தில் நிஷா

## பிரபலங்கள் வெளியிட்ட ஓணம் ஸ்பெஷல் புகைப்படங்கள்












# ஐஸ்வர்யா ராஜேஷின் 25 ஆவது படம்



'நீதானா அவன்' படம் மூலமாகத் தமிழ்த் திரையுலகில் அறிமுகமானவர், ஐஸ்வர்யா ராஜேஷ். 2015 இல் வெளியான 'காக்கா முட்டை படம் பெரிய திருப்புமுனையாக அமைந்தது. அதன்பிறகு ஒவ்வொரு வ்ருடம் ஏராளமான படங்களில் நடித்து வருகிறார். தற்போது, ஐஸ்வர்யா ராஜேஷின் 25 ஆவது படத்தை இயக்குநர் கார்த்திக் சுப்புராஜ் தயாரிக்கிறார். 'பூமிகா' என்று பெயரிடப்பட்டுள்ள இப் படத்தை ரதீந்திரன் இயக்குகிறார். ஒளிப்பதிவு - ரொபர்ட், இசை - ப்ரித்வி சந்திரசேகர். இதற்கு முன்பு அஸ் வின், ஐஸ்வர்யா ராஜேஷ் நடிப் பில் இது வேதாளம் சொல் லும் கதை என்கிற படத்தை ரதிந்திரன் இயக்கியுள்ளார். 'பூமிகா' படம் பற்றிய அதிகாரப்பூர்வ அறிவிப்பும் வெளியாகியுள்ளது.

# புதிய அவதாரம் எடுக்கும் கீர்த்தி





தென்னிந்திய திரையுல கில் முன்னணி நடிகையாக வலம்வரும் கீர்த்தி சுரேஷ், புதிய அவதாரம் எடுக்க உள் ளாராம். நடிகை மேனகா, தயாரிப்பாளர் சுரேஷ் ஆகி யோரின் மகளான கீர்த்தி சுரேஷ், "இது என்ன மாயம்" படத்தின் மூலம் தமிழில் அறிமுகமானார். குறுகிய காலத்திலேயே விஜய், சூர்யா, விக்ரம் ஆகியோரின் படங் களில் நடித்ததன் மூலம் தமிழ் சினிமாவின் முன் னணி கதாநாயகியாக வளர் ந்தார்.



# பிரபாஸிக்கு வில்லனாகும் பிரபல பொலிவுட் நடிகர்



ஓம்ராவத் இயக்கத்தில் பிரமாண்டமாக உருவாகும் ஆதிபுருஷ் படத்தில் பிரபாஸிக்கு வில்லனாக பிரபல நடிகர் நடிக்க உள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது.

பாகுபலியில் பிரபலமான பிரபாஸ் அடுத்து ஆதிபுருஷ் என்ற புதிய படத்தில் நடிக்க உள்ள தாக அறிவித்துள்ளனர். இது அவருக்கு 21 ஆவது படம். இந்த படம் 3டி தொழில் நுட்பத்தில் உருவாகிறது.

இந்தி, தெலுங்கு மொழிகளில் தயாராகும் இந்தப் படத்தை தமிழ், மலையாளம், கன்னடம் மொழி களிலும் மொழிபெயர்ப்புச் செய்து வெளியிடுகின்றனர்.

படத்தின் போஸ்டர் மூலம் ராமாயணத்தின் ஒரு பகுதியை படமாக்குவது உறுதியானது. ராமர் கதாபாத்திரத்தில் பிரபாஸ் நடிக்கி றார். சுமார் ரூ.500 கோடி பட்ஜெட் டில் உருவாகும் இப்படத்தை ஓம்ராவத் இயக்க உள் ளார்.



இப் படத் தில் மற்றொரு முக்கியமான வேடம் என்றால், அது ராவணன் வேடம் தான். இந்த கதாபா த்திரத்தில் இந்தி நடிகர் நடிப்பார் என கூறப்பட்டது.

இந் நிலையில், ராவணனாக நடிக்கப் போவது யார் என்பது குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பை படக்குழு வெளியிட்டுள்ளனர். அதன்படி, பிரபல பாலிவுட் நடிகர் சையிப் அலிகான் ஆதிபுருஷ் படத்தில் ராவணனாக நடிக்க உள்ளார்.

# சாதனை நாயகன் அன்டர்சன்

**பிட்ச்சில் நின்று முறைக்கும், வசைபாடும் பவுலர்கள் என்னை எப்போதுமே பயமுறுத்தியதில்லை. அதீத திறமையும் கச்சிதமான பிட்னஸும் தோல்வியின் விளிம்பிலும் வெல்லப் போராடும் ஆக்ரோஷமும் உடைய பவுலர்கள் மட்டுமே என்னை பயம் கொள்ளச் செய்வார்கள். அப்படியானவர்களைத்தான் நான் மதிக்கிறேன் என்பார் டெஸ்ட் கிரிக்கெட்டின் தலைசிறந்த பட்ஸ் மன்களுள் ஒருவரான ராகுல் டிராவிட். இது அப்படியே கடந்த வாரம் தன் 600 ஆவது டெஸ்ட் விக்கெட்டை வீழ்த்திய ஜேம்ஸ் அன்டர்சனுக்கும் பொருந்தும்.**

கிரிக்கெட்டைப் பொறுத்தவரை கடந்த முப்பதாண்டுகளில் ஆசிய, அவுஸ்திரேலிய வீரர்களின் தாக்கமே அதிகம். இந்த வட்டத்தின் வெளியிலிருக்கும் வீரர் இத்தனையையும் தாண்டி தனக்கான இடத்தை அடைவது, கற்சுவரின் விரிசல்களுக்கிடையே முளைத்தெழும் ஆல மரம் போலத்தான். இதனால்தான் ஜிம்மி என்கிற ஜேம்ஸ் அன்டர்சன் ஜெண்டில் மேன் கேமின் மிகச்சிறந்த பவுலராகக் கொண்டாடப்படுகிறார்.

2002 இல் இங்கிலாந்து அணியின் ஒருநாள் தொடருக்கான அணியில் இடம்பெற்றபோது அன்டர்சனுக்கு வயது 20 தான். அதற்கு முன்னால் வெறும் ஐந்தே ஐந்து முதல்தரப் போட்டிகளில் தான் ஆடியிருந்தார். தொடக்கக் காலத்தில் அவரின் பவுலிங் ஆக்ஷனைப் பார்த்த இங்கிலாந்து ஜாம்பவான் பாப் வில்லிஸ், 'இந்தப் பையன் அஞ்சாறு வருடம் தாங்கினாலே பெரிது' என ஜோசியம் சொன்னார். சொன்னதுபோலவே காயங்கள் ஜிம்மியைப் படுத்தியெடுத்தன. போதாக்குறைக்கு அன்றைய இங்கிலாந்து அணியில் ஹார்மிசன், ஹோகார்ட், சைமன் ஜோன்ஸ், ஃப்ளின்டாப் எனப் பெயர்போன பவுலர்கள், ஓல்ரவுண்டர்கள் இருந்தார்கள். இவர்களுக்கு மத்தியில் தனக்கான வெளிச்சம் தேடித் தேடி ஓய்ந்துபோனார் அன்டர்சன்.

பட்ஸ்மன்கள் வலைப்பயிற்சியில் ஈடுபடும்போது இரண்டாம் நிலை பவுலர்கள் அவர்களுக்குப் பந்துவீசுவது வழக்கம். ஒரு கட்டத்தில் அன்டர்சன் இதைத்தான் செய்து கொண்டிருந்தார். 2008 இல் இங்கிலாந்துப் பயிற்சியாளராக இருந்த பீட்டர் மூர்ஸ் நியூசிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் ஹார்மிசனையும் ஹோகார்டையும் தவிர்த்துவிட்டு அன்டர்சனிடம் பந்தைக் கொடுத்தார். தொடர் காயங்கள், அதிக அவரேஜ் என சுமாரான பவுலராகத்தான் அவரை அது நாள்வரை உலகம் பார்த்து வந்தது. இதனால் மூர்ஸின் இந்த முடிவும் மிகக் கடுமையாக விமர்சிக்கப்பட்டது. ஆனால் அந்த டெஸ்ட்டில் 7 விக்கெட்கள் வீழ்த்தி வெற்றிக்குக் காரணமாக மாறினார் அன்டர்சன்; அதன்பின் இங்கிலாந்து பெற்ற பல வெற்றிகளுக்கும்! கிரிக்கெட், வேகப்பந்து வீச்சாளர்களுக்கு சாதகமானது என்கிற பிம்பம் எப்போதும் உண்டு.

ஆனால் உண்மையில் கிரிக்கெட் எப்போதும் சுழற்பந்து வீச்சாளர்கள் வசம் தான். ரன் அப், பவுலிங் ஆக்ஷன், பீல்டிங் எனப் பல காரணங்களால் வேகப்பந்துவீச்சாளர்கள் தொடர் காயங்களுக்கு உள்ளாவார்கள். ஒரு சின்னக் காயம், அவர்களை மாதக்கணக்கில் உட்கார வைத்துவிடும். அந்த நேரத்தில் அவர் இடத்திற்கு இன்னொரு பவுலர் வந்து விடுவார். இதைக் கணக்கில் கொண்டு பார்த்தால் 600 விக்கெட்டுகள் எடுத்த முதல் வேகப்பந்து வீச்சாளர் என்கிற ஜிம்மியின் சாதனை அவ்வளவு எளிதில்லை என்பது புரியும்.


இந்த 17 ஆண்டுகளில் வலி, தோல்விகள் ஆகியவற்றைத் தாண்டி அன்டர்சன் தியாகம் செய்தவையும் அதிகம். நினைத்திருந்தால் பணம், புகழ் என இப்போதிருப்பதைவிட இருமடங்கு சம்பாதித்திருக்க முடியும். ஆனால், கிரிக்கெட் வீரராக ஃபார்மின் உச்சத்தில் இருந்த நேரத்தில், இருபது-20 உள்ளிட்ட பிற லீக்குகளில் பங்குபெறப் போவதில்லை என முடிவெடுத்தார் அன்டர்சன். உலகின் கடைக்கோடி சாமானியன் முதல் முதல் நிலை வீரர்கள்வரை ஆசையை விதைக்கும் ஐ.பி.எல். பக்கம் இதுவரை அவர் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. இங்கிலாந்து அணிக்காக ஒருநாள் போட்டிகள், அதைவிட முக்கியமாக டெஸ்ட் போட்டிகள் எனத் தன் பாதையைப் பத்தாண்டுகளுக்கு முன்பாகவே தெளிவாக வரைந்து கொண்டார்.

எப்படி நிகழ்ந்தது இந்த 600 விக்கெட் மஜிக்? இரண்டு முக்கிய காரணங்கள். முதலாவது அவரின் விரல் வித்தை. 'அன்டர்சனின் மணிக்கட்டும் விரல்களும் செய்யும் மஜிக்கை எந்த பட்ஸ்மனாலும் கணிக்கவே முடியாது.' நான் எப்போதும் பவுலர்களின் மணிக்கட்டை கவனித்து ஆடுவேன். ஆனால் அன்டர்சனிடம் பெரும்பாலும் அது பலிக்காது' எனச் சொன்னது ஓல்டைம் டாப் பட்ஸ்மனான சச்சின். இரண்டாவது காரணம் பிட்னெஸ். 38 வயதிலும் ரன் அப் தூரத்தைக் குறைக்காமல் வேகத்தைக் குறைக்காமல் நேற்று அறிமுகமான வீரரைப் போல அர்ப்பணிப்போடு விளையாடும் அந்த முனைப்பு.

இப்போது அதிக விக்கெட்டுகள் எடுத்தவர்கள் பட்டியலில் முறையே முரளிதரன், வார்னே, கும்ளே ஆகியோருக்கு அடுத்து நான்காவது இடத்திலிருக்கிறார் ஜிம்மி. முதல் மூவரும் ஸ்பின்னர்கள். முன்பே சொன்னதுபோல ஸ்பின்னர்களுக்கு இணையான வாய்ப்பு வேகப்பந்து வீச்சாளர்களுக்குக் கிடைக்காது. ஒரே நேரத்தில் அறிமுகமான வார்னே, மெக்ராத் இருவரின் புள்ளிவிபரங்கள் இதற்கு சாட்சி. ஆனாலும் கிட்டத்தட்ட அந்த மூவருக்கு சமமான எகானமியில், ஹோம்ஃஅவே சராசரியில் மிளிர்கிறார் அன்டர்சன். அனில் கும்ளேவின் இடத்தைப் பிடிக்க இவருக்கு இன்னும் சில இன்னிங்ஸ்களே தேவை.

ஜிம்மியின் இந்த சாதனையை முறியடிக்க ஒரே ஒருவரைத்தவிர வேறு யாராலும் இனி முடியாது என்பதே நிதர்சனம். ஸ்டுவர்ட் ப்ராட், 514 விக்கெட்களோடு ஏழாவது இடத்திலிருப்பவர் அன்டர்சனை நெருங்க இன்னும் இரண்டு ஆண்டுகளாவது ஆகும். ஆனால் அன்டர்சனோ, 'அதற்குள் நான் 700 ஐத் தொட்டு விடுவேன்' எனக் கூறியிருக்கிறார். அதில் பாதி நடந்தால் கூட அநேகமாய் ப்ராடுக்கும் வாய்ப்பிருக்காது.

ஆக, எதிரணியை மிரட்டும் அக்ரம், மெக்ராத் போன்ற பாஸ்ட் பவுலர்களுக்கு நிகரான, சுழலில் விழச்செய்யும் மாயாஜால முரளி, வார்னேவுக்குச் சமமான, யாருக்கும் அசராமல் தங்கள் பட்டால் பேசும் சச்சின், பொண்டிங்கிற்கு இணையான இடம் வரலாற்றில் அன்டர்சனுக்கும் இருக்கிறதா? இதற்கு அன்டர்சன் மொழியிலேயே பதில் சொல்ல வேண்டுமென்றால்...'வை நொட்?'




## 600


டெஸ்ட் கிரிக்கெட்டில் 600 விக்கெட்டுகள் வீழ்த்தி வேகப்பந்து வீச்சாளர்களில் முதலாமானவர் என்ற பெருமையை 38 வயதான இங்கிலாந்து வீரர் அன்டர்சன் பெற்றுள்ளார்.

பாகிஸ்தான் - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான மூன்றாவது டெஸ்ட் தொடர் சவுதாம்டனில் நடைபெற்றது. இந்தப் போட்டி சமநிலையில் முடிவடைந்ததை தொடர்ந்து, ஒன்றுக்கு பூஜ்ஜியம் என்ற புள்ளிக் கணக்கில் இங்கிலாந்து அணி தொடரை கைப்பற்றியது.

இந்தப் போட்டியில், பாகிஸ்தான் அணியின் அசார் அலியின் விக்கெட்டை எடுத்ததன் மூலம், 600 விக்கெட்டுகளை குவித்த முதல் வேகப்பந்து வீச்சாளர் என்ற மைல்கல்லை அன்டர்சன் அடைந்துள்ளார்.

இந்தப் பட்டியலில், முத்தையா முரளிதரன், ஷேன்வார்ன் மற்றும் அனில் கும்ளே ஆகிய ஸ்பின் பவுலர்கள் மட்டுமே இத்தனை காலம் இடம்பிடித்துள்ளனர்.

# தனிமையோடு வாழப்பழகுங்கள்!



இன்றைய ஆண்ட்ராய்டு யுகத்தில் நமக்கு ஏற்படும் தனிமை உணர்வு தவிர்க்க இயலாதது. எனினும், 'தனிமை' பற்றிய நமது பார்வையை மாற்றுவதன் மூலம் அதை இனிமையாக்கலாம் என்கிறார்கள் உளவியல் ஆலோசகர்கள். தனிமை என்றாலே கொடுமை என்ற உருவகத்திலிருந்து வெளியேற உளவியல் ஆலோசகர் வசந்தி பாபு தரும் வழிகாட்டுதல்கள் இதோ உங்களுக்காக...

### தனிமை ஏன் ஏற்படுகிறது...?

இந்தக் கேள்விக்கான பதில் ஒவ்வொருவருக்கும் வேறுபடும். சிலர் தன் குடும்பத்தினர், நண்பர்களை விட்டுப் பிரிந்திருப்பதால் தனிமையை உணரலாம். சிலர் தன் காதல் இணையைப் பிரிந்திருப்பதால்... சிலருக்கோ அருகில் அனைவரும் இருந்தும்கூட தனிமை உணர்வு ஏற்படும். இது தனிப்பட்ட நபரின் மனநிலையைப் பொறுத்தது.

சென்ற தலைமுறையில் 'தனிமை' என்ற சொல்லுக்கே இடமிருந்ததில்லை. பெரும்பாலும் கூட்டுக்குடும்பம். எந்தவொரு சுகதுக்க நிகழ்ச்சியாக இருந்தாலும் உறவினர்கள் அனைவரும்கூடி ஒருவார காலமாவது ஒன்றாக இருப்பார்கள். வேலைக்கோ, படிக்கவோ வெளியே சென்றாலும் எளிதில் ஒரு நட்பு வட்டம் உருவாகி விடும். இவற்றையெல்லாம் தாண்டி ஒருவரின் மூளைக்குள் தனிமை பற்றிய எண்ணங்கள் புகுவது அரிதாக இருந்தது. ஆனால், இன்றைய காலகட்டத்தில் வேலை, படிப்பு இன்னும் பிற காரணங்களுக்காக இளம்வயதிலேயே குடும்பத்தினரைப் பிரிந்திருக்க நேரிடுகிறது. கூட்டுக்குடும்ப வாழ்க்கை முறையும் அருகி வருகிறது.

முகநூல் நண்பர்களைக் காட்டிலும் முகம்பார்த்துப் பேசும் நண்பர்களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது. யாருமில்லாத பட்சத்தில் தனிமை வந்து கவ்விக்கொள்கிறது. இந்தக் காரணங்களுக்கெல்லாம் யாரையும் குறைகூற முடியாது. எல்லாம் காலத்தின் கோலம். காலத்துகேற்ப நம் வாழ்க்கை முறையை மாற்றிக் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

### தனிமை பற்றிய நமது எண்ணம்...

நம்மில் பெரும்பாலானோருக்குத் தனிமை என்பது பயங்கரமான, கொடுமையான விடயமாகவே இருக்கிறது. உண்மையில் தனிமை அழகான ஒன்று. நீங்கள் தனிமையில் இருக்கும்போது மற்றவர்களுக்காகப் போலியாக புன்னகை செய்யத் தேவையில்லை. மற்றவர்களின் தேவையற்ற விமர்சனங்களைக் கருத்தில் கொள்ள அவசியமில்லை. நீங்கள் நீங்களாகவே இருக்கலாம். உங்களைப் பற்றி யோசிக்கலாம். எந்தத் தொந்தரவும் இன்றி பிடித்த புத்தகத்தைப் படிக்கலாம். படம் பார்க்கலாம். இஷ்டப்படி சமைக்கலாம். பிடித்த உடையை அணியலாம். மற்றவர்கள் என்ன நினைப்பார்களோ என்ற எண்ணத்தைத் தவிர்க்கலாம். இன்னும் இப்படி எத்தனையோ வாய்ப்புகள். ஆனால், தனிமையைக் கொண்டாடத் தெரியாத நாமோ, தனிமை பற்றிய சோகப் பாடல் வரிகளை வாட்ஸ்அப் ஸ்டேட்டஸில் அப்லோட் செய்து கொண்டிருக்கிறோம்.

### தனிமையை அதிகமாக உணர்வதால் வரும் பிரச்சினைகள்...

ஒருவர் தனிமையைத் துக்கமான ஒன்றாக நினைத்து அதிலேயே உழன்று கொண்டிருந்தால் அவர் மனம் மற்றும் உடல் சார்ந்து அதிகம் பாதிக்கப்படுகிறார். தேவையில்லாத மன அழுத்தம், மன உளைச்சல், இறந்த காலத்தை நினைத்து துக்கம், எதிர்காலத்தைப் பற்றிய பயம், தலைவலி, எரிச்சல், இனம்புரியாத குற்றவுணர்வு எல்லாம் இதனால் ஏற்படலாம். மனநிலை சீராக இல்லாதபோது அதனால் உடல் நிலையும் பாதிக்கப்படுகிறது. தனிமையில் அதீத மன உளைச்சலுக்கு ஆளாகும் சிலர் தற்கொலை எண்ணத்துக்குக்கூட தூண்டப்படுகிறார்கள்.

### தனிமையை இனிமையாக்குங்கள்!

உங்களுக்குக்கிடைக்கும் தனிமையை சாபமாகக் கருதாமல் உங்களுக்குள் இருக்கும் உங்களைக் கண்டறியக் கிடைத்திருக்கும் வரமாகக் கருதுங்கள். தனிமையில் தேவையில்லாத சிந்தனைகளில் மூழ்குவதற்குப் பதிலாக உங்களுக்குப் பிடித்தவர்களுடன் தொலைபேசியில் கலந்துரையாடலாம்.

தோட்டமிடுங்கள். அங்குள்ள மரம், செடி, கொடிகளுடன் மனம்விட்டுப் பேசுங்கள். உங்களின் வார்த்தைகளுக்கு அவை காற்றில் அசைந்தாடி செவி கொடுக்கும் அழகை ரசியுங்கள். வீட்டில் நீங்கள் மட்டும் இருப்பது ஒருவித அச்சத்தை ஏற்படுத்தினால் நாய், பூனை போன்ற ஏதாவது செல்லப்பிராணி வளர்க்கலாம். மனம் சோர்வடையும் தருணங்களில் அவற்றைக் கொஞ்சி மகிழ்வது நல்ல நிவாரணியாக இருக்கும்.

உங்களுக்குப் பிடித்த இசையமைப்பாளரின் பாடலைக் கேட்டுக்கொண்டே புத்தகம் படியுங்கள். மனத்தில் தோன்றும் காட்சிகளுக்கு வார்த்தைகளால் வடிவம் கொடுங்கள். தனிமையில் உங்களுக்குப் பிடித்தவற்றை மட்டும் செய்யுங்கள். கண்டிப்பாகத் தனிமையிலும் இனிமை காணலாம்!


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2107

### துஷாந்த்

சாவியை தொலைத்தவன்
தண்டிப்பதும் கண்டிப்பதும் பூட்டைத்தான்...



### லாவண்யா



சிலமுறை பிடித்தவரை மகிழ்விக்க...
பலமுறை தன்னையே மறைத்து
வைத்திருக்க வேண்டியது அவசியம் ஆகும்...

### காண்டீபன்



இங்கு எழுதலாமே "உணவுகளை வீணாக்காதீர்!" என்று.

### பூமிகா



மரியாதை வயதை பொறுத்து வருவது இல்லை...
அவரின் நல்ல மனதை பொறுத்து வருகிறது...

### பிரதீபா

எல்லா செருப்புக்கும் பொருத்தமான கால்கள் கிடைப்பதில்லை.



### பார்த்தீபன்

வயது வித்தியாசமின்றி சகலரையும் வசீகரிக்கக் கூடியது...தூங்கும் குழந்தையின் இதழோரப் புன்னகை.



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்


# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 220

## ஆரோக்கியம் தேடி ... கேள்வி பதில்கள்

**எனக்கு நீரிழிவு நோய் இருக்கின்றது. தற்போது கட்டுப்பாட்டில் உள்ளது. ஆனால் உடல்மெலிவடைந்து உள்ளதால் தேனுக்குள் பேரீச்சம்பழம் ஊறவைத்து காலையில் சாப்பிட்டால் மெலிந்த உடல் குண்டாகும் என இணையத் தளத்தில் படித்துள்ளேன். அப்படி சாப்பிடலாமா? சாப்பிட்டால் மீண்டும் உடல் பழைய நிலைக்குவருமா?**

நீரிழிவு நோய் உள்ளவர்களிற்கு தேனோ, பேரிச்சம்பழமோ ஒரு நல்ல உணவாகாது. இவை குருதியில் வெல்லத்தின் அளவை கூட்டவல்லன. எனவே இவற்றை தவிர்த்து விடுவது நல்லது. உங்கள் உடல் நிறையை அதிகரிப்பதற்கு நீங்கள் இயற்கையான ஆரோக்கியமான உணவு வகைகளான பால்/ஆடை நீக்கிய பால், முட்டை, பருப்பு வகை, தீட்டாத அரிசி, அரிசி மா, உழுந்து போன்ற உணவு வகைகள், மீன், கோழி இறைச்சி, இறால் போன்ற இயற்கையான ஆரோக்கிய உணவு வகைகளயும் கூடியளவு எடுப்பதன் மூலம் உங்கள் நிறையை அதிகரித்து ஆரோக்கியமாக வாழ முடியும்.




**எனக்கு உடம்பு முழுவதும் அடிக்கடி கடித்து, தடித்து பின் தானாக மறைகின்றது. தோலில் நிரந்தரமான எந்த மாற்றமும் இல்லை. இந்த நிலைமை ஆறு மாதங்களுக்கு மேலாக நீடித்து வருகின்றது. இந்த நிலைமைக்கு காரணம் என்ன? நான்என்ன செய்ய வேண்டும்.**



இந் நிலைமையானது ஒவ்வாமை காரணமாக ஏற்படுகின்றது. இவ் ஒவ்வாமை நிலைமையானது சில வகை உணவுகள், சுற்றாடலில் காணப்படுகின்ற ஒவ்வாமையை ஏற்படுத்துகின்ற சில பதார்த்தங்களைத் தொடுவதன் மூலமும், சுவாசிப்பதன் மூலமும் இந்நிலைமை ஏற்படலாம். எனவே இந்நிலைமையைத் தோற்றுவிக்கும் காரணிகளைக் கண்டறிந்து அவற்றை தவிர்க்க வேண்டும். குறிப்பிட்ட சிலரில் இந்நிலைமையானது எந்தவிதமான காரணங்களும் கண்டறியப்படாமலும் ஏற்படலாம். இதனை நிவர்த்தி செய்வதற்காக ஒவ்வாமையைத் தடுக்கும் சில மாத்திரைகள் பாவிக்க வேண்டி ஏற்படலாம். சிலவேளைகளில் சில நோய்களின் அறிகுறிகளாகக் கூட மேற்கூறிய நிலைமை காணப்படலாம்.

உங்களுக்கு இந்த நிலைமையானது 6 மாதங்களுக்கு மேலாக நீடிப்பதால் வைத்தியர் ஒருவரை நாடி சில சோதனைகளும், அறிவுரைகளும் சிகிச்சை முறைகளும் பெற்றுக் கொள்வது நல்லது.

**எனக்கு வயது 60. சிறிது காலமாக எனக்கு முதுகு வலியும், முழங்கால் மூட்டு வலியுமாக உள்ளது. கல்சியம் மாத்திரைகள் அல்லது கல்சியம் உள்ள பால்மாவகைகள் ஏதாவது பாவிக்கலாமா?**

கல்சியமானது உடலுக்கு மிகவும் அத்தியாவசியமான கனியுப்பாகும். இது என்புகளின் உருவாக்கம், தசைச் சுருக்கம், நரம்புகணத்தாக்கம், ஓமோன் சுரப்பு, நரம்பு, மூளை போன்றவற்றின் தொழிற்பாடுகளுக்கு அத்தியாவசியமானதாக உள்ளது.

யாழ்ப்பாணத்தை பொறுத்தமட்டில் நீரில் அதிகளவு கல்சியம் காணப்படுகின்றது. எனவே அன்றாடம் உள்ளெடுக்கும் நீரின் மூலமாகவும், உணவின் மூலமாகவும் உடலுக்குப் போதுமான கல்சியம் கிடைக்கின்றது.

பால், பால் உற்பத்திப் பொருட்களான யோக்கட், சீஸ், மீன், முட்டை, மரக்கறி வகை, தானியவகை, பழச்சாறு என்பவற்றில் போதியளவு கல்சியம் காணப்படுகின்றது. எனவே கல்சியம் கூடிய அளவுகளில் உள்ள பால்மா வகைகளையும், மாத்திரைகளையும் பாவிக்க வேண்டிய அவசியம் பொதுவாக இல்லை.

நாளொன்றுக்கு உடலுக்குச் சராசரியாகத் தேவையான கல்சியத்தின் அளவு **1000 – 1300mg** ஆகும். சாதாரணமாகக் குருதியில் உள்ள கல்சியத்தின் அளவு **8.5 – 10.2mg/dl** ஆகும். கல்சியம் அதிகளவுள்ள பால்மா வகைகளையோ அல்லது மாத்திரைகளையோ உள்ளெடுக்கும் போது கல்சியமானது இரத்தக்குழாய்கள், மென் இழையங்கள் போன்றவற்றில் படிவடைகின்ற தன்மை அதிகரிக்கின்றது.

இருதயக் குருதிக் குழாய்களில் படிவதன் மூலம் மாரடைப்புப் போன்ற ஆபத்தான நிலைகளும், சிறுநீரகங்களில் தொடர்ந்து படிவதன் மூலம் சிறுநீரகக்கற்கள் உருவாகின்ற நிலையும் ஏற்படுகின்றது.

கல்சியம் மாத்திரைகள் வேறு சில மருந்துகளுடன் இடைத் தாக்கத்தில் ஈடுபடுவதன் மூலம் அவற்றின் செயற்றிறனைப் பாதிக்கின்றது. அதுபோல் சில வகை மருந்துகளின் அகத்துறிஞ்சலையும் பாதிக்கின்றது.

சில நோய்களைப் பொறுத்தமட்டில் (உதாரணம்:- **Osteoporosis**) மேலதிகக் கல்சியமானது தேவைப்படுகின்றது. எனவே கல்சியம் மாத்திரைகளை மருத்துவர்களின் ஆலோசனையின்றிப் பாவிப்பதைத் தவிர்த்துக் கொள்வது நன்று.

**நாளாந்தம் பசுப்பால் அருந்துவதால் சளி பிடிக்கிறது. இதற்கு என்ன செய்யலாம்?**

சிலருக்கு பால் குடிக்கும் போது சளி பிடிப்பது போன்ற ஒரு தோற்றப்பாடு ஏற்படுகிறது. இதற்கு காரணம் பசுப்பாலிற்கு அவர்களில் ஏற்படும் ஒரு ஒவ்வாமை வகையான வெளிப்பாடாகும். பால் குடிக்கும் போது சளி பிடிக்கும் தோற்றப்பாடு ஒரு பிரச்சினையாக அமைந்தால் பசுப்பால் குடிப்பதை நிறுத்திக் கொள்வது நல்லது. எனவே நீங்கள் பால் குடிப்பதை நிறுத்தி விட்டு பால்மா வகைகள் அல்லது ஆட்டுப்பாலைப் பாவித்து பாருங்கள். அதனால் உங்களிற்கு ஒரு பிரச்சினையும் ஏற்படாவிடின் தொடர்ந்து பாவிக்கலாம். உங்களிற்கு எல்லா வகையான பால், பால்மா, பால் சேர்த்த உணவு வகைகள் அனைத்திற்கும் ஒவ்வாமை வகையான தாக்கம் ஏற்படின் பால் உற்பத்தி பொருட்களைப் பாவனையை முற்றிலும் நிறுத்தி விட்டு வேறு வகையான புரதங்களை, சோயா, பால், முட்டை, மீன் என்பவற்றை சேர்த்துக் கொள்ளலாம்.

**கலோரிப் பெறுமானம் என்பதால் குறிப்பிடப்படுவது யாது? சாதாரண வீட்டு வேலைகள் மட்டும் மேற்கொள்ளும், உடற்பயிற்சி விஷேட வேலைகள் ஏதுவும் மேற்கொள்ளாத எந்தவித நோய் நொடியுமற்ற, உயரத்திற்கேற்ற நிறை கொண்ட 35 வயதுடைய சுகதேகிப் பெண்மணிக்கு ஒருநாளுக்குத் தேவைப்படும் கலோரிப் பெறுமானம் யாது?**

கலோரி என்பது சக்தியை அளவிட உதவும் ஒரு அலகாகும். ஒருவருடைய சக்தித் தேவையும் கலோரி அலகில் அளவிடப்படுகின்றது. சுகதேகி ஒருவருக்கு நாளாந்தம் தேவைப்படுகின்ற கலோரியானது பின்வருமாறு. வளர்ந்த சுகதேகி ஆண் ஒருவருக்கு **–2500kcal.** வளர்ந்த சுகதேக பெண் ஒருவருக்கு **-1900kcal.** இதைவிட இக் கலோரிப் பெறுமானமானது அவரது உடற்திணிவு, உயரம், நாளாந்த தொழிற்பாடு போன்றவற்றிலும் தங்கியிருக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்.

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்